புத்தூர் பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தியில் மழவராயரின் பங்கு

ஆக்கியோன்:

செ.விசுவலிங்கம் B. A. Dip in Edu.

ஆசிரிய ஆலோசகர் (யாழ். கல்வி வலயம்)

மா/புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி பழையமாணவர் சங்கவெளியீடு

புத்தூர் பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தியில்
மழவராயரின் பங்கு

ஆக்கியோன்:-

செ.விசுவலிங்கம் **B. A. Dip in Edu.**

ஆசிரிய ஆலோசகர் (யாழ். கல்வி வலயம்)

ஆசிச் செய்தி

சைவமும் தமிழும் வளரும் புத்தூர் மண்ணிலே மும்மணிகளாக மூன்றுதொண்டுகளை நிறுவியவர் வள்ளல் மழவராயர் கந்தையா அவர்கள் மழவராயர் கந்தையா நிறுவிய மூன்று தர்த்தாபனங்கள் புத்தூர் சிவன் கோவிலும் சோமஸ்கந்தக் கல்லூரியும், சத்திரமுமாகும். ஆன்ம ஈடேற்றத்தை வழங்கும் ஆலயமும்வயிற்றுப் பசியைத் தீர்க்கும்சத்திரமும், அறிவுப்பசியைத் தீர்க்கும் பாடசாலையும் வள்ளல் அவர்களால் உருவாக்கப்பட்டு ஊரவர் யாவருக்கும் நற்பலன்கள் கொடுக்கின்றன.

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி சைவத்தமிழ் பண்பாட்டுடன் இணைந்த வகையில் கல்விப்பணியை வளர்த்து வரும்பாங்கு பெருமைக் குரியது. இந்தப் பாடசாலையால் வளர்ந்தவர்கள் பலர் பல்வேறு நாடுகளில் பல்வேறு உயர்நிலைகளில் இருப்பது பெருமைக்குரிய விடயமாகும்.

"புத்தூர் பிரதேசத்தில்கல்வி அபிவிருத்தியில் மழவராயரின் பங்கு" என்ற பாரம்பரிய பெருமைமிக்க இப்பாடசாலை பற்றிய வரலாற்றை இதன் தாபகர் மழவராயர் கந்தையா பற்றிய வரலாற்றை பாடசாலை ஆரம்பிக்க முன்னும் பின்னும் உள்ள சமூக பொருளாதார நிலைகளை ஆசிரியர் விசுவலிங்கம் அவர்கள் சிறப்பாக ஆய்ந்து வெளியிட்டுள்ளமை எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.

பலருக்கும் நற்பயன் தரத்தக்க அரிய தகவல் அடங்கிய இந்நூலுக்கும் அதன் ஆசிரியர் செல்லத்துரை விசுவலிங்கத்திற்கும் எல்லாம் வல்ல விசாலாட்சி அம்பிகா சமேதவிஸ்வநாதப் பெருமான் திருவருள் கிட்டப்பிரார்திக்கின்றோம்.

சிவஸ்ரீசாமிசோமசுந்தரக் குருக்கள்

போற்றி போற்றி

மழவரின் மைந்தன் செய்த மாண்புறு பணியால்
கிழவியம்மனாய் அருளும் ஆலயம் விசாலமாகி
அளவிலாப் பெருமைமிக்க அப்பனின் தவமேயாகி
உளமெலாம் நிறையப் புத்தூர் பொலிவுற அமர்ந்தாய் போற்றி

செந்தமிழ் மணமும் சைவத்திருமுறை மணமும் வீச
சுந்தரப் புதுவையூரில் சோமஸ்கந்தனாய் அருளும் தேவே
வந்துள அடியவர்க்கு அன்னம் நல்கும் சத்திரத்து ஈசா
முந்தியவினைகளொல்லாம் வேரற முனிவோய்போற்றி

விஸ்வம்

புத்தூர் சிவன்
கும்பாபிஷேகமலர்
1989.

கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் அவர்களின் வாழ்த்துச்செய்தி

யா/ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரித் தாபகர் மழவராயரின் கல்வித் தானத்தினால் பல வைத்தியர்கள் பொறியியலாளர்கள் கல்வியாளர்கள், சமூக முன்னோடிகள் அறிவியலாளர்கள் எனப் பலரையும் எமது சமூகத்திற்கு தந்தது என்றால் மிகையாகாது. முதல் இலவசக்கல்வியுடன் மாணவர்களுக்கு உணவு உடை என்பனவும் அக்காலத்தில் வழங்கப்பட்டு யாழ்மாவட்டத்தின் வேறுகிராமங்களைச் சார்ந்தவர்கட்கும் வாழ்வளித்த கலாலயமாகத் திகழ்கின்றது. தாபகர் அமரர் ஆனாலும் அவர் அப் பாடசாலைக்கு எழுதிவைத்த சொத்துக்கள் இன்று வரை இக்கல்லூரிக்கு நிதியுதவி வழங்கி வருகின்றது.

சைவமும் தமிழும் நிலைத்தோங்க உதவிய பாடசாலைகளில் சோமஸ்கந்தாவும் முதன்மையிடத்தில் உள்ளது. அக்கல்லூரியின் பழைய மாணவரான திரு செ.விசுவலிங்கம் கல்லூரி வரலாறு தாபகர் வரலாறு முன்பும் பின்பும் இருந்த சமூக பொருளாதார நிலைகள் பற்றி தனது கல்வி டிப்ளோமா பட்டப்படிப்பு நெறியைப் பூர்த்தி செய்வதற்காக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 1983ல் எழுதிய ஆய்வுக் கட்டுரையை தற்போதைய மாற்றங்களோடு புதிய நூலாக வெளியிடுகிறார். யா/ஸ்ரீசோமஸ்கந்தாவில் ஆசிரியராகப் பணியாற்றிய அவர் தனது சேவையின் இறுதிப் பத்தாண்டுகள் யாழ் வலயக்கல்வி அலுவலகத்தில் தமிழ் பாடத்திற்கான நல்ல வள ஆளனியாகவும் சிறப்புடன் செயற்பட்டார். ஆசிரிய ஆலோசகர் கழக தலைவராகவும் இறுதியில் செயற்பட்டு தனது ஆளுமைகளை வெளிப்படுத்தினார். அவரது நூலுக்கு எனது நல்லாசிகளை தெரிவிப்பதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

வே. தி. செல்வரத்தினம் பிரதிச்செயலாளர்
கல்வி அமைச்சு வடமாகாணம்

நீடு வாழி

மெலிந்து மேன்மையின்றி அறியாமை சூழ்ந்து நின்ற
வலிகிழக்கு மாணவர்க்கு வரமாய்க் கிடைத்த வள்ளலே!
கலிகாலம் சிறக்க வந்த கலியுகக் கந்தைய
வலி புத்தூர் மீதுதித்த சோமஸ்கந்தனே நீடுவாழி!

சீராரும் சிறுப்பட்டியூர் செல்வர் மழவர் கந்தையா
ஏராரும் கலை விளங்க ஏற்றமுடன் அமைத்திட்ட
பாராரும் புகழ்விளங்கு ஸ்ரீசோமஸ்கந்தா
நீராரும் நிலவுலகும் உள்ளளவும் நீடு வாழி!

மண்ணில் நல்ல வண்ணம் வாழ வைத்த கல்லாரி வாழ்க
எண்மதிக்கு ஈழமக்கள்யாவரும் மதிக்க வாழ்க
வண்ண மலர்களாய் மாணவனை உயர்த்தி வைத்த
கண்கண்ட தெய்வமாம் கந்தையா புகழ் நீடு வாழி!

விஸ்வம்

பாடசாலை அதிபர் திரு.இ.இராஜமகேந்திரன் அவர்களின் செய்தி

புத்தூர் கல்விப் பாரம்பரியத்தை ஆரம்பத்திலிருந்து இன்று வரை பாதுகாத்து வரும் பாடசாலையாக விளங்குகின்ற ஸ்ரீ சோமாஸ் கந்தக் கல்லூரியானது அமரர் மழவராயர் கந்தையா அவர்களால் தாபிக்கப்பெற்றது, அமரர் தன் ஆன்ம ஈடேற்றத்திற்காக அமைத்த அறிவுச்சாலை வேராகி, மரமாகி, இன்று விருட்சமாக கிளை விட்டு வளர்ச்சியடைந்துள்ளது. அறிவுச் சோலையின் வாயிலாக மேன்நிலையடைந்து ஏராளமான ஆண்களும் பெண்களும் உள் நாடுகளிலும் புலம் பெயர் நாடுகளிலுமு உயர் பதவி வகித்து வருகின்றனர்.

எமது கல்லூரியின் பழைய மாணவரும் ஆசியருமான செல்லத்துரை விஸ்வலிங்கம் அவர்கள் ஓய்வு நிலையிலும் பாடசாலை மேன்மைக்குப்பாடுபடுபவர். அவர் தனது பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சிக்குரிய ஆய்வுக் கட்டுரையாக மழவராயர் கந்தையாவின் கல்விப் பணிகள் பற்றிய ஆய்வினை மேற்கொண்டார். இவ்வாறான ஆய்வினை வேறுயாரும் பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா ஆய்விற்கு தேர்ந்தெடுக்கவில்லை என்பதனால் கல்லூரியின் வரலாற்றினை எதிர்கால சந்ததியினருக்கும்அறிந்து கொள்ளும் வகையில் அதிபர், பாடசாலைச் சமூகம் ஆகியோரின் வேண்டுதலுக்கமைய புதிய மாற்றங்களினையும் உள்ளடக்கி புதிய வடிவில் வடிவமைத்துதவிய ஆசிரிய ஆலோசகர் விஸ்வலிங்கம் அவர்களை பாராட்டி வாழ்த்துகிறேன், இம் மலர் கல்லூரியின் வரலாற்றினையும் வளர்ச்சிப் படிகளினையும் அறிய விரும்பும் அனைவருக்கும் பயனுடையதாக இருக்கும் என்பது நிச்சயம்.

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி ஓய்வு பெற்ற அதிபர் திரு.வே.சந்திரசேகரம்பிள்ளை அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

"அன்னசத்திரம் ஆயிரம் வைத்தலும்
ஆலயம் பதினாயிரம் நாட்டலும்
அன்னயாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்ற பாரதியாரின் பாடலுக்கமைவாக மூன்று தர்மங்களையும் அமரர் மழவராயர் கந்தையா செய்து வைத்தார். எனினும் ஏழைக்கு எழுத்தறிவித்த கல்வித்தானத்தால் தான் அவருடைய புகழ் மிக உச்சத்தில் உயர்வாக நாடு பூராவும் பேசப்படுகிறது. இலங்கையில் இலவசக்கல்வி முறைமையை முதன்முதலில் செய்து காட்டிய தாபகர் பெருமைக்குரியவர்.

மழவராயரின் வரலாற்றையும் பாடசாலை ஸ்தாபிக்கப்பட முன்னும் பின்னுமான சமூக பொருளாதார நிலைகளையும் தகுந்த ஆதாரங்களோடு ஆய்வுக் கட்டுரை ஆக்கிய ஆசிரியர் திரு.செ.விசுவலிங்கத்தின் திறமையைப் பாராட்டி ஆசி வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். அவரது நூல் பாடசலை நிர்வாகத்திற்கு 1983 லிருந்து பேருதவியாக இருந்தது.

திரு.செ.விசுவலிங்கம் பழையமாணவ சங்கச் செயலாளராகவும், பாடசாலை அபிவிருத்திச் சங்க பொருளாளராகவும் ஆசிரியர் சம்மேளனத் தலைவராகவும் பலவிதத்திலும் எமது நிர்வாகத்துக்கு வலக்கரமாக இருந்தவர். அவரது சேவைகட்கு நன்றி கூறி கலைஆர்வத்தோடு மாணவர்கள் நாடகங்கள் வில்லுப்பாட்டுகள் கவி அரங்கங்கள் ஆகியவற்றை வழிநடத்தி மேடையேற்றிய பெருமையும், திரு.கணேசப்பிள்ளை அதிபர் காலத்து சோமஸ்கந்தன் சஞ்சிகை ஆசிரியராகவும் பணி செய்த பெருமையும் அவருக்குண்டு.

அவரது நூல் வெளியீட்டிற்கு என்றென்றும் எனது ஆசிகள் உரித்தாகட்டும்.

திரு. வே. சந்திரசேகரம்பிள்ளை

கல்லூரிக் கீதம்

சீர்பல ஏந்தி நம் அன்னைய நிகர்த்திடும்
ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி
கார் நிகர் கொடையினர் மழவரின் மைந்தன்
கந்தைய வேள் தந்த கல்லூரி
ஏர் பெறு கலைகளை இலவசமாகவே
ஈந்தொளி மலரநீ இலங்கிடுதி
சீர் பண் பொடுநம் சிந்தையும் வாழ்வும்
திருவுடன் செழிந்திட வளர்த்திடுநீ
வாழ்க வாழ்க வாழ்க
வாழிய வாழியவே.

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி பழையமாணவர் சங்க செயலாளர்
ஓய்வு நிலை கிராம அலுவலர் சிறுப்பிட்டி கிழக்கு
திரு.க.ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின் ஆசிச் செய்தி



"புத்தூர் பிரதேசத்தில் கல்வி அபிவிருத்தியில் மழவராயரின் பங்கு" என்ற மதிப்பிற்குரிய ஆசிரிய ஆலோசகர் திரு.செ.விசுவலிங்கத்தின் நூலுக்கு ஆசியுரை கூறுவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

அவர் எங்களோடு தோளோடு தோள் நின்று புத்தூர் சிறுப்பிட்டி கலை இலக்கிய விழாக்களிலும், கோவில் திருவிழாக்கால நிகழ்வுகளிலும் ஒத்துழைப்பு வழங்கி வருபவர். அவர் அதிகம் ஆரவாரமின்றி மிக அமைதியாக அப்பர் வழியில் ஆலயத் தொண்டுகளால் கிராமத்தில் மிகுந்த மதிப்புக்குள்ளானவர்.

சிறுவை கலைபண்பாட்டு மலரில் 23-01-2011ல் எமது கலை பண்பாட்டு விழாவன்று பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டவர். சிறுப்பிட்டி கிராம கீதத்தை எமது மன்றத்துக்கு இயற்றித் தந்தவர். இவரது கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் கும்பாபிஷேக விழா மலர்களிலும் உதயன் சஞ்சீவி வார மலர்களிலும் வெளிவந்தன.

ஸ்ரீசோமஸ்கந்தன் சஞ்சிகையில் குமாரசாமி அதிபர் பற்றிய சிறுகதை 1965ல் வெளிவந்தது. அப்போது உயர்வகுப்பு மாணவனான அவர் பின்னர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் படித்தவர். ஆசிரியராகப் பணியாற்றியவர். எழுத்துப் பேச்சு கலைகளில் சிறந்து விளங்கியவர்.

அமரர் மழவராயரின் அரும்பணியையும் வரலாற்றையும் ஆய்வுப்பின்னனியில் தந்துள்ள அவரது முயற்சிக்கு எமது நன்றிகள் வாழ்த்துக்கள்.

க.ஸ்ரீஸ்கந்தராசா
செயலாளர்,
ப.மா.ச
செயலாளர்
சிறுப்பிட்டி
கலைபண்பாட்டுமன்றம்.

சொல்விற் பனமு மவதான
முங் கவி சொல்ல வல்ல
நல்வித்தை யுந்தடிமை கொள்
வாய் நளினா சனஞ்சேர்
செல்விக் கரிதென்றொரு கால
முஞ் சிதையாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலா வல்லியே

சகலகலாவல்லி மாலை - குமரகுருபரர்.

நூலாசிரியர் உரை

1982-1983ம் ஆண்டுகளில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா செய்த காலத்தில் படிப்பின் நிறைவாக ஆய்வுக் கட்டுரை ஒன்று சமாப்பிக்க வேண்டும்.

புத்தூர் பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தியில் மழவராயரின் பங்கு என்ற தலையங்கத்தில் எனது தெரிவு அமைந்தது.

அப்போதய கல்வியற்துறைப் பேராசிரியர் மதிப்பிற்குரிய ஆறுமுகம் அவர்களின் வழிகாட்டலில் பல நூல்களிலிருந்தும் தகவல்களை சேகரித்து இக்கட்டுரையை எழுதினேன். அதனுடைய ஒரு பிரதி புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி நூல் நிலையத்திலும் ஒப்படைத்திருந்தேன். தங்களுக்கு இந்நூல் பலவழிகளிலும் பயன்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

அதனைக் கருத்திற் கொண்டும் 1983 ஆம் ஆண்டின் பின்னர் இதுவரை காலமான புதிய நிர்வாக மாற்றங்களைக் கருத்திற் கொண்டும் நாட்டின் பிரபலமான இசுறுப் பாடசாலைகளில் ஒன்றாகப் பரிணமித்துள்ள நிலையைக் கருத்திற் கொண்டும், இக் கல்லூரிக்கும் கல்லூரி வரலாற்றை அறிந்து கொள்வதில் ஆர்வம் கொண்ட பிறர்க்கும் பயன்படும் விதத்தில் இந்நூலினைத் தற்போது திரும்பவும் கணனிப் பதிப்பாக வெளிப்படுத்தியுள்ளேன்.

இதற்கு உதவிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலாசிரியர்.

சமர்ப்பணம்

என் அன்புக்குரிய அன்னை சிவபாக்கியம்

என் கல்வூரி அன்னை சோமஸ்கந்தா

சிவன் உமை முருகன் சேர்ந்த சௌபாக்கியம்

அரிவரி தொட்டு உயர்தரம் வரை உளத்தில்

அரிய தமிழை, அறிவை அன்போடு வளர்த்த அன்னை

எம் மொழியும் பண்பாடும் அந்நியரின் ஆட்சியிலே

தம் சிறப்பை விட்டு தலைவணங்கிக் கும்பிட்டு

பிச்சை அறிவுக்காய் பொட்டழித்து பூசுவது தவிர்த்து

மெச்சு நிலை இல்லாமல் பிற மதத்தோர் பள்ளியிலே

பிச்சை அறிவை பெற்று நின்ற காலத்தில்

நாவலர் வழியில் சைவமும் தமிழும் மீட்சியுற புத்தூர்

காவலனாக மழவர் கந்தையர் ஆக்கிய அன்னையிவள்

குப்பி விளக்கில் குனிந்திருந்து படித்தாவும்

தப்பாது சாதனைகள் படைத்து வைத்தியர்

பொறியியலாளர் விரிவுரையாளர் கலாநிதிகள் என

அறிவுடையோரை ஆக்கிய அன்னையிவளுக்கு

பல்லாண்டு பாடி சமர்ப்பிக்கின்றேன் என் காணிக்கை.

ஸ்ரீசோமஸ்கந்த முக்கிய தினங்கள்

1) அத்திவாரத் தினம் (வித். பிரதிட்டை செய்யப்பட்டது)
   தைமாதம் - அத்த நட்சத்திரம் -06.02.1931ல் (பிரதிட்டை அபிஷேகம்)
2) வித்தியாரம்பத் தினம்
   சித்திரை மாத மிருகசீரிட நட்சத்திரம் (22.04.1931)
3) ஸ்தாபகர் தினம்:-
   முன்பு :- 1936 வைகாசி மாத பூர்வபக்க பஞ்சமித்திதி இறந்த தினம்.
   தற்போது:- 10-09-1887 பிறந்த தினம்.

   செப்டெம்பர் 10 ஸ்தாபகர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்
   திரு கனகசபாபதி அதிபர் காலத்திருந்தே இந்த நடைமுறை பின்பற்றப்பட்டது.

4) ஸ்தாபகர் பிறப்பு -10-091887 (விபவ ஆண்டு ஆவணித்திங்கள் 25ம் நாள்
   உரோகினி நட்சத்திரம்)
5) ஸ்தாபகர் இறப்பு -15-05-1936 வைகாசி மாத பூர்பபக்க பஞ்சமித்திதி
6) நாயன்மார் குருபூசைத் தினங்கள்.

திருத்தொண்டர் புராணம்

(பெரிய புராணம்)

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்றுளாரடி யாரவர் வான் புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகலாம்.

சேக்கிழார்.

அத்தியாயம் **பக்கம்**

1. புத்தூர் பிரதேச அமைப்பும், அக்கால சமூக பொருளாதார கல்விப் பின்னனிகள், அமைவிடம், பெயர் காரணம், நீர்வளம்,சமுதாயம், பொருளாதார நிலை, உணவு வகை, பழக்க வழக்கங்கள்.

2. கல்வி நிலை (அக்கால நிலை), பாடசாலைகள், பெண் கல்வி, கோயிற் பிரசங்கங்கள், கல்விமான்கள்.

3. மழவராயர் கந்தையா வரலாறு, தோற்றமும், குடிப்பிறப்பும், பெரும் செல்வம், கல்விப் பணி, தூண்டுதல்கள், கந்தையாவின் கல்விப் பணி

4. தர்மசாசனமும், அதன் வரையறைகளும், முக்கிய நோக்கங்கள், காணிகளும் கட்டிடங்களும், எழுத்தறிவித்தவன்

5. பாடசாலை முயற்சிகள்,வீரசிங்கம் அதிபர், குமாரசாமி அதிபர் சாதனைகள்,விளையாட்டுத் துறை, மன்றங்கள், பெற்றார் ஆசிரியர் சங்கம்

6. சமூக விளைவுகள், சமூகத்தில் ஏற்பட்ட பிறழ்வு, பொருளாதார அபிவிருத்தி, அறிவியற் தாக்கங்கள்.

7. மதிப்பீடு, சமுதாய நிலை (அன்றும் இன்றும்), பொருளாதார நிலை (அன்றும் இன்றும்), கல்வி நிலை (அன்றும் இன்றும்), கல்வி அபிவிருத்தியில் அதிபர் ஆசிரியர் பங்கு, மழவராயர் கந்தையாவின் பங்கு.

புத்தூர் பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தியில் மழவராயரின் பங்கு

அத்தியாயம் – 01

புத்தூர் பிரதேச அமைப்பும், அக்கால சமூகப் பொருளாதார கல்விப் பின்னணிகளும்.

அமைவிடம்:

புத்தூர் பிரதேசம் யாழ்ப்பாணம் பருத்தித்துறைப் பிரதான வீதியில் யாழ்ப்பாணத்திலிருந்து ஒன்பதாவது மைற்கல் தொலைவிலே அமைந்துள்ளது. புத்தூர் பிரதேசம் ஒல்லாந்தர் கால தோம்புகளில் புத்தூர் கோவிற் பற்று என அழைக்கப்பட்டது. புத்தூர் கோவிற் பற்று பிரதேசம் புத்தூர் கிராமாட்சி மன்ற எல்லைக்குள் அமைந்துள்ள பகுதிகளாகவும் இருந்தமை எமது ஆய்வுக்கும் வசதியாகவுள்ளது. புத்தூர் கிழக்கு, ஆவரங்கால், வாதரவத்தை, சிறுப்பிட்டி, நவற்கிரி, அச்செழு ஆகிய சிறு கிராமப் பகுதிகள் அல்லது தற்போதய கிராம சேவையாளர் பிரிவுகள், அக்கால தோம்புகளில் புத்தூர் கோவிற் பற்றின் இறைகளாகப் (பகுதிகளாக) வரையப்பட்டுள்ளன.

புத்தூர் பிரதேசத்தின் கிழக்கெல்லையாக வண்ணாத்தியான் பாலத்துக்கு அப்பால் அமைந்துள்ள புகழ்பெற்ற பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள்கோவில் கொண்ட மட்டுவில் கிராமம் அமைந்துள்ளது. தெற்கெல்லையாக நீர்வளமும், நிலவளமும் நிறைந்த நீர்வேலிக்கிராமம் அமைந்துள்ளது. மேற்கெல்லையாக புன்னாலைக்கட்டுவன் பிரதேசம் அமைந்துள்ளது. வடக்கெல்லையாக கைத்தொழில் நகரமாக மாறிவரும் அச்சுவேலி கிராமம் அமைந்துள்ளது.

யாழ் குடாநாடு இலங்கைத்தீவின் தலைபோல் தோற்றமளிக்கின்றது என வருணிக்கும் ஆசிரியர்கள் புத்தூர் பிரதேசத்தை அத்தலையின் கண் அமைந்துள்ள நெற்றித்திலகம் போல் யாழ்குடாநாட்டின் மத்தியில் அமைந்துள்ள தானமாக உவமித்துக் கூறவது பொருத்தமுடையதாகும். குடாநாட்டின் நாலாபுறமும் அமைந்துள்ள கிராமங்கட்கு மத்தியாகப் புத்தூர் கிராமம் காணப்படுவதை யாழ் குடாநாட்டு வெளியுருவப் படத்திலிருந்து அவதானிக்கலாம்.

பெயர்க்காரணம்:

புத்தூர் எனும் பெயர் புதிய ஊர் எனும் கருத்திலமைக்கப்பட்டதாகக் கொள்ள இடமுண்டு. மணற்றிடல் எனப்பட்ட யாழ்ப்பாணப் பிரதேசத்தைப் பரிசாகப் பெற்ற யாழ்ப்பாணன் தனது மந்திரியாகிய சேதிராயனெனும் மதியூகியிடம், புத்தூர் பிரதேசத்தைப் புதிய குடியேற்றமாகக் கொடுத்து குடிகளை அமர்த்திப் புதிய ஊராகப் பிரகடனப்படுத்தியமையின் புத்தூர் என்ற பெயர் வழக்கில் வந்ததாகலாம். புத்தூர் சுன்னாகம் சந்தியினருகில் கிராமாட்சி மன்ற வளவுள் முக்கோணவடிவில் அமைந்துள்ள ஞாபகச் சின்னமொன்று சேதிராய மந்திரியின் ஞாபகார்த்தமாகவே எழுப்பப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

வரலாற்றுரீதியில் நோக்குமிடத்து விசயனுக்குப் பின் வழிமுறையாக இலங்கை பதினொருவரால் அரசு செய்யப்பட்டது. பின்னிரண்டாம் அரசனாகிய அசேலனை ஏலேலன் என்ற தொண்டை நாட்டு அரசன் வெற்றி கொண்டு இராச்சியத்தை நடத்திவந்தான். ஏலேலன் இலங்கை வந்த காலம் 205 கி.மு என்று யாழ்ப்பாணச் சரித்திரம் பகருகிறது. இந்தக் காலத்திலேயே தொண்டை நாட்டிலிருந்து அந்தகக்கவி வீரராகவன் என்றொரு யாழ் வல்லான் ஏலேலனைக் கண்டு தன் கவித்திறமையைக் காட்டி, மணற்றிடர் எனப்பட்ட யாழ்ப்பாணத்தைப் பரிசாகப் பெற்றதாகக் கருதப்படுகின்றது. தொண்டை நாட்டு அரசனிடம் யாழ் வல்லான் ஒரு மந்திரியையும், சிறு படை வீரர்களையும் இரந்து வேண்டி மணற்றிடர்க்கு வந்த சேதிராயனுக்குப் புத்தூர் எனப் பின்னர் வழங்கப்பட்ட இடத்தைக்காடு கெடுத்து நாடாக்கிக் கொடுத்த செய்தியை நாம் சரித்திர வாயிலாக அறிகிறோம்.

சேதிராய மந்திரியல்ல, யாழ் பாடி கூட்டி வந்த படைவீரருள் ஒருவராகிய மழவனே இந்த ஊரிலே குடியேறிய முதல்வன் எனவும் வேறு சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். மழவனின் சந்ததியினர் இன்றும் இருப்பதாகக் கருதுகின்றனர்.

புத்தூரென்ற பெயர் மேற்கண்டவாறு காரணப் பெயராக அமைந்திருக்கலாம் அல்லது தமிழ் நாட்டிலுள்ள பல ஊர்ப்பெயர்களைப் பின்பற்றி திருநெல்வேலி, நல்லூர், நாகர் கோவில் எனப் பெயரிடப்பட்டது போல் புத்தூர் என்பதுவும் தமிழ் நாட்டு ஊர்பெயரைப் பின்பற்றியமைக்கப்பட்ட ஊர்ப்பெயராகலாம்.

யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப்பாணவைபவ கௌமுகியாகிய நூல்களில் வடமாகாணத்தில் சில இடப்பெயர்களின் வரலாறு பற்றி ஆராயப்படடுள்ளது. இவற்றுள் வசாவிளான் க.வேலுப்பிள்ளை எழுதிய யாழ்ப்பாண வைபவகௌமுகி என்னும் நூலில் பின்வரும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

"புத்தூர் (வலி கிழக்கு) புதிய ஊர் என்னும் பெயருள் தோன்றும் பெயருடைய தாயினும் இது யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பழங்கிராமம் ஆகும். புத்தூர் எனப் பெயரில் நான்கு வடஆற்காட்டிலும் தென்கன்னடத்திலும் தஞ்சாவூரிலும் கோழிக்கூட்டிலுமுள்ள அப்பெயர் இன்னும் எத்தனையூருக்கு அமைந்துள்ளதோ தெரிந்திலம்."

ஸ்ரீமான் முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களால் ஆக்கப்பட்டு சிறிது காலத்துக்கு முன்னர் தோன்றிய யாழ்ப்பாண சரித்திரம் (Jobbna- History) எனும் நவநாமம் பூண்ட நூலின் கண்ணே, யாழ்ப்பான புத்தூர்க்கு அப்பெயர் யாது காரணத்தினாலே வழங்கலாயினதென்று பின்வருமாறு நுவலப்பட்டுள்ளது.

"யாழ்ப்பாணன் தனக்கு மந்திரியாக வந்த சேதிராயனுக்கு புத்தூரெனப் பின்னர் வழங்கப்பட்ட இடத்தைத் திருத்தி அவ்வூரை அவனுக்குக் கொடுத்தான். அது புதிதாக அமைக்கப்பட்ட ஊராதலின் புத்தூரெனப்பட்டது"

"அது சேதிராயனுக்காகவே அமைக்கப்பட்ட ஊரென்பதற்கு முன் நூலாதாரம் யாது முண்டோ எனும் ஆதங்கையை பிள்ளையவர்கள் அகற்றினாரல்ல. புதிதாக அமைக்கப்பட்ட ஊரெனப் புத்தூர் ஒன்றையே விசேடித்துச் சொல்லியமையாலே

யாழ்ப்பாணத்துள் ஏனைய ஊர்களெல்லாம் யாழ்ப்பாணன் காலத்து பழையனவாயிருந்தன போலும்"

"நவற்கிரி (நவக்கீரி) குறிச்சியில் நவமாயமைந்து நிலவுவதும் நிலாவரை (நிலவரை) என்று நவிலப்படுவதுமான அற்புத நீர் நிலையொன்றையுடைய புத்தூருக்கு, அப் பெயர் அப்புதுமை நோக்கிவந்ததென ஏதும் புதுச் சரித்திராசிரியர் பொருள் சொல்லியிருந்தாராயினும் சற்றே பொருத்தமாயிருக்கும். அன்றேல் அப்பெயரை புத்த எனப்படுத்து புத்தசமயிகள் (சிங்களவர்) இருந்த ஊரென அர்த்தம் சொன்னாராயினும் யாதும் ஆதாரம் தேடிக்கொள்ளுதல் கூடும்."

வடஆற் காட்டிலும், பாலைக்காட்டிலுமுள்ளவனாகிய ஈருர்கட்குரிய சிற்றூர் என்னும் பெயர் எம்புத்தூர்க்கு அயலிலுள்ள ஒரு சிறு கிராமத்தை குறிப்பதும் (சிறுப்பிட்டி) ஈங்கு நோக்கத்தக்கதாகும்.

மேற்கண்டவாறு யாழ்ப்பாண வைபவகௌமுகி ஆசிரியர் புத்தூரெனும் பெயர்காரணத்தை பெரிதும் முயன்று ஆராய்ந்துள்ளார். அவர் குறிப்பிட்டதுபோல் புத்தர் ஊர் புத்தூரெனத் திரிந்துமிருக்கலாம் மென்பதுவும் சிலர் கருத்தாகும். இக்கருத்துக்கு சில ஆதாரங்களையும் எடுத்துக்காட்டுவார். இவ்வூரின் சிறு குறிச்சியை "புத்தர் கலட்டி" என அழைக்கிறார்கள். இன்னும் இவ்வூரின் கிழக்குப் பகுதியிலுள்ள ஒரு வழவுக்கு "புத்தர் கோவிலடி" எனப் பெயருண்டுஎனவே இதனருகில் புத்தர் கோவில் இருந்திருக்கலாம். இவ்வூரின் கிழக்கேயமைந்த சிறு கிராமம் வாதரவத்தை எனப்படும். இவ்வூர்ப்பெயர் "வத்துறு வத்தை" என்னும் சிங்களச் சொல்லின் திரிசொற் போலும். வத்துறு சிங்களத்தில் நீர், வத்தை தோட்டம். நீராற் சூழப்பட்ட தோட்டம் எனப் பொருள்படும். மாரி காலத்து மழை நீராற் சூழப்பட்ட குறிச்சியென்பதுவும் குறிப்பிடத்தக்கது.

"தமிழகம் ஊரும் பேரும்" என்ற நூலில் டாக்டர் ஆர்.பி.சேதுப்பிள்ளையவர்கள் புத்தூர் எவ்வாறு வந்ததெனக் கூறுமிடத்து "தமிழ் நாட்டூர்களே புத்தூரென்றும், நல்லூரென்றும் வகுத்தனராகவும், அதில் புதிதாகத் தோன்றிய ஊரைத்தான் புத்தூரென அழைத்தாரென்றும் கூறுகின்றார். தேவாரப் பாடல் பெற்ற பாண்டி நாட்டுப் பதியொன்றும் புத்தூராகும். தென்னிந்தியாவில் கோயம்புத்தூர், திருப்புத்தூர், புத்தூர் ஆகிய ஊர்கள் உள்ளன. பல்லவமன்னர்களின் ஆட்சிக்கால இறுதியில் வாழ்ந்த சுந்தரமூர்த்திநாயனாருக்கு புத்தூரிலே சடங்கவிசிவாச்சாரியாரின் மகளைப் பெரியார்கள் திருமண நிச்சயதார்த்தம் செய்தார்கள். பின்னர் இறைவனால் தடுத்தாளப்பட்ட சுந்தரர் கதையும் பலர் அறிந்ததே. இதனை சேக்கிழார் சுவாமிகள் அருளிய பெரியபுராணத்தில் தடுத்தாட் கொண்ட புராணம் பாடலிற் காணமுடியும்.

"தந்தையார் சடையனார் தம் தனிதிருமகற்குச் சைவ அந்தணர் குலத்துள் தங்கள் அரும்பெரும் மரபுக்கேற்ப வந்ததொல் சிறப்பின் புத்தூர் சடங்கவி மறையோன் தன்பால் செந்திரு அனையகன்னி மணத்திறம் செப்பிவிட்டார்." என்ற செய்யுள்ளால் அறியமுடிகிறது. எனவே புத்தூர் என்ற பெயர் புதிய குடியேற்றமாக அமைந்ததாயினும் தமிழ் கூறும் நல்லுலகில் செந்தமிழ்ச் சுவையும் பக்திச் சுவையும் நனி சொட்டச் சொட்டப் பாடிய சேக்கிழாரின் வாயிலே உச்சரிக்கப்பட்ட புண்ணியப் பெருமையுடைய பேரூர் எனவும் பாராட்ட முடியும்.

மண்வளமும் பயிர்களும் புத்தூர் பிரதேச மண்வளத்தைப் பொறுத்தவரையில் புத்தூர் கிழக்குப் பகுதி, அதாவது பருத்தித்துறை வீதிக்கு கிழக்கே அமைந்துள்ள பிரதேசம் இருவாட்டி மண், களிமண் சார்ந்த பிரதேசமாகவும் சுமார் 715 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நெல்வயல்கள் அமைந்த பிரதேசமாகவும் அமைந்துள்ளது. யாழ் குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களைப் போல் இங்கும் காலபோகம் மட்டுமே பயிரிடப்படுகின்றது. ஆவணி மாதத்தில் விதைத்து தை மாசியில் அறுவடை செய்வர். பழைய நெல் இனமான பச்சைப் பெருமாள், கறுப்பன் நெல் வகைகளோடு புதிய நெல் வகைகளும் செய்கைபண்ணப்படுகின்றது. வானம் பொய்யாது விடின் இப்பகுதி மக்களின் தேவைக்குப் போதியாதாக நெல் விளைச்சல் அமைவதுண்டு. ஆவரங்காலின் கிழக்குப் பகுதி, வாதவரவத்தை, சிறுப்பிட்டி புத்தூர் கிழக்குப் பகுதிகளிலேயே நெல்வயல்கள் சொந்தக்காரர்களுக்கு கூடைக்கணக்கில் நெல்விளையும். கால் நடைகட்கான வைக்கோற் போர்களையும் அளித்து வருகின்றது. இவ்வயல் வெளிகளைச் சார்ந்த கிழக்குப் பிரதேசதிலமைந்துள்ள மேட்டு நிலத்தோட்டங்களில் புகையிலை, வெங்காயம், மிளகாய், வாழை ஆகிய பயிர்களும் செய்கைப்பண்ணப்படுகின்றது.

பருத்தித்துறை வீதிக்கு மேற்கேயமைந்த சிறுப்பிட்டி மேற்கு, புத்தூர் மேற்கு, நவற்கிரி, அச்செழுப் பிரதேசங்கள் செம்மண் செறிந்த நிலப்பரப்பாகக் காணப்படுகிறது. சிறிய பற்றைக் காடுகளும் (இன்று அருகி வருகிறது) மேட்டு நில பயிர்ச் செய்கைக்கேற்ற பல ஏக்கர் கொண்ட செழிப்பான செம்மண் தோட்டங்களும் நிறைந்த பகுதியாகக் காணப்படுகின்றது. கிழக்கிலும், மேற்கிலும் ஆங்காங்கே அமைந்த ஏக்கர் கணக்கிலான பனங்காடுகளும், இலுப்பை மர வளவுகளும் (இன்று அருகி வருகின்றன) உள்ளன. தென்னை, மா, பலா, புளி முதலிய பயன்தரும் மரங்களும் இப்பகுதியின் இயற்கை தாவரமென அறிமுகம் செய்யலாம். பழைய கால தோம்புகளிலும், உறுதிகளிலும் காணியுரிமை மாற்றம் செய்யப்படும்போது காணியும், அதிலுள்ள செய்பயிர், வான்பயிர் அனைத்தும் அறுதி உறுதி முடித்து ஆட்சி ஒப்படைக்கப்படுவதாக வாசகம் எழுதப்பட்டிருப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். இலுப்பை, புளி, வேம்பு, மா, பாலா, பனை, தென்னை முதலியன வான்பயிர்களாகக் கொள்ளப்படும். இப்பயிர்கள் செய்கைப்பண்ணி நீர் இறைக்காது வானத்தை நம்பியே வளர்வதால் வான்பயிர்கள் எனப்பட்டன. தென்னை, பலா, மா, முதலியன சில மாதங்கள் மட்டுமே நீர் ஊற்றி வளர்த்து பெரியமரமானதும் நீர் ஊற்றப்படாது வானத்தையே நம்பியுள்ளன. எலுமிச்சை, தோடை, மாதுளை, வாழை முதலியனவற்றிற்கு நீர் பாய்ச்சி வளர்க்கப்பட்டதால் அவற்றைச் செய்பயிர்களாகத் தோம்புகளில் குறிக்கப்பட்டிருக்கலாம்.

"புத்தூர் பிரதேசத்தின் மேற்கிலமைந்துள்ள சிறுப்பிட்டி, அச்செழு, நவற்கிரி, புத்தூர் மேற்கு பிரதேசங்களிலான செம்மண் தோட்டங்களில் வாழைத்தோப்புக்கள் மிகச் செழிந்து வளரந்து ஊரவர்க்கு மிக உயர்ந்த வருமானத்தையளித்து வருகின்றன. உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், கோவா, பீற்றூட், போன்ற நவீனகாசுப் பயிர்களும், உபஉணவுப் பயிர்களாக செய்கைப்பண்ணப்பட்டு இப்பிரதேச மக்கட்கு சிறந்த லாபமீட்டிக் கொடுத்துள்ளன.

நீர்வளம்

புத்தூர் பிரதேசம் யாழ்குடாநாட்டின் ஏனைய பகுதிகளைப்போலவே நிலக்கீழ் ஊற்றுநீரைக் கிணறுகள் மூலம் பெறுகின்றது. இதனைவிட நிலாவரை என்னும் வற்றாத அதிசய நீர் ஊற்று ஒன்றும் இப்பகுதியை வளம் கொழிக்கச் செய்து வருகின்றது. புத்தூர் கிழக்குப் பகுதியில் உள்ள கிணறுகள் ஆழம் குறைந்ததாகவும், மேற்குப்பகுதியிலுள்ள கிணறுகள் ஆழம் கூடியனவாகவும் உள்ளன. புத்தூர் மேற்குப்பகுதியிலுள்ள செம்மண் தோட்டங்களுக்கு அறுபது எழுபதடிக்கு மேல் ஆழமான கிணறுகளிலிருந்து இரண்டு மணித்தியாலங்கட்கு மேல் தொடர்ந்து வற்றாது இறைக்கக் கூடிய நீர்வசதியுண்டு. நவற்கீரி, புத்தூர் மேற்கு, அச்செழு, சிறுப்பிட்டி மேற்கு ஆகிய பகுதிகளின் கிணறுகளே மிக ஆழமானவை.

புத்தூர் பிரதேசத்திலே மிக நீர்வசதி குறைந்த பகுதியாகவும், உவர்நீர் அதிகம் உள்ள பகுதியாகவும் புத்தூர் கிழக்குப் புறத்து அமைந்துள்ள குக்கிராமமான வாதவரவத்தை அமைந்துள்ளது. சிலமாதங்களில் இப் பகுதியில் குடிநீருக்கே பெரிய தட்டுப்பாடு ஏற்படுவதுண்டு. இதனைத் தீர்க்கும் முகமாக சமீபத்தில் அரசினரின் ஆதரவின் கீழ் புத்தூர் மேற்கில் மழவராயரின் அன்னசத்திரம் அமைந்துள்ள வளவிலுள்ள புதிய கிணற்றிலிருந்து குழாய் மூலம் மூன்று மைல் தொலைவில் உள்ள வாதவரவத்தைப் பகுதிக்கு குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்தே புத்தூர் மேற்கில் அமைந்துள்ள ஆழமான கிணறுகளின் வற்றாத நீர் ஊற்று வளத்தினை அறிந்து கொள்ளமுடியும். வாதவரவத்தைப் பகுதியில் நீர் வசதிக் குறைவால் மிகக் குறைவாகவே தோட்டப்பயிர்கள் செய்யப்படுகின்றன. ஆனால் மழைநீரை நம்பிய வயல்கள் பெருமளவில் உள்ளன.

நிலாவரை வற்றாத நீர் ஊற்று

புத்தூர் பிரதேசத்தின் மேற்கே அமைந்துள்ள நவற்கீரி என்ற குறிச்சியில் இறைவனளித்த வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. நிலாவரை என்னும் இடிகுண்டாகும். சாதாரண கேணிபோல் காட்சியளிப்பினும், இக்கேணி சில விசேட குணங்களைப் பெற்றுள்ளது. புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி,நவற்கிரி ஆகிய பிரதேசங்களுக்கு மட்டுமல்லாது, அயலில் உள்ள கிராமங்களான நீர்வேலி, ஈவினை, புன்னாலைக்கட்டுவன் ஆகிய பிரதேசங்களுக்கும் இக் கிணற்று நீர் சீமெந்து வாய்க்கால்கள் மூலம் அரசினர் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகின்றது.

"இவ் அதிசய நீர் ஊற்று பற்றி புராண வரலாறுகளும், செவிவழிக் கதைகளும் வழங்கி வருகின்றது. நிலாவரை ஆதிகாலத்தில் பெருமை வாய்ந்த சைவஸ்தலமாக திகழ்ந்தது. புராண நூலாகிய ஸ்ரீதட்சணகைலாய புராணத்தில் இத்திவ்விய ஸ்தலம் பற்றி 19வது நவசைலப் படலத்தில் விபரமாக குறிப்புகள் உள்ளது.

நிலாவரை கிணற்றைப் பற்றி 1824 ஆம் ஆண்டு போகாட் என்பவரிடம், 1826ஆம் ஆண்டில் கவர்னர் பாரன்சும் 1895ஆம் ஆண்டில் பெலமி என்பவரும் ஆராய்ச்சி நடத்தினர். இவ் ஆராட்சிகள் முடிவுகளின் படி மக்கள் திடமாக நம்பியதைப் போல் இது அடியற்ற கிணறு அல்ல கிணற்றின் மேற்றளம் ஒருபக்கம் 48நீளமும், மறு பக்கம் 38அகலமும் உள்ளது. அதன் அடிப்பாகம் வாயிலிலும் பார்க்க அகலமானது. கிணற்றின்

அடி ஒரே மட்டமானதல்ல இருபக்கத்திலும் முறையே 134 ஆகவும், 164 ஆகவும் இருந்தாலும் ஒவ்வோர் இடத்திலும் வேறுபடுவதாக ஆராட்சிகள் தெரிவிக்கின்றன. இவ் ஆராய்சி அது பல வாயிலாக தற்போது விவசாய உபயோகத்திற்கு நீர் இறைக்கும் போது அடியிலுள்ள நீர் மேல் வராது நன்னீர் மட்டுமே கவனமாக இறைக்கப்படுகின்றது. 10 மணித்தியாலங்களுக்கு 30 000 -40 000 கனவளவுக்கு நீரை இறைத்து தொடர்ந்து 14 மணித்தியாலங்களுக்கு நன்னீர் கிணற்றுள் ஊறவிட்டால் மீண்டும் மேல் வந்த உப்புநீர் கீழ் சென்றுவிடும். மேற்கண்ட ஆராய்சி முடிவுகளின் அடிப்படையில் அரசினரால் ஓர் பாரிய நீர்ப்பாசனத்திட்டம் வகுக்கப்பட்ட மின்நீர் இறைக்கும் பம்புகள் மூலம் 400 ஏக்கருக்கு மேற்பட்ட தோட்ட நிலங்கள் நீர் பாய்ச்சப்படுகின்றது. மக்கள் பெரும்பாலும் வாழைத் தோட்டங்களுக்கே இந்த நீரை உபயோகப்படுத்துகின்றனர்.

சமுதாய அமைப்பு

சமுதாய அமைப்பைப் பொறுத்தவரையில் நாம் ஆய்விற்காக எடுத்துக் கொண்ட மழவராயர் வாழ்ந்த காலகட்டத்திற்கும் இன்று நாம் காணும் சமுதாய அமைப்பிற்கும் இடையில் வியத்தகு வேறுபாடுகள், மாறுபாடுகள் ஆராய்வு நோக்கில் அவதானிக்க முடியும். மழவராயர் வாழ்ந்த காலப்பகுதி 1850ஐ அடுத்த ஆண்டு எனலாம். அக்கால சமுதாய நிலப் பிரபுத்துவம், நிலமானிய அமைப்பிலிருந்த சமுதாயமாக காணப்பட்டது. மழவராயர் குடும்பம், மணியகாரன் குடும்பம், விதானயார் குடும்பம் என சில குடும்பங்களின் சொத்தாகவே ஊரில் உள்ள பெருமளவு நிலப்பகுதிகள் அமைந்துள்ளன. நெல் வயல்கள், தோட்டங்கள், குடியிருக்கும் காணிகள் அனைத்தும் இக் குடும்பங்களிடம் குத்தகையாகபெற்றே ஏனைய குடி மக்கள் பயிர் செய்தும், குடியிருந்தும் தம் ஜீவனோபாயத்தை கழித்து வந்தனர். இப்பிரபுகளின் ஆதிக்கத்தில் கீழ் சாதிமுறை அமைப்புக்கள் மிக இறுக்கமாக பேணப்பட்டு வந்தன. ஒவ்வொரு வர்ணத்தவரும் தமக்கென ஒதுக்கப்பட்ட பகுதியில் கூட்டாக குடியிருந்து தமது குலத்திற்குரிய தொழிலை செய்து வந்தனர். அந்த கால வார்த்தைகளில் சொல்வதாக இருந்தால் பிராமணர், வேளாளர், கோவியர், தச்சர், வண்ணார், அம்பட்டர், பள்ளர், பறையர் என்ற வர்க்க பேதங்கள் புத்தூர் பிரதேச சமூக அமைப்பில் அன்றைய நிலையில் ஆழப்பதிந்த குலப்பாகுபாடுகளாக இருந்தன. இச் சாதிகட்கு மேலும் உட்பிரிவுகள் அமைந்திருந்தன என்று கூட அறியமுடிகின்றது.

இவர்களில் வேளான் வர்க்கத்தவரே ஆதிக்கமிக்கவராயும், இப்பிரதேசத்தின் பெருமளவு நிலப்பகுதிகள் தமது பிடிக்குள் வைத்திருந்ததாகவும் காணப்பட்டனர். அதைவிட ஒல்லாந்த, ஆங்கிலேய ஆட்சியாளரிடமும் செல்வாக்குப் பெற்று மணியகாரன், உடையார் முதலிய உயர் அரச பதவிகளையும் வகித்து ஊரவரை தமது செல்வாக்குள் வைத்திருந்தனர். பிராமண குடும்பத்தினர் மிகக் குறைந்த எண்ணிக்கையினராகவும் வேளான் வர்க்கத்தின் ஆதரவில் அமைந்த கோயில்களின் பூசகர்களாகவும், அதிகளவு நிலபுல வசதிகள் அற்றவராகவும் இருந்து வந்திருக்கின்றனர். சிலவகைக் கோவில்களிலும், மரண வீடுகளிலும் பறைமேளம் முழங்கும் பறைய குலத்தவரும் மிகச்சிறு எண்ணிக்கையிலே இவ்வூரில் வாழ்ந்து தீண்டாத வர்க்கத்தவராக ஒதுக்கப்பட்டு வந்துள்ளனர். வயல், தோட்ட வேலைகளில் அந்நாளில் பெருமளவு மலிவான கூலிகளாக செயற்பட்ட பள்ள வர்க்கத்தவர் இப்பிரதேசத்தில் ஆயிரக்கணக்கில் வசித்து தீண்டாத சாதியாக ஒதுக்கப்பட்டு வந்துள்ளனர்.

மாதகல் மயில்வாகனப் புலவர் இயற்றிய யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூலுக்கு முதலியார் இராசநாயகம், முதலியார் குலசபாநாதன் ஆகியோர் எழுதிய ஆராய்சிக் குறிப்புகளிலிருந்து "பள்ளர் வர்க்கத்தினர் இந்தியாவிலிருந்து தோணிகளில் பெருந்தொகையாக கமவேலைகளுக்கு உதவ வருவிக்கப்பட்டவர் என்றும் அவர்களுள் பிழைப்புக்கு வழியற்றோர் தங்களை வேளான் முதலிகளுக்கு அடிமையாக எழுதிக் கொடுத்திருந்தார்கள் என்றும் குறிப்புள்ளது. மேலும் முன் நாட்களில் சில வறிய குடிகள் தங்களை கோவில்களுக்கு அடிமைகளாக எழுதிக் கொடுத்து கோவிற் பணிவிடை செய்து சீவனம் பண்ணினர் எனவும் அவர்கள் "கோவிலார்" என அழைக்கப்பட்டு பின்னர் "கோவியர்" எனப் பெயர் பெற்றனர் என்னும் குறிப்புள்ளது. பறங்கியர் காலத்தில் கோவில்கள் அழிக்கப்பட்டதால் இக் கோவியச் சிறைகளை கோவில் எசமான்கள் விற்றதாகவும் அறியக்கிடக்கின்றது. கோவியர், "கோவியாஸ்" என்னும் சிங்கள வேளாளர் எனவும், சங்கிலி மன்னன் காலத்தில் சிங்களவர் யாழ்ப்பாணத்தில் இருந்து அகற்றப்பட்ட போது தமிழ் வேளாங் குடும்பங்களுக்கு அடிமையாக்கப்பட்டார்" எனவும் முதலியார் இராசநாயகம் கூறுவார்.

சமூக பொருளாதார நிலை

புத்தூர் பிரதேசத்தின் மழவராயர் கால நிலை நிலமானிய சமுதாய பொருளாதாரமாகவே காணப்பட்டது. விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சில நிலப்பிரபுகளின் ஆதிக்கத்திற் தான் புத்தூர் பிரதேசத்தின் பெருமளவு நிலப்பரப்பு சிக்கியிருந்தும், மிகச் சிறு அளவிலேயே வேறு ஒரு சில சாதாரண குடி மக்களும் காணித்துண்டுகளை வைத்திருக்கிறார்கள். பெருமளவு நெல்வயல்களும், மேட்டுத் தோட்டக்காணிகளும் இப்பிரபுகட்கு அதிக வருமானத்தை ஈட்டிக் கொடுத்தமையால் அவர்கள் வாழ்வு செழிப்பாகவும், செல்வாக்காகவும் அமைந்திருந்தது. நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த இக்காணிகளில் கடுமையாக உழைத்த குடியானவர்களின் பொருளாதார நிலை சோகம் நிரம்பியதாகவும் காணப்பட்டது. புரட்சியின் முன்னர் பிரான்சிய, ருஷ்சிய நிலமானிய சமுதாய, பொருளாதார சீர்கேடுகளுடன் ஓரளவு ஒப்பிடக் கூடியதாக இப்பிரதேச குடியானவர்களின் பொருளாதார சீர்கேடு அமைந்திருந்தது. சிறு விவசாயிகளும் ஏராளமான விவசாய கூலியாட்களும் இப்பிரதேசத்தில் அக்கால கட்டத்தில் மலிந்திருந்தனர். அக்கால அன்றாட உணவுக்காகவே மேற்கண்ட பிரபுக்களின் வீடுகளில் பெருமளவு குடியானவர்கள் அடிமைகள் போல் நடத்தப்பட்டனர் என அறியக்கிடக்கின்றது.

ஈழத்தின் பிரபல கவிஞர் ஆகிய சின்னத்தம்பிப் புலவர் 18ம், 19ம் நூற்றாண்டில் அமைந்த யாழ்ப்பாண கிராமங்களின் நிலமானிய சமுதாய பொருளாதார அமைப்பைப் படம் பிடித்துக் காட்டவல்ல பறாளை விநாயகர் பள்ளு என்ற சுவைமிக்க சிற்றிலக்கிய பிரபந்தத்தை ஆக்கினார். பள்ளு பிரபந்தத்தின் கதாநாயகனாகிய பள்ளன் ஆண்டையினால் முற்றத்து மரத்தில் கட்டிவைத்து அடிக்கப்படும் நிகழ்ச்சி இலக்கிய சுவையோடும், கற்பனை நயத்தோடும் எடுத்துக் கூறப்படுகின்றது. இதனை ஒத்த சம்பவங்கள் புத்தூர் பிரதேசத்தில் அக்கால சமூக அமைப்பிலும் நிகழ்ந்ததாக அறிய முடிகின்றது. டானியல் என்பவர் தனது சமூக நாவல்களில் இது பற்றிய குறிப்புக்களைத் தந்துள்ளார். பின் மட்டுப்படுத்தப்பட்ட ஏழை எளிய மக்கள் வாழ்வை மையமாக கொண்டு புனைந்த அவர்களது நாவல்களில் புத்தூர் மழவராயர் கால சமூக நிலை

நன்கு கதாபாத்திரங்கள் ஊடாக சித்தரித்துள்ளதை அறியலாம். தமிழ் நாட்டில் இவ்வகை இலக்கியங்கள் "தலித்" இலக்கியங்கள் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந் நிகழ்ச்சிகள் அக் கால சமூக நிலையை மாத்திரமல்ல பொருளாதார பலம் குறைந்த குடும்பத்தவர் அனுபவித்த கண்ணீர் கதைகளையும் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. சில தாழ்த்தப்பட்ட சமூகத்தவர் உயர் வர்க்கத்தவர் முகத்தில் விழிக்கவோ, உயர்வர்க்கத்தவர் வீதியால் செல்லும் போது எதிர்படவோ அருகதையற்றவராக ஒதுக்கப்படுவதற்கு அவர்களின் பொருளாதார சீர்கேடும், காரணமாக அமைந்துள்ளன. மழவராயர்கால நிலமானிய சமுதாயத்தின் பிடி வரவர தளர்ந்தாலும் அதன் எச்சங்கள் 20ம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்கள் வரை நீடித்திருந்தமையும் அறிய முடிகின்றது. 1960ம் ஆண்டுகளின் பின்னரே சோமஸ்கந்தாவில் சகல பிரிவினருக்கும் அனுமதி கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

உணவு வகை

ஈழத்து வாழ்வும் வளமும் என்னும் நூலில் பேராசிரியர்.க.கணபதிப்பிள்ளை ஈழத்தமிழரின் சென்ற நூற்றாண்டு உணவுவகைகளைப் பற்றி விரிவான குறிப்புக்களைத் தந்துள்ளார். அதன் அடிப்படையிலும், அக்காலத்தில் வாழ்ந்த சில பெரியோரை அணுகி அறிந்ததன் மூலம் புத்தூர் பிரதேச மக்களின் உணவுவகைகள் பற்றிய தகவலை ஆராய முடியும்.

"அரிசிச் சோறு முதன்மையான உணவாக இருந்த போதிலும், இக்காலத்து உண்பது போல அதனை ஒவ்வொருவரும் உண்டு வரவில்லை. பெரும்பாலும் தினைச் சோறு, வரகுச் சோறு முதலியனவற்றையே நாள்தோறும் உண்பர். இவற்றை விட பனை ஒடியற் பிட்டு, பனை ஒடியற் கூழ், பனங்காய், பனாட்டு, குரக்கன் பிட்டு, மரவள்ளி, இராசவள்ளி ஆகியற்றை பெரும்பாலும் தமது உணவாகக் கொள்வர். அமாவாசை, பூரணை ஆகிய விரத நாட்களில் தான் பொதுவாக அரிசிச் சோறு தின்பர். அதனால் அந் நாளில் இப்பிரதேச வயல்களில் உண்டாகிய நெல் இப்பிரதேச மக்கட்கு போதியதாகவே இருந்தது. பணம் படைத்த வர்க்கத்தவர் அரிசிமாவுடன் உழுத்தம்மா, சர்க்கரை சேர்த்து ஆலங்காய் பிட்டு, நெய் பிட்டு, உழுத்தங்களி, இட்லி, தோசை முதலியற்றைத் தேடி தமது காலை உணவாகக் கொண்டனர். காலை உணவுப் பொருட்களை உண்ட பின்னர் பால் அல்லது மோர் குடிப்பர்" தேநீர், கோப்பி, முதலிய பானங்களும் கோதுமை மாவாலான பண்டங்களும் 1945ம் ஆண்டை அடுத்த உலக யுத்த காலப்பகுதியிலேயே இப்பகுதிகளில் அறிமுகமானது. தேநீர், கோப்பி முதலியன இலவசமாக விளம்பரமாக விநியோகிக்கப்பட்டமையை இப்பிரதேச முதியவர்கள் கதைகதையாக கூறுவர்.

பொதுவாக இவை அறிமுகமாக முன்னர் பொது மக்கள் காலை உணவின் பின் தண்ணீரையோ, பழந்தண்ணீரையோ குடித்தனர். பொது மக்களின் காலை உணவாக பெருமளவு இருந்தது பழஞ்சோறு. இரவிலே தண்ணீர் விட்டு வைத்த சோற்றைப் பிழிந்து தண்ணீரை நீக்கி இரவிலே எஞ்சிய கறிகள் யாவற்றையும் ஒன்று சேர்த்து கவளமாக திரட்டி கையிலே ஏந்தி வைத்து உண்பர். பலகறிகளும் ஒன்று சேர்ந்தமையால் அச் சோறு மிகச் சுவையாக இருக்கும். அதன் பின்னர் தண்ணீரையே வயிறாரக் குடிப்பர். பழைய கறி இல்லாவிட்டால் சோற்றைப் பிழிந்து மோர் ஊற்றி ஊறுகாயும் சேர்த்து

வெங்காயம், மிளகாயோடு அருந்துவர். மோருங் கிடையாதவர்கள் வெறுமனே சோற்றை தண்ணீரோடு வெங்காயமும், மிளகாயும் சேர்த்து உண்பர்.

அந்த நாளையிற் பொதுவாக மரக்கறி, கீரை வகைகளையே உண்பர். ஆட்டிறைச்சி, கோழிறைச்சி, மீன் வகைகள் பழக்கத்திருந்த போதும் ஆறுமுக நாவலரின் சைவசமயம் பற்றிய பிரசங்கங்களாலும், சைவ வினாவிடை முதலிய பிரசுரங்களாலும், மக்கள் புலால் உணவை ஒழித்து சைவ ஒழுங்கில் உணவு அருந்தினர். கடும் சைவ ஒழுக்கத்தில் நிற்போர் கண்காணாமல் சாப்பிடும் முறையையும் கைக்கொண்டனர். புலால் உண்போரும் வெள்ளிக் கிழமைகளில் இவற்றை தவிர்த்து மரக்கறி உணவு வகைகளையே உண்டனர்.

சைவ மரபு பேணப்பட்டு வந்த இல்லங்களில் வாழை இலைகளில் அல்லது வாழைமடல்களில் சாப்பிடும் பழக்கமே காணப்பட்டது. உணவு வகைகளை பெரும்பாலும் பெண்களே தயாரித்து வந்தனர். விஷேட வைபவங்களின் போது பண்டாரங்கள் அல்லது மடப்பளி வேலைக்காரர் வந்து சமயல் வேலைகளைக் கவனித்து விருந்தினரை மகிழ்வித்தனர்.

பழக்கவழக்கங்கள்

பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை தமது ஈழத்து வாழ்வும் வளமும் என்ற நூலில் யாழ்ப்பாணக் கிராமங்களின் பழக்கவழக்கங்கள் பற்றி எடுத்துக் கூறிய விடயங்கள் பற்றி புத்தூர் பிரதேசத்து தற்போது வாழும் முதியோரை உசாவிய வகையில் இப்பிரதேச அக்கால நிலைக்கும் பெருமளவு தொருந்தும் என்பது அறிந்து கொள்ளலாம். பேராசிரியர் குறிப்பிட்டது போல கன்னக் குடுமி வைக்கும் பழக்கம் இப்பிரதேச ஆண்களிடையேயும் பெருவழக்கமாக இருந்துள்ளது.

"பெண் சாதிகர்ப முற்றால் கணவன் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களைப் பற்றி சுவையான தகவல்களை அறிய முடிகின்றது. மனைவி கர்பமாக இருக்கும் காலகட்டத்தில் கணவன் மயிர் களைதலாகாது. தூரப் பயணம் செல்லக் கூடாது, சுடலை செல்லக் கூடாது, ஏழாம் அல்லது ஒன்பதாம் மாதம் நாட்சரக்கு வேண்ட செல்ல வேண்டும். வேண்டப்பட்ட மிளகினை எண்ணி ஒற்றையானால் ஆண் எனவும், இரட்டையானால் பெண் எனவும் அறிகின்ற செய்திகளை பெறமுடிகின்றது. பிரசவம் பெரும்பாலும் வீட்டிலேயே நிகழ்வதாகவும், மருத்துவிச்சி மார்களே அதனைப் பார்ப்பதாகவும் தெரியவருகிறது. குழந்தை இருக்கும் அறையில் வேப்பெண்ணெய் விளக்கே எரிக்கப்படும். இரண்டாம் உலகயுத்தத்தை அடுத்த காலப்பகுதியிலேயே மண்ணெண்ணெய் விளக்குகள் பாவனைக்கு வந்துள்ளன. ஆண் குழந்தையானால் வீட்டுக் கூரையில் அடிக்கும் வழக்கமும் இருந்திருக்கின்றது. நொச்சி, பாவட்டை, பருத்தி, ஆமனக்கு, வேம்பு ஆகிய குழைகளை நீரில் அவித்து பிரசவித்த பெண்களைக் குளிக்க வைத்தனர். 5ம் நாள் கொத்தி என்னும் பேயை அகற்றும் சடங்கை மருத்துவிச்சி "செத்தேக்கை, பத்தைக்கே நில்லாத போ போ" என அமைந்த ஒருவகை நாட்டுப் பாடலை பாடிஓலைப்பந்தத்துடன் கொத்திப் பேயை விரட்டும் வழக்கம் இருந்ததாக அறிய முடிகிறது. 31ம் நாள் தொடக்கு கழிக்கப்பட்டு, குழந்தை தாய் மாமனால் ஆபரணம் அணிவிக்கப்பட்டு தொட்டிலில் இடப்படுவான். அன்றே நாம கரணமும் சூட்டப்படும். அன்றைய தினம் ஐவகை குடிமக்களும் வந்து கூடி விருந்து

கொண்டாடி மகிழ்வர். அரைஞான் கயிறு, பஞ்சாயுதம், கை, கால், காப்புக்கள் ஆகியன அக்காலத்து குழந்தைகளின் அணிகலன்கலாகும்."

ஆடை ஆபரணங்களைப் பொறுத்த வரையில் அக்காலத்து பாடசாலை செல்லும் மாணவர்கள் கூட நான்கு முள வேட்டியும், சால்வையும் அணிந்து செல்வர். வசதிபடைத்த உயர் வர்க்கத்தவர் "ஆரணியம்" "அரவிந்த்" வேட்டிகளையும், பட்டு வேட்டி சால்வைகளையும் அணிந்தனர்.வசதி படைத்த பெண்கள் தரமான பருத்தி ஆடைகளுடன் பட்டாடைகளும் அணிந்தனர். குடியான வர்க்கத்தை சேர்ந்த பெண்கள் சேலையை மார்புக்கு குறுக்கே கட்டும் வழக்கமே இருந்தது. இரவிக்கை என்னும் மேற்சட்டை அணியும் வழக்கம் பாமர பெண்களிடையே இருக்கவில்லை.

பெண்கள் மூக்குத்தி, தோடு, கழுத்தில் சங்கிலி, தாலிக்கொடியுடன் சரடு என்னும் ஆபரணமும் அணிந்தனர். உயர்குல வசதிபடைத்த ஆண்கள் சிலரும் மார்புச் சங்கிலி மிக நீளமாக அணியும் வழக்கம் இருந்தது. மழவராயர் கந்தையாவின் நிழற்படத்தில் அவர் தற்போதைய தேசிய உடை போன்ற நீண்ட மேற்சட்டையும், தலைப்பாகையும் அணிந்து நீண்ட சங்கிலியின் ஒரு பகுதியையும் வெளிக்காட்டி நிற்பதைக் காணலாம். உயர்குல வசதி படைத்தோர் இத்ததைகய ஆடை ஆபரணங்களை அணிவது வழக்கமாக இருந்தது.

கோவில்களும் வழிபாட்டு முறைகளும்

புத்தூர் பிரதேசத்தில் புத்தூர் சிவன் கோவில், புத்தூர் தேரம்பிள்ளையார் கோவில், ஆவரங்கால் சிவன் கோவில், சிறுப்பிட்டி அம்மன் கோவில், சிறுப்பிட்டி செல்லப்பிள்ளையார் கோவில், வாதரவத்தை சேதுவுப்பிள்ளையார் கோவில், அச்செழுப் பிள்ளையார் கோவில் ஆகிய பெரும் ஆலயங்களுடன் பல திக்குகளிலும் வைரவர் கோவில் நாச்சிமார் கோவில், காளி கோவில், குருநாதர் கோவில், அண்ணமார் கோவில்களும் அமைந்துள்ளன.

இவற்றுள் புத்தூர் சிவன் கோவில் முன் புத்தூர் பிலாவடி அம்மன் ஆலயமாக சிறு கோவிலாக இருந்ததென்றும் தர்மவள்ளலான சிற்றம்பலம் மழவராயரே அதனை பொறுப்பேற்றுப் பலரின் வேண்டுதற்படி சிவன்கோவிலாகப் பெருப்பித்து கட்டி கும்பாபிஷேகம் செய்து வைத்ததுடன் ஏராளமான தர்மசொத்துகளையும் கொடுத்து அது தொடர்ந்து நல்லமுறையில் இயங்கிவரவழிவகுத்தார். இப்பிரதேசத்தில் மிகப்பெரிய ஆலயமாக சிவபெருமானோடு பல பரிவார மூர்த்திகளும் இணைந்து எழுந்தருளியுள்ள தேவாலயமாக இன்று காட்சியளிக்கின்றது. இக்கோவில் 18ம் நூற்றாண்டை அடுத்த காலகட்டங்களில் எழுந்திருக்கலாம். இங்கு உறையும் சிவன் விசுவநாதர் எனவும், அம்மன் விசாலாட்சி எனவும் அழைக்கப்படுவர். தென்னகத்தில் உள்ள காசித் தலத்தின் இறைவன், இறைவியரின் பெயரே இதற்கும் சூட்டப்பட்டுள்ளது நோக்கத்தக்கது. ஆவரங்கால் சிவன் கோவிலும் இத்தகைய பழைமை வாய்ந்த தலமாகும். அக்கோவில் நடராஜ இராமலிங்கர் எனவும், இறைவி பர்வதபர்த்தனி அம்பாள் எனவும் பெயர் பெறுவர். சிறுப்பிட்டி இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயமும் செல்லப்பிள்யைார் ஆலயமும் இத்தகைய பழைமை வாய்ந்த தலங்களாகவும் சென்ற நூற்றாண்டிலமைந்த கட்டிடங்கள் உடையனவாகவும் காட்சியளிக்கின்றன..

"நாகதம்பிரான் வணக்கம் திராவிட மக்களின் பண்டைய வழக்கங்களில் ஒன்று இலங்கையில் புத்தூர், நாகர் கோவில், பொன்னாலை, செம்பியன்பற்று, மருதடிசேனை ஊர், கோட்டைக்கல்லாறு ஆகிய இடங்களில் காணப்படுவது போல இப்பிரதேசத்திலும் ஒரு நாகதம்பிரான் கோவில் காணப்படுகிறது. ஆண்டிற்கொருமுறை வைகாசி பௌர்ணமித் தினத்தில் பொங்கற்பெருவிழா சிறப்பாக நடைபெறுகிறது."

காளி அம்மன் கோவில், நாச்சிமார் கோவில் ஆகியவற்றில் வருடாந்த பங்குனி மாததிங்கட்கிழமைகளில் பொங்கல் பெருவிழாக்களும், பங்குனி கடைசித் திங்களன்று மிகப் பெரிய அளவிலான பொங்கல், பூசை வைபவங்களும் இடம்பெறும். பங்குனித் திங்களில் மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்திற்கு செல்லும் சராசரியான அக்கால சவாரி வண்டிமாடுகளும், தற்கால மோட்டார் வாகனங்களும் புத்தூர் விரைவாணிச் சந்தியில் அமைந்துள்ள நாச்சிமார் ஆலயத்தின் முன் முறிகண்டியில் நிற்பாட்டப்படுவது போல் காணிக்கை செலுத்தி விபூதி பிரசாதம் பெற்று செல்வது வழக்கமாக இருந்து வருகின்றது. நாச்சிமார் பற்றியும், ஆலய தோற்றம் பற்றியும் பல கதைகள் ஊரில் வழங்கி வருகின்றன.

உசாத்துணை நூல்கள் **பக்கம்**

1. யாழ்ப்பாண சரித்திரம். 141
ஸ்ரீமான் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

2. யாழ்ப்பாண வைபவமாலை 33
முதலியார் இராசநாயகம் உரை.

3. யாழ்ப்பாணவைபவ மாலை 03
வயாவிளான் க. வேலுப்பிள்ளை

4. தமிழகம் ஊரும் பேரும் 78
டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை

5. "எமது கிராமம் புத்தூர்" 1
மங்கயற்கரசி "லோகேஸ்வரன்

6. ஸ்ரீ சோமஸ்கந்தா வெள்ளிவிழா மலர். 141
"ஊரும் பேரும்" கட்டுரை
வழக்கறிஞர் ச.லோகேஸ்வரன்

7. ஈழத்து வாழ்வும் வளமும் 59
பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை

அத்தியாயம் - 2

கல்விநிலை

புத்தூர் பிரதேசத்தின் மழவராயர் காலப்பகுதியின் கல்விநிலை சிறப்பானதாகக் குறிப்பிட்டுக் கூறக்கூடியதாக அமையவில்லை. உயர் கல்வி பெற்ற மக்கள் மிகச் சிலரே காணப்பட்டனர். அவர்களின் எண்ணிக்கை விரல்விட்டுக் எண்ணிக் கூறலாம். பட்டணப்பகுதிட்கு சென்று உயர்வகுப்புகளில் படிக்கக்கூடிய பொருளாதாரபலம் வேளான் பிரபு குடும்பங்கட்கேயிருந்தது. அதுவும் போதிய போக்குவரத்து வசதிகள் விருத்தியுறாத அக்கால கட்டத்தில் குதிரைவண்டிகள், மாட்டுவண்டிகள் மூலம் பட்டணப் பாடசாலைகட்கும் செல்லவேண்டியிருந்தது. ஒரு சிலர் கால்நடையாகவும் சென்று கல்வி பெற்றிருக்கலாம்.

பாடசாலைகள்

புத்தூர் பிரதேசத்தில் அக்காலத்திலிருந்த மெதடிஸ் மிசன் ஆரம்ப பாடசாலை ஒல்லாந்தர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஒல்லாந்தரால் புத்தூர் சந்தியில் அமைக்கப்பட்ட புத்தூர் கோவிற்பற்று கிறிஸ்தவ தேவாலயத்தின் உட்புற பிரகாரத்தில் இயங்கி வந்தது. 1920ம் ஆண்டிலேயே தேவாலயத்தின் முன்புறத்தின் பருத்தித்துறை நெடுஞ்சாலைக்கு கிழக்குப் புறமாக கட்டிடமைத்து தனியாக இயங்கி வரத்தொடங்கியது. இலங்கையின் கல்வி நூற்றாண்டு விழாமலரில் (அத்தியாயம் 28, பக்கம் 351) ஒல்லாந்தர் கால கல்விநிலை பற்றி எஸ்.ஏ.டபிள்யூ. மொத்தவு என்பவர் எழுதிய கட்டுரையில் ஒல்லாந்தர் கால யாழ்ப்பாண ஆணைப்புலகோவிற்பற்று பாடசாலைகள் மொத்தம் முப்பத்திரண்டு (32) எனவும், அதில் புத்தூர் கோவிற்பற்று பாடசாலையும் ஒன்று எனவும் குறிப்பிடப்பட்டுள்ளமையும் ஈங்கு நோக்கத்தக்கதாகும். கிறிஸ்தவ மிசனின் பெண்கள் ஆரம்பப்பாடசாலை ஒன்றும் சந்திக்கு சற்று அப்பால் உட்புறத்தில் அமைந்திருந்ததாகவும், சோமஸ்கந்த வித்தியாலயம் தொடக்கப்பட்ட காலத்துடன் இது இயங்காதொழிந்ததாகவும் அறியமுடிகிறது. இத்தனிப்பெண்கள் கிறிஸ்தவ பாடசாலை ஒல்லாந்தர் காலமிசன் கோவிற்பற்று பாடசாலையுடன் பின்னி ஒன்றிணைந்து செயற்படுத்தப்பட்டிருக்கலாம். இக் கிறிஸ்தவ ஆரம்பப்பாடசாலைகள் அக்காலத்திலிருந்த புத்தூர் பிரதேச மக்கட்கு 5ம் வகுப்பு வரையான ஆரம்பக் கல்வியை மட்டுமே புகட்டின. புத்தூர் கிறிஸ்தவ பாடசாலைக்குப் பின்னர் ஆங்கிலேயர் காலத்து புத்தூர் கோவிற்பற்றின் சிறுப்பிட்டி இறையிலேயே ஒரு சைவத்தமிழ் வித்தியாசாலை ஆரம்பிக்கப்பட்டது. புத்தூர் மழவரயாரினால் சோமஸ்கந்தக் கல்லூரி ஸ்தாபிக்கமுன், பெருமளவு சைவச்சிறார்கள் சிறுப்பிட்டி சைவவித்தியாசாலைக்கே சென்றனர் எனவும் அறியமுடிகிறது. உயர் வேளான் வகுப்பைச் சார்ந்த ஒரு சில மாணவர்களே தொடர்ந்து உயர்கல்வி பெறப் பட்டணப் பகுதிப் பாடசாலைக்கட்குச் சென்றதாக அறியக்கிடக்கிறது.

மழவராயர் வாழ்ந்த காலப்பகுதியில் உயர் கல்வி என்பது உயர் குடும்பத்தவராலேயே அடையக் கூடிய குடும்பச் சொத்தாக இருந்து வந்தது. புத்தூர்

பிரதேசத்தில் பெருந்தொகையாக வாழ்ந்த குடியானவர்களின் அடையமுடியாச் சொத்தாகவும், நினைக்க முடியா ஒருவகைச் செல்வமாகவும் உயர் கல்வியிருந்தது. மணியகாரன் குடும்பம், உடையார் குடும்பத்தைச் சார்ந்த ஒரு சிலர் பட்டின கிறிஸ்தவ பாடசாலைகளில் உயர் கல்வி பெற்ற பின்னர் இங்கிலாந்து சென்றும கல்வியும், தொழிலும் பெறும் வாய்ப்புப் பெற்றனர். பாரிஸ்டர் இராமநாதன் என்பவர் இவர்களுள் குறிப்பிடத்தக்கவராவார். "அவர் தனது ஞாபகார்த்தமாக புத்தூர் சந்தியில் ஒரு வாசிகசாலையையும், நினைவுச் சின்னத்தையும் எழுப்பிச் சென்றுள்ளார்." புத்தூர் பிரதேசத்து அக்காலத்திலிருந்து ஒரு ஏழைக் குடியானவன் மகன் இத்தகைய உயர்ந்த கல்விக்கோ, பட்டம் பதவிகட்கோ ஆசைப்பட்டு இருப்பின் அது முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டது போல் எட்டாத காரியமாக இருந்திருக்கும். மழவராயரால் ஆரம்பிக்கப்பட்ட சோமஸ்கந்தா வளர்ச்சி பெற்று உயர் வகுப்புக்களை ஆரம்பிக்க முன் புத்தூர் பிரதேசத்தில் உயர் கல்விக்கு மாணாக்கரைத் தயார் செய்யும் எக்கல்விக் கூடமும் இருக்கவில்லை. சிறுப்பிட்டி இறையிலிருந்த சைவத்தமிழ் வித்தியாசாலையும் எட்டாம் வகுப்பு வரையே தமிழ் மொழி மூலம் கல்வி போதித்து வந்தது. கிறிஸ்தவ மிசனறிப் பாடசாலை முற்குறிப்பிடப்பட்டது போல் ஆரம்பப் பாடசாலையாகவே இருந்தது. எனவே புத்தூர் பிரதேசத்தில் பெருமளவு வாழ்ந்த பாமரர்களுடைய பிள்ளைகள் உயர் கல்வி பெறும் வாய்ப்பு அக்கால கட்டத்தில் சாத்தியமற்றதொன்றாக இருந்ததாக எமது அவதானத்திற் கொள்ள வேண்டும். 1910ம் ஆண்டின் குடிமதிப்பிலிருந்து பாடசாலை செல்ல வேண்டிய வயதினரான பிள்ளைகளில் 95% இன்னும் பாடசாலை போகவில்லை எனக் குறிப்பிடப்படப்படுகிறது. புத்தூர் பிரதேசத்தை பொறுத்தவரையிலும் இக்கூற்று மிகப் பொருத்தமானதாகும்.

பெண்கல்வி

புத்தூர் பிரதேசத்தில் மழவராயர் வாழ்ந்த காலப்பகுதியில் பெண் கல்வி முற்றாக புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே இருந்ததெனக் கூறமுடியும். பிரித்தானியர் காலத்துமட்டுமல்ல அதன் முன் ஒல்லாந்தர் காலத்திலும் பெண் கல்வி நாடு முழுவதுமே புறக்கணிக்கப்பட்ட நிலையை இலங்கை கல்வி நூற்றாண்டு விழா மலரில் ஒல்லாந்தர் காலகல்வி நிலை பற்றி எஸ்.ஏ.டபிஸ்யூ மொத்தவு எழுதிய பின்வரும் கூற்று நன்கு புலப்படுத்தும்.

"பெண்கல்வி"

"பெண்களின் கல்விக்கென பிரத்தியேக பாடசாலைகள் நிறுவவேண்டுமென்று ஒல்லாந்தர் கருதவில்லை. ஆனால் சிறுவர்களினதும், மற்றையவர்களினதும் சிறுமைத்தனமான நடத்தைகளால் மாணவிகள் சீரழிந்து விடாமலிருப்பதில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும் என்று ஸ்கோலார்ச்சனுக்கு திட்டமான அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அடிப்படைக் கல்வியைப் பெறுவதற்காக தம் பெண்குழந்தைகளை இளவயதிலேயே பாடசாலைக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டப்பட்டனர். அப்பெண்பிள்ளைகள் தமது 10வயதில் பாடசாலையை விட்டு விலகுதல் வேண்டும். அந்த இளவயதிலும் அக்குறுகியகாலத்தில் அன்று போதிக்கப்பட்ட கல்வியை கற்றவர்கள் நிரந்தரமாக நன்மையளிக்கக்கூடிய அறிவை

அதிகம் பெற்றிருக்கமுடியாது என்பதில் சந்தேகம் இல்லை. ஒல்லாந்தர் காலத்திலிருந்த மேற்கண்ட நிலையே தொடர்ந்தும் பிரித்தானியர் காலத்தும் நிலவியது. புத்தூர் பிரதேசத்தின் பாமர வெகுசனப் பெண்கள் பெருமளவில் படிப்புவசதிகளை பெறமுடியவில்லை.மழவரயார் காலத்து வேளான் குல இளை வனிதையர்கள் கல்விக்காகவோ வேறுகாரணங்கட்காகவோ வீட்டுக்கு வெளியே செல்வது எவ்வகையிலும் அனுமதிக்கப்படவில்லை. வரலாற்றுக்கால அரசர்களின் அந்தப்புர மகளிர்போல் வீட்டில் தமக்குரிய பகுதிகளில் முடங்கிக் கிடந்தனர். எனவே பாமர பெண் பிள்ளைகளின் நிலையைக் கூறத்தேவையில்லை. திருமணமாகிய குடும்பப் பெண்கள் மாத்திரமே கோவில் திருவிழாக்கட்கும், சமூகத்தின் மங்கள, அமங்கள விழாக்கட்கும் செல்ல அனுமதிக்கப்பட்டனர். திருமணமாகாத இளம் கன்னியர்கள் இன்று போல் அன்று இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு செல்ல அனுமதிக்கப்படாததற்கு எமது சமூகத்தின் கல்வியீனமும், குறிப்பாக பெண்கல்வி புறக்கணிக்கப்பட்ட நிலையுமே முக்கிய காரணமெனலாம். ஐந்தாம் வகுப்பு வரையான ஆரம்ப கல்வியை மாத்திரம் பெற்றுக்கொள்வதோடு பெண் கல்வித் தேவை முடிந்துவிட்டதாகக் அக்காலத்துக் கருதப்பட்டிருக்கலாம். குடியானவர்களின் பெண்பிள்ளைகள் மிகச் சிலரே ஐந்தாம் வகுப்புவரை படித்திருக்கலாம். பலர் அதுவும் படிக்காது தந்தை தாயாருடன் கூலி வேலைகளைச் செய்து காலத்தைக் கழித்ததாகவே கொள்ளக் கிடக்கின்றது. மழவரயார் வாழ்ந்த பிற்பட்ட காலங்களில் வேம்படி மகளிர் கல்லூரி போன்ற யாழ்ப்பாண பட்டின மகளிர் பெண்பாடசாலைகட்கு ஒரு சில உயர் குல மகளிர் மாத்திரம் சென்று எட்டாம் வகுப்பு வரை பயின்றதாகவும் அறியக்கிடக்கின்றது. இக்கால கட்டத்தில் புத்தூர் பிரதேசத்தில் எந்தப் பெண்மணியாவது உயர் கல்வி பெற்று சமூகத்தில் முன்னணியில் நின்றதாக எதுவித ஆதாரமுமில்லையென துணிந்து கூறலாம்.

கோயிற் பிரசங்கங்கள்

புத்தூர் பிரதேசத்தில் பொதுமக்களின் கல்வி ஒழுக்கத்தை விரிவுபடுத்த கோவில்களில் உபநியாசங்களும், நிகழ்த்தப்பட்டதாக அறியக்கிடக்கிறது. "இதிகாச புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கைக்குப் உகந்த உண்மைகளைப் பிராமண குருமாரும், தமிழ் அறிவுமிக்க சில பெருமக்களும் எடுத்துக் கூறியதாகவும் அறியமுடிகின்றது". ஐந்தாம் வகுப்பு வரையான பொதுக்கல்வி பெற்ற மக்கட்கு "கோவில்களில் நடாத்தப்பட்ட புராண இதிகாச கதைகள் பற்றிய அறிவும், அவற்றின் போதனைகளும் பரந்த வாழ்க்கை அனுபவத்தையும் தமிழ் அறிவையும் அளித்தன". புத்தூர் கோவிற் பற்றில் அந்தக் காலத்தமைந்திருந்த புத்தூர் சிவன் கோவில், ஆவரங்கால் சிவன் கோவில், சிறுப்பிட்டி அம்மன் கோவில், சிறுப்பிட்டி செல்லப் பிள்ளையார் கோவில் ஆகிய ஆலயங்கள் கொடியேற்றத்துடன் வருடாந்த திருவிழாக்களையும் நடத்தி வந்தன. இவ் விசேட விழாக்களிலும் வருடத்தின் பிற முக்கிய தினங்களிலும் கோவில்களில் புராணபடனமும், பிரசங்க உபநியாசங்களும் வழங்கப்பட்டன. பெரும்பாலும் கந்த புராணமே மிக அக்கறையுடன் வாசிப்பதும்,பயன் சொல்வதும் இடம் பெற்றதாகவும், அதன் மூலம் அங்கு சமூகமளிக்கும் மக்கள் இறையுணர்வும், போதனைகளும் பெற்றதாகவும் அறியமுடிகின்றது. ஆனால் அக்காலசமூக வாழ்க்கைப்படி உயர் குலத்தவரே கோவில்கட்கு சமூகமளிக்கவும், இத்தகைய பிரசங்கங்களில் பங்குபற்றவும் அனுமதிக்கப்பட்டனர். புத்தூர் பிரதேசத்தில்

பெருந்தொகையாக வசித்தபாமரமக்கள் ஒலிபெருக்கி வசதிகளற்ற அக்காலத்தில் வெளிவீதிகளில் நின்றும் தானும் இத்தகைய கலாட்சேபங்களைப் கேட்டு பயன் பெற்றிருக்கமுடியாது. ஆதிக்கவர்க்கத்தினரின் கெடுபிடிகட்கு பயந்து பெருந்தொகையான பாமர குடியானவர்கள் கோவில் வீதிகட்கு கூட சமூகமளிக்காது விட்ட நிலையில், இவை பெருந்தொகையான மக்கட்கு பயனளித்தன எனக் கூறமுடியாது. புத்தூர் பிரதேசத்தில் அக்காலத்து கோவில்களுள் புக அனுமதிக்கப்பட்ட ஒரு பகுதியினரே கோவில் உபநியாசங்களால் பயன் பெற்றிருக்கமுடியும்.

புத்தூர் பிரதேசத்தின் போர்த்துக்கேயர் கால கத்தோலிக்க தேவாலயங்கள் எதுவும் கிடையாது. ஒல்லாந்தரால் நிறுவப்பெற்ற மெதடிஸ்ற் மிசன் பரிலூக்கா தேவாலயம் ஒன்றே புத்தூர் சந்தியில் அமைந்துள்ளது. ஞாயிறு போதனைகளின் போதும் அளிக்கப்பட்ட பிரசங்கங்கள், கருத்துரைகள் மூலம் கிறிஸ்தவர் தமது அறிவினை வளர்த்தனர் எனக் கொள்ளப் போதிய ஆதாரமுண்டு அக்காலத்து மிசனரிப் பாடசாலை ஆசிரியர் இருவருமே கிறிஸ்தவர்களாக இருந்தனர். பெண்கள் ஆரம்பப் பாடசாலையிலும் ஒரு கிறிஸ்தவ பெண் ஆசிரியரும், அவரது கணவராகிய ஆசிரியருமே பணிபுரிந்ததாக அறியக் கிடக்கிறது. கிறிஸ்தவப் பெண்களும் ஆண்களும் வேறு இடங்கள் சென்றும் கல்வியில் உயர்ச்சி பெறும் வாய்ப்பும், தொழில் வாய்ப்பும் இருந்தமை அக்காலகட்டத்து பொது அம்சமேயாகும். கிறிஸ்தவ தேவாலயத்தினால் வழங்கப்பட்ட பிரசங்கங்கள் புத்தூர் பிரதேச கிறிஸ்தவ மக்களின் மத அறிவிலும், பொது அறிவிலும் வளர்ச்சியை கொடுத்தாலும், மொத்த சனத்தொகையில் அவர்கள் விகிதாசாரம் நூற்றுக்கு ஐந்துக்கு உட்பட்டதாகவே அமைந்திருந்தது. புத்தூர் கிராமத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய சில கிறிஸ்தவ குடும்பங்களும் அச்செழு தேவாலயத்திற்கு அருகில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினரும் மட்டுமே கிறிஸ்தவராகக் காணப்பட்டனர்.

எனவே புத்தூர் பிரதேசத்தின் பெருந்தொகையான பாமரமக்களின் சமய அறிவு விருத்தியில் இந்து, கிறிஸ்தவ தேவாலயங்கள் பெரும் பங்களிப்புச் செய்தது என்று கூறுதல் பொருத்தமற்றதாகும். பெருந்தொகையான பாமரக் குடியானவர்கள் படிப்பு, வாசனையோ கோவில் பிரசங்கங்கள் மூலம் கிடைக்கக் கூடிய அறிவோ அற்றுப் பரிதாபமான வாழ்க்கை நிலையிலிருந்தனர் எனக்கொள்வதே பெருமளவு பொருத்தமானதாகும்.

கல்விமான்கள்

புத்தூர் பிரதேசத்தின் கல்வி நிலை பற்றி ஆராய்ந்த நாம், இப்பகுதியில் வாழ்ந்த ஒரு சில கல்விமான்களையும், அவர்கள் வியத்தகு சேவையையும் எடுத்துக்கூறாதிருக்க முடியாது. இவர்களுள் பரிஸ்டர் இராமநாதன், சி.வை. தாமோதரம்பிள்ளை, பெரியதம்பி மணியம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவார். யாழ்மாவட்ட நீதிமன்றத்தில் சக்கடத்தார் ஆகக் கடமையாற்றிய கே.எம்.செல்லப்பா சிறந்த கல்விமான் மட்டுமல்ல யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர். அவரது நிழற் படம் யாழ் பொது நூல்நிலையத்தில் இன்றும் வைக்கப்பட்டுள்ளது. புத்தூர் தேரம்பிள்ளையார் ஆலய தர்மகர்த்தாவாகவும் விளங்கினார். பாரிஸ்டர் இராமநாதன் என்பவர் புத்தூரில் பிறந்து வட்டுக் கோடடை செமினரியில் உயர்கல்வி பெற்றி அங்கிருந்து பிரித்தானியா சென்று தொடர்ந்தும் படித்து. பாரிஸ்டர் பட்டம் பெற்றார். முன்னர் குறிப்பிட்டது போல் மீண்டும்

வந்து "புத்தூர் பகுதியில் சில சமூக சேவைகளும், நன்கொடைகளும் செய்த பின்னர் இங்கிலாந்து சென்று அங்கேயே தங்கிவிட்டதாகவும் அறியக்கிடக்கிறது. "பெரியதம்பி மணியம் எனப் பெயரிய அருணாசலம் கனகசபை என்பார் பிரித்தானியர் காலப் பிற்பகுதியில் வலிகாமம் மணியகாரனாக கடமையாற்றினார். உயர் குலத்தவர் என்பதோடு மாத்திரமன்றி மணியகாரன் தொழில் பார்க்கத்தக்க ஓரளவு ஆங்கிலக்கல்வியும் படிப்பறிவுமிருந்தமையாலேயே அவர்க்கு அவ் உத்தியோகம் வழங்கப்பட்டிருக்கவேண்டும். அது மட்டுமன்றி முன்னர் குறிப்பிட்ட யாழ்ப்பாண வைபவ மாலையும் காட்டியுள்ளது போல "அவர்மிக நாகரிகமான நடையுடை பாவனையுடையவ ரென்றும் வெள்ளைக்கார துரைத்தனத்தார்போல் குதிரை வண்டியிற் செல்லும் கனவான் என்றும் விதம்விதமான குதிரைகளை வைத்திருந்தாரென்றும்" அறியக்கிடக்கின்றது. பெரியதம்பிமணியம், பாரிஸ்டர் இராமநாதன் ஆகிய இருவரும் புத்தூர் பிரதேசத்திற்கே அதிக அறிமுகமானவர்கள். ஆனால் புத்தூர்ப் பகுதியிலே பிறந்த சி.வை.தாமோதரம்பிள்ளை எனும் பெரியார் தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் அறிமுகமான அறிஞர் எனின் மிகையாகாது.

சி.வை. என்பதின் முழு அர்த்தம் சிறுப்பிட்டி வைரவநாதர் தாமோதரம்பிள்ளை என்பதாகும். புத்தூர் கோவிற்பற்றின் தெற்கு இறையான சிறுப்பிட்டிக் கிராமத்தில் கி.பி 1832ம் ஆண்டுக்கு சரியான நந்தனவருடம் ஆவணி மாதம் 29ம் திகதி பிறந்தார். இவர் தந்தையார் பெயர் குருநாதர் வைரவநாதர். தாயார் ஏழாலையைச் சார்ந்த மயில்வாகனம் என்பவருடைய மகள் பெருந்தேவி என்பார். ஆரம்பத்தில் தனது தந்தையாரிடமும் பின்னர் சுன்னாகம் முத்துக்குமாரகவிராயரிடத்திலும் கல்வி கற்றார். தெல்லிப்பளை அமெரிக்கன் மிசன் கல்லூரியில் ஆங்கிலம் சில காலம் கற்றார். ஆங்கிலத்தில் உயர்தரக்கல்வியினை வட்டுக்கோட்டை (Batticotta seminary) செமினரியில் கற்று தனது இருபதாம் வயதில் வெளியேறினார். கோப்பாயில் சில காலம் ஆசிரியராகப்பணிபுரிந்தார். வணக்கத்திற்குரிய பார்சிவல் துரையின் வேண்டுதற்படி தமிழ் நாடு சென்று சென்னைத் "தினவர்த்தமானியில் பத்திரிகாசிரியரர்கவும் சேவையாற்றினார்." சென்னை பட்டனத்தில் முதன் முதல் தொடங்கப்பட்ட பல்கலைக்கழக கல்லூரியில் 1858ல் பீ.ஏ பட்டமும், பின்னர் 1871ல் பி.ஏ.எல் பட்டமும் பெற்றார். 1868ல் தொல்காப்பியம் சொல்லதிகாரத்தை நச்சினார் கினியார் உரையுடன் வெளியிட்டார். 1881ல் வீரசோழியம் இலக்கண நூலை அச்சிட்டார். சூளாமணி, தணிகையாகப் புராணம், கலித்தொகை பதிப்புகளையும் வெளியிட்டார். 1885ல் தொல்காப்பியம் பொருளதிகாரத்தையும், 1889ல் இலக்கண விளக்கத்தையும் அச்சிட்டு வெளியிட்டார்". இவரது சேவை கருதி சென்னை பிரித்தானிய அரசினர் இவருக்கு "றாவ் சாகிப்" என்னும் பட்டமளித்து கௌரவித்தனர். அரசில் "யென்றல் அக்கௌவுண்டன்ட்" ஆகவும் 1887ல் புதுக் கோட்டை உயர் நீதிபதியாகவும் கடமையாற்றினார். இப்பதவிகளோடு நில்லாது, அழியும் தறுவாயிலிருந்து ஏட்டுப் பிரதிகளைத் தேடி ஆராய்ந்து சங்கத்தமிழரின் பழந்தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை ஆராய்ந்து அச்சுவாகனமேற்றியமையே இவரது பெயரைத் தமிழ் கூறும் நல்லுலகம் போற்றக் காரணமாயிற்று. இவரைப் பற்றி பேராசிரியர். க.கணபதிப்பிள்ளை தமது ஈழத்து வாழ்வும் வளமும் என்னும் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"தமிழ் நாட்டவரும் முக்கியமாக யாழ்ப்பாணத்தவரும் தமிழின் பெருமைகளை மறந்து நிலை தடுமாறி வருகின்ற காலத்து, தமிழ்மொழியின் தவப்பயனால் உயர்.திரு.ஆறுமுகநாவலரவர்களும், சி.வை.தாமோதரம்பிள்ளையவர்களும்

யாழ்ப்பாணத்தில் வந்துதித்தனர். இவ் இரு தமிழ் பெரியார்கள் செய்த நன் முயற்சியாலும் ஓயா உழைப்பாலும் தமிழ்த்தாயும் "ஆரியம் போல் உலகவழக்கழிந் தொழிந்து சிதையாத சீரிளமை. "யோடு உலகத்தின் முன்னேற்றமடைந்தை மொழிகளுக்குள்ளே திறமைவாய்ந்த ஒரு மொழியாக உலவுகின்றாள். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளானாக வாழ்ந்த சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் 1901ம் ஆண்டுக்கு சமமான சார் ஆண்டு மார்கழி மாதம் 8ந் திகதி இந்நிலவுலகு நீத்து இறைவன் திருவடி சேர்ந்தார். இவர் பிரிவைப்பற்றி சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்கள் சொல்லிய பின்வரும் பாவினால் பிள்ளையவர்களின் அரும்பணியும் அழியாப்புகழும் நின்று விளங்கும்.

ஏட்டிலிருந்த அருந்தமிழ் நூல்களெனப்பலவும் தீட்டி வடுக்களைந் தச்சிலவார் த்து செந்தமிழ் பேர்நாட்டுனவித்துயர் தாமோதரேந்திரனென்று புகழ்பாட்டி லடக்கும் தகைத்தோ புலவர் பாடுதற்கே. இத்தகைய பெரும்பணி செய்த தாமோதரம்பிள்ளை ஈழத்தில் தனது தாயின் ஊராகிய ஏழாலையில் 1876ல் ஒரு சைவப்பிரகாச வித்தியாசாலையைத் ஸ்தாபித்து சுன்னாகம் குமாரசுவாமி புலவர் போன்ற பெரும் கல்விமான்களால் கல்விப்பணி ஆற்றியதும் குறிப்பிடதக்கது.

"வள்ளுவன் தன்னை உலகினிற்கே தந்துவான்புகழ் கொண்ட தமிழ்நாடு. எனப் பாரதியார் பெருமைபாராட்டி மார்தட்டியது போல் "சி.வை. தம்மை தமிழுலகிற்கே தந்து பெருமை கொண்டதும் நம் ஊரே." எனப் புத்தூர் சிறுபிட்டிப் பிரதேசம் பாடிக்கழித்துப் பெருமை கொண்டாடின் அது தற்புகழ்ச்சியாகாது. ஆயினும் சி.வை.தாமோதரம் நினைவாக நினைவாலயமோ சிலையோ சிறுபிட்டியில் அமையாதது பெருங்குறையாகும். சி.வை.தாமோதரம்பிள்ளை பிறந்த ஆண்டு 1832, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பிறந்த ஆண்டு 1822.

உசாத்துணை நூல்கள்.

		பக்கம்
1.	இலங்கை கல்வி நூற்றாண்டு விழா மலர். "ஒல்லாந்தர்கால கல்வி நிலை" கட்டுரை. எஸ்.ஏ.டபிள்யூ.மொத்தவு.	351
2.	ஸ்ரீ சோமஸ்கந்தா வெள்ளி விழா மலர். "ஊரும் பேரும்" கட்டுரை. வழக்கறிஞர். ச. லோகேஸ்வரன்.	114
3.	ஈழத்தமிழர் வாழ்வும் வளமும் பேராசியர் க.கணபதிப்பிள்ளை.	59
4.	யாழ்ப்பாணவைபவ கொமுகி. வயாவிளான் க.வேலுப்பிள்ளை.	214
5.	ஸ்ரீ சோமஸ்கந்தா வெள்ளிவிழா மலர். சி.வை.தாமோதரம்பிள்ளை கட்டுரை. பண்டிதமணி.சி.கணபதிப்பிள்ளை	87

அத்தியாயம் 3

மழவராயர் கந்தையா வரலாறு

தோற்றமும் குடிப்பிறப்பும் ஆய்வும்.

சைவத்தொண்டும், செந்தமிழ் தொண்டும் செவ்வனே ஆற்றி புகழ் படைத்த ஆறுமுகநாவலர் அடி சுவட்டை பின்பற்றி கல்வி பணியும், கோவிற்பணியும் ஆற்றி புத்தூர் பிரதேசத்துக்கே பெரும்புகழ் ஈட்டித் தந்தவர் சிற்றம்பலம் மழவராயரும், அவரது மைந்தன் கந்தையா வள்ளலுமேயாவர். யாழ்ப்பாணம் பிரதேசம் முழுவதிலுமே மழவராயர் என்ற பெயர் செல்வச்சீமானும், கொடைவள்ளலுமாகிய புத்தூர் மழவராயரயே குறிப்பதாக கொள்ளப்படும். "மழவர்" என்னும் பெயர் யாழப்பாண சரித்துரத்துடன் தொடர்புடையது "மழவர்" என்பது ஒரு வகை வீரரை குறிப்பதாக யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. யாழப்பாணத்தை ஆண்ட சிங்கையாரிய சக்கரவர்த்தி இந்தியாவில் இருந்து கார் காத்த வேளான் மரபினரான "மழவர்" வழியினரை படைப்பலம் பெருக்கும் நோக்குடன் இங்கு கொண்டு வந்து குடியேற்றிய செய்தியை பின்வரும் குறிப்பினால் அறியலாம். இந்தியாவில் உள்ள கார்காத்த வேளளார் பாண்டி மழவனையும், தம்பியையும், மைத்துனரான சண்பகமழவனையும் அவர் தம்பியையும் சிங்யாரிய சக்கரவர்த்தி வந்து குடிமக்களுடன் திருநெல்வேலியில் குடியேற்றி வைத்தார். "மேற்கண்ட மழவர் வம்சத்தில் ஒருவரே ஆதியில் புத்தூரில் குடியேறியவர் என்றும் அவர் வழிவந்தவரே செல்வச்சீமானும், கொடை வள்ளலுமாகிய புத்தூர் மழவராயர் என்றும் ஒருசாரார் வரலாற்றுரீதியாக முதன்மை கொடுக்கின்றனர். யாழ்ப்பானவைபவ கௌமுகிபடி மழவராய முதலி எனும் பெயரில் யாழ்ப்பாணத்தில் பல ஊர்களில் வேறு பலர் வாழ்ந்து இருக்கின்றனர். புலோலியில் மழவ பரம்பரையினரும், மாதகல், அல்வாய், வயாவிளான் எனும் ஊர்களில் வேறு மழவராய முதலிப் பரம்பரையினரும் வாழ்ந்து இருக்கின்றனர். எனவே சிங்கையாரிய சக்கரவர்த்தியுடன் வந்த பாண்டிய மழவன் பரம்பரையினரே யாழ்ப்பாணத்தின் பல ஊர்களிலும் குடியேறிய மழவர் பரம்பரை என்று எண்ணத் தோன்றுகிறது.

புத்தூரில் வாழ்ந்த மழவராய முதலியார் பற்றி வயாவிளான் க. வேலுப்பிள்ளையினால் தொகுக்கப்பட்ட யாழ்ப்பாண வைபவ கௌமுகியில் கிடைக்கப்பெறும் செய்திகள் பின்வருமாறு:-
"மழவராய முதலியார்"

இவர் புத்தூர் பிரபுக்களில் ஒருவர் இவர் தந்தை சிற்றம்பலம் மணியம் இவர் குஞ்ச உடையார் மகள் தெய்வநாயகி பொன்னம்பல முதலியார் மகள், பாகுதேவ முதலியார் மகள் கந்த உடையார் புத்திரியை விவாகம் செய்தனர். இவரது பிள்ளைகள் 1) வைத்திலிங்கம் 2) மழவராயர் 3) பெண்பிள்ளை ஒனறு.

பரராசசேகர மகாராசவின் காலத்தில் சிற்றூரில் இருந்து வந்து புத்தூரில் குடியேறிய மணங் கலந்த சேதுபதியாகிய பாலசிங்கம் என்பவரை தாய் வழியாக கொண்டவர்.

"சிற்றம்பலம் விவாகம் செய்தது செயதுங்க மாப்பான தாமோதரம்பிள்ளையின் புத்திரி செல்லம்மாவை."

மேற்படி குறிப்புகளில் இருந்து மழவராய முதலியாரின் தந்தையார் சிற்றம்பலம் மனியகாரன் என்றும, தாயார் தாமோதரம்பிள்ளை புத்திரி செல்லம்மா என்றும் அறியக்கிடன்றது.

தந்தையாரின் பெயரின் பின் மணியம் எனக் குறிக்கப்படுவதிலிருந்து அவர் வலிகாமம் பகுதியில் மணியகாரர் ஆக இருந்தாரோ என எண்ணத்தோன்றும். ஆனால் ஆராய்வுகளின்படி அவர் அரசாங்கத்தில் மணியகாரன் உத்தியோகம் பார்க்கவில்லை யென்றும் புத்தூர் சிறுப்பிட்டி பகுதி சிவன், அம்மன் ஆலய முகாமையாளர் என்ற ரீதியில் மணியகாரன் என அழைக்கப்பட்டிருக்கலாம் எனக்கொள்வதே பொருத்தமுடையதாகும்.

மழவராயரின் பெருஞ்செல்வம்.

மழவராயர் குடும்பத்தவர்க்கு பெருஞ் செல்வமும், சொத்தும் எவ்வாறு சேர்ந்தது என்பதும் ஆராய்வுக்குரியது. இவர் முன்னோரும் பரம்பரைபரம்பரையாகவே பூமிகளையும் சொத்துக்களையும் உடையவராக இருந்திருக்கலாம். மழவர் என்ற படைவீரருக்கு யாழ்ப்பான அரசரால் வழங்கப்பட்ட மானியங்களான நிலபுலன்கள் இவையாக இருந்திருக்கலாம். பின்னர் ஒல்லாந்தர் காலத்திலேயே இவற்றிற்குரிய தோம்புகள் எழுத்துரீதியாக ஆவணங்களாக வரையப்பட்டிருக்கலாம் என்பது ஒரு சாரர்வாதம்.

சிற்றம்பலம் மணியகாரரும், அவர்மகன் மழவராயரும் மலையாளத்துடன் புகையிலை வியாபாரம் செய்து அதிலேயே பெருமளவு சொத்துக்களை சேர்த்துக் கொண்டனர் எனவும் கூறப்படுகின்றது. புத்தூரில் மழவராயரும் மகன் கந்தையாவும் வசித்த அரண்மனை போல் பெரிய வீடும் (இன்றைய அன்னசத்திரம்) அதன் மேற்கே மிக நீளமாக அமைக்கப்பட்ட புகையிலை களஞ்சியப்படுத்தி வைக்க வசதியுள்ள மிகப்பெரிய கிட்டங்கி அறைகளும் யாழ்ப்பாணம், நல்லூர், பகுதிகளில் மழவராயரால் அமைக்கப்பட்ட பெரிய வீடுகளும், கிட்டங்கிகளும் புகையிலை பாழம் பாழமாக அடுக்குதற்காகவே ஆக்கப்பட்டிருந்தன. என ஆதாரம் காட்டப்படும். இக்கூற்றுக்கு மேலதிக ஆதாரமாக யாழ்ப்பாண வைபவ கொளமுகி "புகையிலை வியாபாரம்" என்ற தலைப்பிலான பின்வரும் கூற்றையும் கொள்ளமுடியும்.

ஆங்கிலேயர் காலத்து யாழ்ப்பாண தேசாதிபதியாக டைகர் துரை வந்த காலம் முதல் ஊர் திருத்தத்திற்கும் குடிகள் சேமத்திற்கும் வேண்டியவையெல்லாம் ஆராய்ந்து செய்து கொண்டே வருவராயினர். அப்படி வரும் காலத்திலே யாழ்பாணத்து புகையிலைக்கு மலையாளத்தில் பிரியம் உண்டாயிற்று. மலையாளத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் புகையிலை தொடர்பு தமிழரசர் காலத்தில் உண்டானது. அது பறங்கியர், ஒல்லாந்தரால் சிறிது சிறிதாக விருத்தியுற்று ஆங்கிலேயர் காலத்திலே பெரு விருத்தியுற்றது.

எனவே ஆங்கிலேயர் காலத்து பெருவிருத்திபெற்று யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் வாழ்ந்தவர்களை செல்வந்தராக்கிய மலையாளப் புகையிலை வியாபாரமே மழவராயரையும் பெரிய தனவந்தராக மாற்றியது என்பது பெருமளவு பொருத்தமடையதாகும்

மழவராயரும் அவர் மகன் கந்தையாவும் புத்தூர் பிரதேசத்துக்கு தெற்கே அமைந்துள்ள சிற்றூராகிய சிறுப்பிட்டியிலே அவதரித்தனர். சிறுப்பிடடி வித்தியாசாலைக்கு மேற்கே அமைந்துள்ளதொரு காணி மழவராயன் சீமா என அழைக்கப்படுகின்றது.

சிறுப்பிட்டியிலே வாழந்த சிற்றம்பலம் மழவராயர் என்பவர் சின்னையா மகள் சின்னத்தங்கச்சி பிள்ளையை விவாகம் செய்தார். அவர்களுக்கு தெய்வானைபிள்ளை தங்கச்சிப்பிள்ளை (கறுப்பாத்தை) என இரு பெண் பிள்ளைகளும், கந்தையா என ஒரு ஆண்மகனும் பிறந்தார்கள் மழவராயர் மகன் கந்தையா 10.09.1887ம் ஆண்டு அவதரித்தாராக ஆதாரபூர்வமாக தெரிகிறது எனவே அவரது தந்தையாராகிய சிற்றம்பலம் மழவராயர் அதற்கு ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன் 1840ம் ஆண்டளவிலே பிறந்திருக்கலாமென ஊகிகக்முடியும்.

மழவராயரின் கல்விப் பணி.

பொதுவாக புத்தூரிலிம் அதனை சார்ந்த பிரதேசங்களிலும் மழவராயர் பாடசாலை மழவராயர் அன்னசத்திரம் மழவராயர் ஆதீனம் எனவே அழைக்கப்படுகின்றதே தவிர மழவராயர் மகன் கந்தையாவினால் அமைக்கப்பட்ட பாடசாலையெனக் கூறப்படுவதில்லை.

வள்ளுவன் கூறியது போல

"மகன் தந்தைக்காற்றுமுதவி அவன் தந்தை யென்நோற்றான்
கொல் என்னும் சொல்"

என்ற குறள் வழி நின்று தந்தையாரின் பெயரை விளக்கி நிற்கிறார். வள்ளல் கந்தையா. உண்மையில் மழவராயரின் மகன் கந்தையாவினாலேயெ இன்றைய புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்த கல்லூரி 22.04.1931ம் ஆண்டிலே ஸ்தாபிக்கப்பட்டது.

ஆனாலும் குபேரசம்பத்து படைத்த சிற்றம்பலம் மழவராயர் கல் நெஞ்சம் படைத்த கருமியாக வாழவில்லை மழவராயாரின் தான தர்ம சிந்தனைகளும் பணிகளுமே அவரது மகனான கந்தையாவினால் பூரணத்துவம் பெற்றது. புத்தூர் மேற்கில் பிலாவடி அம்மன் என அழைக்கப்பட்ட சிறு ஆலயத்தை பொறுப்பேற்று புத்தூர் சிவன் கோவிலாக பெருப்பித்துக் கட்டி கும்பாபிஷேகம் செய்து பெருமளவு காணி பூமிகளையும் அதன் பரிபாலனத்திற்காக எழுதி வைத்து சென்ற வள்ளல் சிற்றம்பலம் மழவராயரே ஆவார். அவரின் பின் அவர் மகனான கந்தையா அதன் முகாமையாளராக இருந்து தந்தையின் பணிகளை தொடர்ந்து பெருந்தொண்டாற்றினர்.

தந்தையாகிய சிற்றம்பலம் மழவராயரே சோமஸ்கந்த கல்லூரி ஸ்தாபித்தற்கும் வழிவகுத்தார். மக்கள் தேவையை மனதிற்கொண்டு 12.01.1918ல் புத்தூர் சைவவித்தியாசாலை ஸ்தாபித விஞ்ஞாபனம்" என்றும் மகுடத்தில் ஒரு விளம்பரத்தை பிரசுரித்தனர் அது வருமாறு-

"நிகழும் பிங்கள வரு தை மீ ருஉ 18.01.18 வெள்ளிக்கழமை காலை வரும் சுபமுகூர்த்தத்தில் புத்தூரில் மணியகாரனது கிட்டங்கியில் ஓர் சைவவித்தியாசாலை ஸ்தாபிக்கப்படும்.

அன்றிரவு ஆறு மணிக்கு அவ்விடத்தில் சங்கானை ஸ்ரீ நாகலிங்க சுவாமிகளால் பக்கவாத்திய சகிதம் குங்கிலியக்கலயநாயனர் சரித்திரமும், சிறுப்பிட்டி சைவவித்தியாசாலை ஸ்தாபகரும் ஆசிரியருமாகிய ஸ்ரீ.கு.கனகசபை அவர்களால் கல்வி என்னும் விடயமும் பிரசங்கிக்கப்படும்.

அக்காலங்களில் சைவசமயாபிமானிகளாயுள்ளரனைவரையும் தங்கள் பிள்ளைகளுடன் சமூகமாயிருந்து எமது முயற்சிக்கு உதவிபுரியுமாறு வேண்டுகிறேன்".

இங்ஙனம் - **சி.மழவராயர்**

இக் கருத்தை நிறைவேற்று முன் திரு.மழவராயரும் மறைந்தார். மேற்படி விளம்பரத்திலிருந்து மழவராயரே புத்தூரில் ஒரு சைவ வித்தியாசாலையை ஸ்தாபிக் வேண்டும் என்ற எண்ணக் கருத்தை முதன்முதலில் கொண்டிருந்தார் என்று அறிய முடிகிறது. தந்தையின் கல்விப் பணியையே தனயன் கந்தையாவேள் பூரணத்துவமாக்கினர் எனக் கொள்வதே சாலப் பொருந்தும். எனவே பொது மக்கள் மழவராயர் பாடசாலை எனப் பேச்சு வழக்கில் கூறிக் கொள்வது உண்மையில் மிகப் பொருத்தமானதென்பதை தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

கல்விப் பணிக்காய தூண்டுதல்கள்.

1918ம் ஆண்டிலேயே சிற்றம்பலம் மழவராயர் புத்தூர் பிரதேசத்தில் ஒரு சைவத் தமிழ் வித்தியாசாலையின் அவசியத்தையிட்டுச் சிந்திப்பதற்கும் பின்னர் 1931ல் மழவர் கந்தையர் ஸ்ரீ சோமஸ்கந்த வித்தியாலத்தை ஆரம்பித்ததற்கும் தூண்டுதல்களாக அமைந்த காரணிகள் எவை என ஆராய்ந்து அறிவதும், பொருத்தமானதாகும்.

புத்தூர் பிரதேசம் அமைந்துள்ள வலிகாமம் கிழக்குப் பகுதியில் அந் நாளிற் கல்வியில் ஆசையுமாற்றலும் அபிமானமுடைய ஆயிரக்கணக்கான பிள்ளைகள் கற்றற்கு ஏற்ற காலாசாலைகள் இன்றித் தவித்தனர். பொதுப் போக்குவரத்து சாதனங்கள் விருத்தியுறாத அந்நாளில் யாழ்ப்பாணம் வட்டுகோட்டை முதலிய பகுதிகட்குசென்று கல்வி பயில்வதென்பது சாதாரண பொது மக்கட்கு முடியாத காரியமாகவிருந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலமான இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பல இடங்களில் மிஷனறிப் பாடசாலைகள் நன்கு ஸ்தாபிதமாகி செயல்பட்டபோதும் வலிகாமம் கிழக்கில் அவைதானும் போதியளவினதாக விருக்கவில்லை. இப்பிரதேசத்து வாழும் இளஞ்சிறார்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்ய சிறந்ததொரு பாடசாலைதாபிக்க வேண்டுமென இப்பகுதியில் வாழ்ந்த கல்வி அபிமானிகள் மழவராயரைத் தூண்டியிருக்கலாம். இதனை நன்குணர்ந்து யதார்த்த பூர்வமாகச் செயற்படும் விதத்தில் மழவராயரும், பின்னர் அவர் மகனும் சைவத்தமிழ் பாடசாலை ஒன்றைத் தாபிக்க முனைந்திருக்கலாம்.

இதனை விட மழவராயர் வாழ்ந்த காலத்து சற்று முன்னர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியை அடுத்த காலகட்டங்களில் யாழ்ப்பாண பிரதேசத்திலும் தமிழ் உலகிலும் சைவத் தொண்டும் செந்தமிழ்த் தொண்டும் செவ்வனே ஆற்றிப் பெரும் புகழ் படைத்த ஆறுமுகநாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, சேர்.பொன்னம்பல இராமநாதன் ஆகியோரின் அடிச்சுவட்டை பின்பற்றி மழவராயரும் புத்தூர் பிரதேசத்தில் வாழ்ந்த சைவத்தமிழ் மக்களுக்கு சைவமும் கல்வியும் ஓங்கி வளர்க்க வல்ல வித்தியாலயம் ஒரு அமைக்கப்பட வேண்டுமென கருதியிருக்கலாம். மேற்கூறிய

பெரியார்களின் முன்மாதிரியை மழவராயரும் கந்தையாவும் பத்திரிகை வாயிலாகவும், சைவத்தமிழ் அபிமானிகளின் வாயிலாகவும் நன்கறிந்து, ஆழ உணர்ந்துகல்விப் பணியும், சைவப் பணியும் ஒருங்கே வளர்க்க பெருவிருப்புக் கொள்ளுமாறு தூண்டப்பட்டிருக்கலாம். சைவப் பிரகாச வித்தியாலயம் ஆரம்பத்தில் வண்ணார் பண்ணையில் நாவலரால் அமைக்கபட்டது. 1890 இல் யாழ் இந்துக் கல்லூரியாக மாறியது. பின்னர் யாழ்ப்பாணகுடாநாட்டில் பல பாகங்களிலும் சைவ வித்தியாலயங்கள் அமைக்கவேண்டும் என்று ஆறுமுகநாவலரின் பேராவலும் பிரச்சாரங்களும் நடைமுறைக்கு வந்தன. சேர்.பொன்.இராமநாதன் அவர்களால் மருதனார்மடம், இராமநாதன் கல்லூரி, திருநெல்வேலி பரமேஸ்வரா ஆண்கள் கல்லூரி ஆகியன சைவக் கலாச்சாரத்தையும், கல்வி அறிவையும் விருத்தி செய்தன. உரும்பிராய் இந்து, உரும்பிராய் சைவத்தமிழ், சாவகச்சேரி இந்து முதலிய பாடசாலைகள் குறிப்பிடத்தக்கன. இவ்வகையில் புத்தூர் சிறுப்பிட்டி பிரதேசத்தில் ஸ்ரீநிமான் கனக சபை 1896 இல் சிறுப்பிட்டி சைவ வித்தியாசாலை ஆரம்பித்தார். இது தற்போது சிறுப்பிட்டி இ.த.க என அழைக்கப்படுகிறது.

ஆறுமுகநாவலர் கோப்பாயில் 1892ல் ஒருசைவப்பிரகாச வித்தியாசாலையை (தற்போது கோப்பாய் நாவலர் வித்தியாசாலை) எமது பிரதேசமாகிய சிறுப்பிட்டியிலே பிறந்து சி.வை.தாமேதரம்பிள்ளை தமது தாயாரின் ஊரான ஏழாழையில் ஒரு சைவப் பிரகாச வித்திசாலையையும் தாபித்தார். ஏழாலை சைவப்பிரகாச வித்தியாசாலையின் ஆண்டறிக்கையில் (1878) அதன் தலைமை ஆசிரியராகவும் சுன்னாகம் குமாரசாமிப் புலவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார். தமது ஊரிலே பிரபு ஆகிய பிள்ளையவர்களின் இவ்வித்தியாசாலையை ஸ்தாபித்து நடத்தி வருவது போல அந்த அந்த ஊரிலேயே இருக்கும் சைவப் பிரபுக்களும் செய்து வருபவர்களாயின் சைவசமயம் தாழ்ச்சியடைய இடமுண்டாகுமோ." இத்தகைய கருத்துக்களால் தூண்டப்பட்டு இதனையடுத்த காலகட்டங்களில் சேர். பொன். இராமநாதன்., இந்துபோர்ட் இராசரத்தினம் போன்ற பெரியோர்கள் யாழ்ப்பாணத்தின் பல கிராமங்களில் சைவத்தமிழ் பாடசாலைகளை நிறுவினர் இத்தகய சைவத்தமிழ் பெரியார்களின் முன்மாதிரியும் தாபகருக்கு தூண்டுதலாக அமைந்திருக்கலாம்.

மழவ கந்தையாவின் கல்விப் பணி.

சிற்றம்பலம் மழவராயர் தமது கருத்தை நிறைவேற்ற முன் மறைந்தனர். தந்தையின் உள்ளக் கருத்தைத்தெள்ளிதில் உணர்ந்த அவர்தம் மைந்தர் கந்தையா என்னும் வள்ளலே பிரமோதூத வருடம் தைமாதம் 24ம் தேதி வெள்ளிக்கிழமை 06. 02. 1931ல் ஸ்ரீ சோமாஸ்கந்த வித்தியாலயம் பிரதிஷ்டை அபிடேகம் செய்ய மகுடத்தில் ஒரு விளம்பரம் செய்தார். அது வருமாறு-

"நிகழும் பிரமோதூத உரு தைமீ 24 வெள்ளிக்கிழமையன்று வரும் சுபமுகூர்த்தத்தில் புத்தூர் கிராமத்தில் ஸ்ரீ சோமாஸ்கந்த வித்தியாலயம் பிரதிஷ்டை அபிடேகம் செய்து, உடனே பெரியபுராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராணம் படன ஆரம்பம் செய்யப்பெற்று பங்குனி மீ 12 புதன்கிழமை பிற்பகல் 3 மணிவரையும் பிராமணர்களுக்கு அரிசி, வஸ்திரம், தெட்சணை முதலியனவும் இயன்றவரையில் வழங்கப்படும். இரவு 7 மணி தொடக்கம் 12 மணிவரையும் வாத்தியம், நடனம் முதலியன நடைபெறும். பின்பு புராணம் திருக்காப்புச் செய்யப் பெறும். அதன்மேல் மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரமும் நடைபெறும் பின்னர் விக்கினேஸ்வரப்

பெருமான், உமாமகேஸ்வரர், திருத்தொண்டர் முதலியோர் ஊர்வலம் வருவார்கள். அடுத்தநாள் வியாழக்கிழமை ஏழைகட்கு அன்னதானஞ் செய்யப்படும்.

பிரசோற்பதி வரு சித்திரைமீ தொடக்கம் ஒவ்வொருமாதங்களிலும் வரும் திருத்தொண்டர் குருபூசைத் தினங்களில் அவரவர் சரித்திரங்கள் குறித்த வித்தியாலயத்தில் வாசிக்கப்படும். சித்திரை மீ 9 புதன்கிழமை பகல் வித்தியாரம்பம் நடைபெறும். ஆகையால் அன்பு நிறைந்த சிவநேசர்களை அந்தந்த தினங்களில் வந்து தரிசித்துக் கொள்ளுமாறு அடியேன் வேண்டிக்கொள்கின்றேன்."

இங்ஙனம் - ம.கந்தையா.

இவ்விளம்பரத்தில் கண்டபடி பிரசோற்பத்தி வருடம் சித்திரைத் திங்களில் 9ம் தேதியான சுக்கிரவாரத்தில் 22. 04. 1931 சுபவோரையில் ஸ்ரீ ஆர். சுந்தராச்சாரியர் பி.ஏ. அவர்கள் தலைமையில் ஆரம்பமாயின. ஆங்கிலப் பாடசாலையில் அதிபர் உட்பட ஒன்பது ஆசிரியர்களும், தமிழ்ப் பாடசாலையில் எட்டு ஆசிரியர்களும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களை அடுத்து உயர்வகுப்பினரிடையேயும் நகரங்களிலும் மட்டும் தொடங்கிய ஆங்கிலக் கல்வியானது, இக்காலகட்டத்தினிறுதியில் கிராமிய மத்தியவகுப்பினரிடையேயும் பரவியது. இதனை நன்குணர்ந்து போலும் மழவராயர் கந்தையாவும் தனித்துச் சுயமொழிப் பாடசாலையை மாத்திரம் அமைக்காது, அத்துடன் சேர்த்து ஆங்கிலப்பாடசாலை ஒன்றையும் தாபித்தார்.

"ஆங்கிலப் பாடசாலையின் பரீட்சைக் குறிப்பின்படி முதலாம் வருடமுடிவில் இலன்டன் மற்றிக்குலேசன் வகுப்பில் 2 மாணவர்களும், அடுத்த வகுப்பான 7ம் வகுப்பில் 7 மாணவரும், 6ம் வகுப்பில் ஒருவரும் 5ம் வகுப்பில் 5 மாணவரும் இரண்டாம் வருட வகுப்பில் (2nd Year) 10 மாணவர்களும், முதலாம் வருட வகுப்பில் 22 மாணவர்களுமாக மொத்தம் 71 மாணவர்கள் வாசித்தனர் என்றாலும் வரவுச்சராசரி 56 மாத்திரமிருந்து. இத்தொகையில் 33.2 வீதம் தகுதியான மாணவரின் சராசரியாகும் இவ்வாண்டு ஆசிரியர் வேதனமாகவும், பிற செலவுகளாகவும் ரூபா 3538.92 சதம் முடிந்தது இச் செலவுகள் யாவும் ஸ்தாபகரின் சொந்த வருமானத்திலிருந்தே செலவாயின."

நாட்டின் பொருளாதாரத்தை முன்னிட்டு அனைவர்க்கும் இலவசக் கல்வியே வழங்கப்படுமென்பது அறிவிக்கப்பட்டது. இலங்கை முழுவதும் 1945ல் இலவசக்கல்வி முறை முதன் முதலாரம்பிக்கப்பட்டபோதும், 1931ம் ஆண்டிலேயே இலவசக் கல்வியளித்த முதற் பாடசாலையென்னும் பெருமையும் தட்டிக்கொண்டது.

உசாத்துணை நூல்கள்

1. யாழப்பாண வைபவ மாலை.
   முதலியார் குல சபாநாதன் உரை
2. யாழப்பாண வைபவ கௌமுகி 222
   வயாவிளான் க. வேலுப்பிள்ளை
3. ஸ்ரீ சோமாஸ் கந்த வெள்ளிவிழா மலர் 97
   "சோமஸ் கந்த தோற்றமும் வளர்ச்சியும் முன்னாள் அதிபர் க. வீரசிங்கம்.

அத்தியாயம் 4

மழவராயர் கந்தையாவின் தர்மசாசனமும், அதன் வரையறைகளும்.

மழவராயர் கந்தையா தனக்குப் பின்னரும் பாடசாலை தொடர்ந்தும் அரசினரின் உதவிகளை எதிர்பாராது, நன்முறையிற் செயற்படுத்தத்தக்கவாறு, 1934ம ஆண்டு மார்ச் மாதம் 7ம் திகதி இப்போது மூன்று கோடி ரூபாய்க்கு மேல் பெறுமதி வாய்ந்த 54 ஆதனங்களை தருமசாசனம் செய்தும் (திரஸ்தி) தருமபரிபாலகர் நியமனம் செய்தும் ஒரு சாசனத்தை நிறைவேற்றினர். மிக நீண்ட குறிப்புக்கள் எழுதப்பட்ட அத்தரும சாசனத்தில் மிக முக்கிய குறிப்புகள் வருமாறு.

"குறித்த வித்தியாலயத்தில் கல்வி பயிற்றும் உபாத்தியாயர்களின் சம்பள ங்கள், கல்வி பயிற்றப்படும் பிள்ளைகள் வாசஞ் செய்யும் விடுதிச்சாலையின் செலவுகள் அதற்காகிய வேலைக்காரரின் சம்பளங்கள் உபாத்தியாயர் வசிக்கும் வாசஸ்தலங்களை பாவிப்புக்கு ஏற்றவைகளாய் வைத்திருக்கும் செலவுகள் முதலான இச்செலவுகளின் பொருட்டு குறித்த வித்தியாலயத்தில் நயத்துக்குத் தருமசாசனம் செய்யவும்," எனக் கூறப்பட்டுள்ள ஒரு சில வாக்கியங்களிலிருந்தே அதன் நோக்கங்களை நன்கு அறிந்து கொள்ளலாம்.

ஆரம்பத்தில் ஆங்கிலப் பாடசாலையில் கற்ற மாணவரிடமிருந்து சிறிதளவு சம்பளம் வசூலிக்கும் ஒழுங்குகள் இருந்தது ஆனால் நாட்டின் பொருளாதாரத்தை முன்னிட்டு இலவசக் கல்வி வழங்கப்படும் என்பது அறிவிக்கப்பட்டது. என்றாலும் ஆசிரியர்களுக்கான வேதனச் செலவு முதலியவற்றுக்கு அரசினர் உதவி நன்கொடையை பெறவோ, தன் அந்தஸ்துக்கு குறைவுத்தரத்தான கவ்விச் சட்டங்கட்கு கட்டுப்பட்டு நடக்கவோ ஸ்தாபகர் கருதவில்லை. தொடர்ந்து அரசினர் உதவி நன்கொடையை எதிர்பாராதே பாடசாலையை நடாத்துவதாக உறுதியான உள்ளத்துடன் தீர்மானித்துத் தமக்கு பின்னின்றும் இத்தாபனம் தளர்ச்சி இன்றி ஆதரிக்கபடுதற்கு ஏற்றதாக தர்மசாசனத்தை ஆக்கி வைத்தார்.

1936ம் ஆண்டு வைகாசி மாதத்துப் பூர்வபக்கப் பஞ்சமித் திதியில் திரு. மழவ கந்தையா வள்ளலார் அமரராயினார்.

அவ்வாண்டு யூன் மாதம் 15ம் திகதியிலிருந்து தருமசாசனத்தில் குறிப்பிட்ட "திரஸ்திகள்" பாடசாலை நிர்வாகத்தைச் சீர்செய்வதற்கு ஒரு மகாசபை கூட்டினார். அச்சபைக்கு திரஸ்திகளுள் ஒருவரான சுவாமிநாதர் பொன்னம்பலம் தலைமை வகித்தார். திரு. கே. எம். செல்லப்பா செயலாளராக கடமையாற்றினார். இச்சபை ஒரு காரிய நிருவாக குழுவை அமைத்தது.

திரு. சு. பொன்னம்பலம்	தலைவர்
திரு. எஸ். தில்லைநாதன்	உபதலைவர்
திரு. கே. எம். செல்லப்பா	செயலாளர்
திரு. தம்பி இராமநாதர்	உபதபாலதிபர்
திரு. வி. செல்லப்பா	ஆசிரியர்
திரு. எஸ் தாமேதரம்பிள்ளை	புத்தூர் கிழக்கு விதானையார்

தமிழ் ஆங்கில பாடசாலைத் தலைமையாசிரியர்கள் அனைவரும் நிர்வாக சபையின் மேலதிக உறுப்பினர்கள் ஆவார்.

இக்கலலூரித்தாபகருக்கு பின் திரு. எஸ் தில்லைநாதர் (1935-42) அவர்களும் திரு க. பொன்னம்பலம் (1942-49) அவர்களும் திரு. ரி. மாணிக்கவாசகர் (1949-50) அவர்களும் முகாமையாளர்களாக கடமையாற்றினர்.

1950ம் ஆண்டு தொடக்கம் முடிக்குரிய நியாயத்துரந்தர் திரு.ரி முத்துச்சாமிபிள்ளை முகாமைகாரராயினரென்பதும், திரு. க. பொன்னம்பலம் அவர்களுடன் திரு. தி. மாணிக்கவாசகரும் திரஸ்தியாக நியமனம் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. தர்மசாசனத்தில் தாபகர் குறிப்பிட்ட முக்கிய நோக்கங்கள்.

முன்னர் குறிப்பிட்ட தாபகரின் தர்மசாசனத்தான முக்கிய குறிப்பான வித்தியாலாத்தலமைக்கப்பட்டிருக்கும் ஆலயத்தின் நித்திய நைமித்திய செலவுகட்கான ஒழுங்குகள் அவரது நோக்கத்தை தெளிவுபடுத்தும். கல்வியை சைவசமய கைங்கரியங்களோடு இணைந்து வழங்குவதனையே தாபகர் பெரிதும் விரும்பினர். சமயச்சார்பற்ற கல்வியை அவரால் சிந்திக்கவும் முடியாதிருந்தது.

கல்விமானும், கொடை வள்ளலுமாகிய சோ. பொன். இராமநாதன் தான் ஆரம்பித்து பரமேஸ்வரக் கல்லூரியுள், பரமேஸ்வரப் பெருமானுக்கு ஒரு ஆலயமும் சமைத்து எதிர்கால சந்ததியினர் சைவமும் தமிழும் இனைந்து நூலிலும் செயலிலும் கற்க வழி சமைத்தது போல, கொடை வள்ளல் மழவராயர் கந்தையாவும் தான் அமைத்த சோமஸ்கந்த வித்தியாலயத்தில் ஸ்ரீ சோமாஸ் கந்த மூர்த்திக்கும் ஓர் ஆலயம் சமைத்து நித்திய நைமித்திய பூசைகட்கான ஒழுங்குகளையும் செய்து எதிர்கால மாணவசந்ததியினர் பயன்பெறவழிகோலினார்.

ஸ்ரீ சோமஸ் கந்த வித்தியாலயம் என அவரால் நாமகாரணம் சூட்டப்பட்ட பெயரே தாபகரது சமயப்பற்றையும், நோக்கையும் தெளிவுபடுத்தும். சிவன் கோவில்களுள் உள்ள மூர்த்திகளுள் ஸ்ரீ தியாகராஜ மூர்த்தியை விஷேடமாக வணங்குவது வழக்கம். அம்மூர்த்தியையே ஸ்ரீ சோமஸ்கந்த மூர்த்தியென்று சொன்னால்(ச : உமா ஸ்கந்த) சிவபிரான் உமாதேவியுடனும், ஸ்கந்தபொருமானுடனும் எழுந்தருளிய மூர்த்தி சிவன், முருகன், தேவி உருவங்களை உடையது. அதிகரிக்கும் பஞ்சாட்சரத்துக்கு மூர்த்தம் ஸ்ரீ சோமாஸ்கந்த மூர்த்தியோயாம். தூய பஞ்சாட்சரத்தை இம்மையில் பயன் பெறவும, சூக்கும பஞசாட்சரத்தை மறுமையில் பயன் பெறவும், அதிகரிக்கும் பஞ்சாட்சரத்தை நிட்டை கூடவும் சைவமக்கள் ஜெபம் செய்வார்கள். புத்தூர் சிவன்கோவிலில் தர்மகர்த்தாவாக இருந்த ஸ்ரீ மழவராயர் கந்தையா, அதன் முன்னால் தன்னால்ஸ்தாபிக்கப்பட்ட வித்தியாலயத்திற்கு ஸ்ரீ சோமஸ் கந்த எனப் பெயரிட்டு, சிவன் ஆலயத்துடன் இணைந்து செயற்பட வழிவகுத்தார். சிவன் கோவிற் தேர்த்திருவிழாவிலன்று தேருக்கு ஸ்ரீ சோமஸ்கந்த மூர்த்தியை எழுந்தருளச் செய்து ஆசிரியரும், மாணவரும் விசேட பூசைகளிற் கலந்து சமயப்பணியும், கல்விப்பணியும் ஒன்றினை ஒன்று தழுவிச்செல்ல வழிசமைத்தார். வருடாந்தம் பாடசாலை அத்திவாரதினத்தன்று சிவன் கோவிலில் வித்தியாலயத்தின் பேரில் விசேட பூசை வைபவங்களுடன் புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்த மூர்த்தியை முத்துசப்பறத்தில் எழுந்தருளச் செய்து கல்லூரிக்கு ஊர்வலமாக மாணவர் குழாம் காவிவருவது இன்றும் கண்கொள்ள காட்சியாகும். பாடல் பெற்ற தலமான திருக்கேதீச்சரத்துக்கும் வருடத்தில் ஒரு நாள்

பூசையும், அதில் மாணவரும், ஆசிரியரும் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் தாபகரால் செய்யப்பட்டுள்ளதெனின் அவரின் சமய ஈடுபாடு எத்தகையது என விளங்கிக்கொள்ளலாம். சமயமும் கல்வியும் இணைந்து செயற்படுவதே அவர்மேலான நோக்கம் ஆகும்.

காணிகளும் கட்டடங்களும்.

மழவராயர் கந்தையாவினால் 1934ம் ஆண்டில், ஸ்ரீ சோமஸ் கந்த வித்தியாலயத் தேவைகட்கும், அதன் செலவுகட்கான வருமானத்தைப் பெற்றுகொள்வதற்குமாக 54 காணித்துண்டுகள் தருமசாசனம் செய்யப்பட்டன. இக் காணித்துண்டுகள் புத்தூர் கிழக்கு வளவுக் காணிகளும், வயற்காணிகளும், புத்தூர் மேற்கிலான வளவுக்காணிகளும், பளைப் பிரதேசத்திலான 200 ஏக்கர்கட்கு மேற்பட்ட தென்னந்தோட்டங்களும், யாழப்பாணம் கச்சேரியடியிலும் பெரியகடைபகுதியிலுமான காணிகளும், கட்டிடங்களுமாகப் பலவிடத்திலும் செறிந்தமைந்துள்ளன. இவற்றிலிருந்து வரும் நிதி கல்லூரி அபிவிருத்தி வேலைகட்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஸ்ரீ சோமாஸ் கந்நதக் கல்லூரியமைந்துள்ள காணி புத்தூர் கொடிகாமம் சந்திக்கருகில் சற்று உட்புறமாக அமைந்துள்ளது. இக் காணியிலேயே மழவராயர் கந்தையாவினால் 1930ம் ஆண்டிலமைக்கப்பட்ட சோமஸ்கந்த ஆங்கில தமிழ் வித்தியாலயங்களில் மிக நீண்ட பிரமாண்டமான கட்டிடங்கள் அமைந்துள்ளன.

அவரால் 1930ம் ஆண்டுகளில் மிக நீண்டகட்டடங்கள் அமைக்கப்பட்டபோது, அதனைப் பார்த்துப் பலர் எள்ளி நகையாடினர். ஐம்பது அறுபது மாணவரே சேருவது அருமையாக இருந்த அவ் ஆரம்ப காலநிலையிலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் அமரக் கூடிய மிக நீண்ட மண்டபங்களையும், வகுப்பறைகளையும் சமைத்து அவரது தூர திருஷ்ட்டி நோக்கை வெளிப்படுத்துகின்றது. 1957ம் ஆண்டளவிலே ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களும் இன்று மூவாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களும் சோமஸ்கந்த கல்லூரியில் கல்வி பயில்கின்றனர். ஆயிரக்கணக்கான கல்லூரி மாணவர்கள் ஒருங்கேயிருந்து பார்வையிடக்கூடிய நீண்ட கல்லூரி மண்டபம், புத்தூர் பிரதேச மக்கள் பின்னால் ஆயிரக்கணக்கில் கூடியிருந்து களியாட்டவிழாக்களைக் கண்டுகளிக்க கூடியவிதத்தில் மிகச்சிறப்பாகத் திட்டமிட்டு அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அதிபர் அலுவலகம், பாடசாலையலுவலகம், ஆசிரியர் அறைகள் ஆகியவற்றுடன் இணைந்து இம்மண்டபமும், அதே நீளத்திற்கு அமைக்கப்பட்ட வகுப்பு அறைகளும் நன்கு திட்டமிட்ட எதிர்காலத்தைக் கருதிற் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன இதனையொத்த வேறு இரு கட்டிடங்களும் தமிழ் வித்தியாலய உபயோகத்திற்காக அவரால் அமைத்து கொடுக்கப்பட்டன.

திரு. மழவராயர் கந்தையா அவர்கள் பொருட்செல்வத்திற்திளைத்தது போல் கல்விச் செல்வ மதிகம் பெற்றவரல்ல, இக்கட்டடங்கள் போடப்பட்ட காலத்தில் இவற்றைத் தகுந்த பொறியியலாளர் ஆலோசனை பெற்று அவர்களது மேற்பார்வையிற் செய்யுமாறு சிலர் ஆலோசனை வழங்கியதாகவும், அவற்றைப் பொருட்படுத்தாது தானே நேரில் நின்று ஒவ்வொரு அலுவல்களையும் கண்காணித்து, தாபகரே கட்டிடங்களை மேற்பார்வை செய்து, கட்டிமுடித்தாரென்று அறியக்கிடக்கிறது. கல்வி அதிகம் பெறாதபோதிலும் கந்தையா வள்ளலார் நவீனசிந்தனைகளும் செயற்பாடும் உடையவராகவேயிருந்தார். தன் வேலைகளை இலகுபடுத்த ஒரு இலிகிதரைக் கூட

அமர்த்திக்கொள்ளவோ, பெருமளவு பணத்தை வங்கிக் கணக்கூடாக வரவு செலவிடவோ முனையாது தானே தனித்த ஒருவராக நின்று இக்காரியங்களைச் சாதித்து முடித்தார். இதனால் அவரது திடநெஞ்சும், பரந்த அறிவும், அயரா உழைப்பும் கம்பிரமான கட்டிடங்களாக இன்றும் அவரது நினைப்பைத் தந்து கொண்டிருக்கின்றன, காணிகளிலும், கட்டிடங்களிலும் அவரது முயற்சியின் முத்திரையை அவதானிக்கலாம்.

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தலும்
ஆலயம் பதினாயிரம் நாட்டலும்"
அன்னயாவிலும் புண்ணியம் கோடி
ஆங்கோரேழைக் கெழுத்தறிவித்தல்"

என்பது பாரதியார் வாக்கு இம் மூவகை அறநிலையங்களையும் முறையே நிறுவி அதை குறை உறாது நிகழ்தலுக்கு வேண்டிய நிபந்தனைகள் அமைத்து கோடி புண்ணியமும் குன்றாபுகழும் பெற்றவர்கள் சிற்றம்பலம் மழவராயரும், அவர் மைந்தரான பெருங்கொடை வள்ளல் மழவ கந்தையாவுமே ஆவார். வையத்துள் வாழ்வாங்கு வாழந்தவர்கட்கு எடுத்துகாட்டாய் நின்று திகழ்பவர்கள் இப் பெரியார்கள் ஆவர். புத்தூர் பிரதேசத்தின் மத்தியில் அமைந்த புத்தூர் சிவன்கோவிலை கட்டி அதன் இயக்கத்துக்கு வழிவகுத்தவர். சிற்றம்பலம் மழவராயர் புத்தூர் மேறகில் தான் வசித்த இல்லத்தை அன்னசத்திரமாகி ஏழைகட்கும், வழிபோக்கர்கட்கும் அன்னதானம் வழங்க ஏற்பாடுகள் செய்தவர். அவர் மகன் கந்தையாவேள். நல்லூரின் மேற்கு வீதியில் இன்று திருஞானசம்பந்தர் ஆதீனம் அமைந்துள்ள காணியின் கட்டடமும் தர்மசாசன நன்கொடை கொடுத்தவரும் மழவ கந்தையா வேளே ஆவார். இன்னும் கதிர்காமம், செல்வசந்நிதி, திருக்கேதீச்சரம் போன்ற இடங்களில் மடங்களும் அன்னதான ஒழுங்குகளும் அவரால் செய்யப்பட்டது.

இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோல, பாரதி மேற்காட்டிய பாடலில் கூறியது போல கோடி புண்ணியம் தரும் ஏழைக்கெழுத்தறிவித்த. அவரது கல்வி பணியே ஆகும். அவரால் தாபிக்கப்பட்ட கல்விசாலை படிப்படியாக வளர்ந்து "ஏ" தரத்திலான உயர்கல்லூரியாகி புத்தூர் பிரதேசத்தில் வாழும் மாணவர்களுக்கு மாத்திரம் அன்றி அதன் அயலில் உள்ள பல கிராமங்களிலும் இருந்துவந்து வருடா வருடம் ஆயிரக்கணக்கில் வெளியேறும் மாணவர்களுக்கும் மகத்தான கல்விப்பணி ஆற்றிவருகின்றது. பல்கலைக்கழகம் சென்று உயர்கல்வி பெறவும், பல வித அரசாங்க உத்தியோகங்கட்கு சென்று பதவி பெற்று வாழ்வில் முன்னேறவும் மழவ கந்தையா வள்ளலிட்ட இவ்வித்தே பெரிதாக வளர்ந்து இவ் ஊரில் நடுவே அமைந்த உயர் பழமரமாகிப் பலர்க்கும் பரம்பரை பரம்பரையாக எழுத்தறிவிக்கும் உன்னத பணியாற்றி வருகின்றது.

உசாத்துணை நூல்கள்

1. மழவராயர் கந்தையாவின் தர்மசாசனம் 1 - 14
2. ஸ்ரீ சோமாஸ்கந்த வெள்ளிவிழா மலர் சோமாஸ்கந்த தோற்றமும் வளர்ச்சியும் முன்னாள் அதிபர் க. வீரசிங்கம் 97
3. ஸ்ரீ சோமாஸ்கந்த வெள்ளிவிழா மலர் "ஸ்ரீ சோமாஸ்கந்தா" ரி. முத்துசாமிப்பிள்ளை நியாயதுரந்தரர். முன்னாள் தர்மகத்தா சபைத் தலைவர்
4. சோமாஸ்கந்த வெள்ளிவிழா மலர். 115

அத்தியாயம் 5

பாடசாலை முயற்சிகள்.

1931ம் ஆண்டு சித்திரை மாதம் 22ம் நாளில் தொடங்கப்பட்ட சோமஸ்கந்த தமிழ் ஆங்கில பாடசலைகள் இரண்டும். பிரம்மஸ்ரீ சுந்தராச்சாரியர் பி. ஏ அவர்கள் தலைமையில் கல்விப்பணியை தொடங்கிய பின் ஆங்கிலப் பாடசாலையில் அதிபர் உட்பட 9 ஆசிரியர்களும், தமிழ் பாடசாலையில் 8 ஆசிரியர்களும் பணி புரிந்தனர். 1934ம் ஆண்டு பங்குனி மாதத்தில் பிரம்மஸ்ரீ சுந்தராச்சாரியர் பி. ஏ தமது உத்தியோகத்தில் இருந்து விலக உதவியாசிரியராய் இருந்த ஸ்ரீ. வே. கனகசபை தலைமை ஆசிரியராக 8. 7. 1936 வரை கடமையாற்றி இருந்தார். தமிழ் படசாலைத் தலைமை ஆசிரியராக திரு க. விசுவலிங்கம், திரு க. விசுவநாதரும், பின்னர் 1.8.1936ல் இருந்து பண்டிதர் க. மயில்வாகனமும் கடமை புரிந்தனர்.

1939ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆங்கில பாடசாலை அரசினர் உதவி நன்கொடை பெறமுடிந்தது. தமிழ் பாடசாலைக்கு அசினர் நன்கொடை பெறுவதில் சில தடங்கல்கள் இருந்ததால் யாழ்ப்பாணம் பெரிய கோர்ட் நீதிபதியின் உத்தரவுடன் R.E.D.S ன் மேற்பார்வையில் அது விடப்பட்டது. இவ் ஒழுங்கிலும் உதவி நன்கொடை பெறமுடியாததால் சைவ வித்தியாவிருத்தி சங்கத்தின் மேற்பார்வைக்கு தமிழ் பாடசாலை மாற்றப்பட்டு உதவி நன்கொடையும் பெற்றது. ஆங்கில பாடசாலையில் ஆரம்பகாலத்துத் தொடக்கம் பெற்ற "மற்றிகுசேலன்" வகுப்பு வித்தியாதரிசியின் அறிவித்தற்பிரகாரம் சில காலம் இடைநிறுத்தப்பட்டது. கனிஷ்ட பாடசாலைத் தராதரபத்திர வகுப்பே உயர்தரவகுப்பாக இருந்தது. இவ்வகுப்பு ஆரம்பிக்கப்பட்ட முதல் வருஷத்திலேயே இரு மாணவர் சோதனையில் சித்தியெய்தினர். 8.7.1936 திரு. பா. கதிரேசம்பிள்ளை ஆங்கிலப்பாடசாலைக்கு தலமை ஆசிரியராயினர் சில ஆண்டுகளில் இவர் நீக்கம். 1.1.1938ல் திரு. எஸ். தணிகாசலம் (பின்னர் வடமானில கல்வியதிகாரியாக இருந்தவர்) தலமையாசிரியராயினர். இவருடைய முயற்சியினால் (எஸ். எஸ் சி) சி. பா. த. பத்திரவகுப்புக்களும் நடத்தப்பட்டன. இவர் அரசாங்க சேவையில் சேரவே 6.3.1944ல் திரு. ச. வீரசிங்கம் அதிபராய் இருந்தார். திரு. ச. வீரசிங்கம் அதிபரும்: அவரது சாதனைகளும் திரு. வீரசிங்கம் அவர்கள் அதிபராக வந்த பின்னர் ஆங்கிலபாடசாலை மறுமலர்ச்சி அடைய ஆரம்பித்தது. மாணவர் தொகை தொகையாக பல ஊர்களில் இருந்தும் வரலாயினர் மாணவர்களுக்கு இலவச மதியபோசன ஏற்பாடுகளையும் இவர் செய்து வைத்தார் அதிபராய் இருந்த திரு. ச. வீரசிங்கம் அவர்களின் ஓயா உழைப்பினால் சீ. பா. த. ப (S.S.C) வகுப்பில் பரீட்சைக்கு தோற்றிய மாணவருள் திருவாளர்கள் எஸ். செல்லையா (தற்போது பிரதம கணக்காளர்) பொ. இளையதம்பி (தற்போது அதிபர் தரம் II) த. குமாரசாமி (ஆசிரியர்) ஆகியோர் பூரண சித்தியும் திரு.பி.இராசையா துணைசித்தியும் அடைந்தனர் திரு.எஸ். செல்லையா விசேட சித்தி எய்தினர் என்பது குறிப்பிடதக்கது.

இதுவே இக் கல்லூரியின் மாணவர் சி. பா. த. ப. வகுப்பில் சித்தி எய்திய முதன் முறையாகும் திரு ச. வீரசிங்கம் அதிபரின் மகன் திரு வி. ஆனந்தசங்கரியும் (தற்போதைய கிளிநொச்சி தொகுதி நாடளுமன்ற உறுப்பினர்) தமது ஆரம்ப கல்வியை தந்தையார் அதிபராக இருந்த இப் பாடசாலையிலேயே கற்றனர். திரு. ச. வீரசிங்கம் அதிபரின் சாதனைகள் கல்லூரி வரலாற்றுக்கு ஒளியூட்டின. திரு. சு. குமாரசாமி அதிபரும், அவரது சாதனைகளும்.

திரு. ச. வீரசிங்கம் அவர்கள் இளைப்பாறிய 1.1.1949ல் திரு .சு. குமாரசாமி பி. ஏ. (லண்டன்) அதிபராக பதவியேற்றார். இவரது காலத்திற்தான் கல்லூரி முன்னெப்போதுமடையாத பேர்உயார்ச்சியடைந்தது. கல்லூரி "ஏ" தரக் கல்லூரியாக உயர்ந்ததும் மாணவர் தொகை ஆயிரத்துக்கு மேல் பெருகியதும் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புக்கள் தொடக்கப்பெற்று மாணவர் பலர் பொறியியல், விஞ்ஞானம், கலைத்துறைகட்கான கல்வி பெற பல்கலைக்கழகம் சென்றதும் இவரது அயராத உழைப்பினாலும், சாதித்த வியத்தகு சாதனையாகும்.

1945ம் ஆண்டு மே மாதத்தில் ஸ்ரீ சோமஸ் கந்த தமிழ் வித்தியாலயமும் ஸ்ரீ சோமஸ்கந்த ஆங்கில வித்தியாலயமும் ஒன்றினைந்து ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி என்ற பெயரில் செயற்படத் தொடங்கியது. 1955ம் ஆண்டு பாடசாலையில் தரம் உயர்த்தப்பட்டு எச். எஸ். சி. வகுப்புக்கள் தொடங்குதற்கும் வித்தியாபதி அங்கிகாரமளித்தார். கல்லூரியின் தாபகர் இலட்சியங்களை நன்கு விளங்கிச் செயற்பட்ட அதிபராக திரு. சுப்பிரமணியம் குமாரசாமி போற்றப்படுகிறார். பௌதீகம், உயிரியல், இரசாயணம் ஆகிய விஞ்ஞான பாடங்களுக்கு தனித்தனி ஆய்வு கூடங்களும் நூலகம், மனையியற்கூடம், மரவேலைக்கூடம் ஆகியவற்றையும் பெரிதும் முயன்று அமைத்து செயற்படுத்தினர். மாணவரின் பலதுறை வளர்ச்சிக்கு வழகாட்டி வைத்தார். கல்லூரியின் விளையாட்டு மைதானத்தை மிக விஸ்திரமானதாக்கி பொலிவு பெறச்செய்தார். ஆரம்பபாடசாலை வகுப்புக்களில் இடநெருக்கடியை தவிர்க்க அயலிற்காணி வேண்டி சிரமதான முறையில் தானே முன்னின்று கட்டிடங்களை கட்டிமுடித்தார். கல்லூரி மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பயன்படக்கூடிய தேனீர்ச்சாலை ஒன்று அமைத்ததுடன், நீர்த்தொட்டி ஒன்று அமைத்து குழாய் நீர் மூலம் பாடசாலை வளவின் பலபகுதிகளிலும் குடிநீர் வசதி செய்வித்தார். தூரஇடங்களில் இருந்து வரும் மாணவர்கள் தங்கி கல்வி கற்ககூடியவாறு கல்லூரியில் விடுதிச்சாலை நிறுவி அதனை நல்ல முறையில் பரிபாலித்தார். கல்வித்துறையில் மாத்திரமன்றி விளையாட்டுதுறையிலும் மாணவரை ஊக்கி பல சாதனைகட்கு வழிகோலினார்.

திரு. குமாரசாமி அதிபராக பதவியேற்ற பத்து ஆண்டுகட்குள்ளேயே மாணவர் தொகை ஆயிரத்தை தாண்டியது. இவரில் 1/3 பகுதியினர் பெண்பிள்ளைகளாவர். 1956ல் 41 ஆசிரியர்கள் கடமைபுரிந்தனர். இவரில் 14 பட்டதாரிகளும், 16 பயிற்றப்பட்ட ஆசிரியர்களும், 8 தராதரபத்திரமுள்ள ஆசிரியர்களும் அடங்குவார். இதனைவிட மரவேலை, உடற்பயிற்சி, மனையியல், சங்கீத, சித்திர ஆசிரியர்களும் கடமைபுரிந்தனர்.

திரு. குமாரசாமி அவர்கள் 1949லிருந்து 1965 வரை சுமார் பதினேழு வருடங்கள் புத்தூர் பிரதேசத்தின் கல்வியபிவிருத்தியில் மகத்தான பணியாற்றினார். அவர் ஒரு கல்விமான் மாத்திரமன்றி சமூகசீர்திருத்தவாதியாக மதிக்கப்பட்டார் தத்துவங்களை போதிப்பதோடு நின்றுவிடாது அவற்றை சாதனையிற்காட்டும் செயல்வீரனாகவும் திகழ்ந்தார். கல்லூரி விடுமுறைகாலங்களிற் கூட பாடசாலையில் வந்து தங்கியிருந்து "என்கடன் பணிச்செய்து கிடப்பதே என்ற அப்பர் சுவாமிகளின் வழிநின்று கலைக் கோவிற்காக சரீரத்தை வருத்திச் சரியைதொண்டும் செய்துவந்தார்" கல்லூரியின் இரண்டாவது தாபகர் குமாரசாமியே என அவரது பிரிவுபாசரத்தின் போது போற்றி புகழப்பட்டார். இவரின் பின்வந்த அதிபர்களும் இவ்வளவு நீண்டகாலத்திற்கு நிலைத்து நிற்க முடியவில்லை. திரு.குமாரசாமியின் சாதனைகளில் ஒரு பகுதியைத் தானும் சாதிக்க முடிந்ததா என்பதும் கேள்விக்குரியதாகிறது.

திரு. சு. குமரசுவாமி அதிபர் அவர்கள் 1965 யூனில் பதவியிலிருந்து ஒய்வுபெற உதவியதிபராக விருந்த திரு வே. கனகசபை அதிபராகப் பணியாற்றினார். இவரது கடமை21.06.1965 லிருந்து 6.01.1966 வரை தொடர்ந்து திரு ஆ.மண்டலேஸ்வரன் தென்மராட்சி சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலிருந்து மாற்றம் பெற்று 07.01.1966 அன்று அதிபராகச் கடமையைப் பொறுப்பேற்றார்.

திருமண்டலேஸ்வரன் அனுபவம் மிக்க நிர்வாகியாக இருந்த போதும் பழைய மாணவர் சங்கமும் பெற்றோர் ஆசிரியர் சங்கமும் முரண்பட்டுக் கொண்டேயிருந்தன. பிரதம பகுதி ஓலைக்கொட்டில்கள் இவரது காலத்து நிரந்தர கட்டிடமாகமாறின 28.12.1970ல் அவர் இளைப்பாறிய பின் திரு நீ.மனோகரன் கடமைப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். இவர் குமாரசாமி அதிபர் காலத்து சிரேஷ்ட உதவி ஆசிரியராகவும் உபஅதிபராகவும் கடமையாற்றி பழைய மாணவர் பெற்றோரிடம் நன்கு மதிக்கப்பட்ட ஒருவராகத் திகழ்ந்தார் பின்னர் மட்டுவில் மகாவித்தியாலய அதிபராக 13.12.1973ல் இடமாற்றம் பெற்றுச் சென்றார்.

அடுத்து 13.12.1973 லிருந்து 25.05.1976 வரை தெல்லிப்பளையிலிருந்து திரு.எஸ்.பி.கனகசபாதி அதிபராகக் கடமை புரிந்தார். கல்லூரியின் வரலாற்றில் ஒளி பொருந்திய பக்கங்களாக இக் குறுகியகாலப்பகுதி கொள்ளப்படும். பாடசாலையின்மேற்கு புறமாக உள்ள காணிகள் வேண்டப்பட்டு மைதானத்தின் மேற்குப்புறமாக இடைநிலை வகுப்புகள்கான கட்டிடங்கள் போடப்பட்டன. புதிய விஞ்ஞான கூடமாடித் தொடர் கட்டப்பட்டது. பாடசாலை வளவு புதுப்பொலிவு பெற்று பேராதனைப் பூந்தோட்டம் போலாயிற்று பரீட்சை முடிபுகளிலும் மீளச் சாதனைகள் நிலைநாட்டப்பட்டன. திரு கனகசபாதி யாழ்மாவட்டத்தின் சிறந்த விஞ்ஞான ஆசிரியராக விருந்ததால் பாடசாலை உயர்தர வகுப்பு அனுமதி கோர மாணவர்கள் குவிந்தனர். மருத்துவ விஞ்ஞான பீடங்கட்கு தொகையான மாணவர்கள் பல்கலை அனுமதி பெற்றனர். துர் அதிஷ்டவசமாக திருகனக சபாபதி தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கு அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்றார். அவருடைய துர் அதிஷ்டம் அப் பாடசாலையிலும் நீடித்காது வெளி நாடு செல்ல நேர்ந்தது.

அடுத்துப் பாடசாலையின் பதில் அதிபராக கல்லூாயீல் கடமையாற்றிய திரு வி.சச்சிதானந்தம் 14.06.1976 தொடக்கம் 25.02.1977 வரையும் திரு சு.கனகராசா 25.02.1977 தொடக்கம் 04.10.1981 வரையும் கடமை புரிந்தனர். திரு சு. கனகராசா ஏழாலை சைவ மகாஜன வித்தியாலத்திற்கு இடமாற்றப்பட்டு அங்கு கடமையாற்றிய திரு. எஸ்.ஆர். சண்முகரத்தினம் 05.10.1981 தொடக்கம் கல்லூரி அதிபராகப்பொறுப்பேற்றார். இவர் குமாரசாமி அதிபர்காலத்து சிரேஷ்ட ஆசிரியாராகவும் விடுதிப் பொறுப்பாசிரியராகவும் கடமையாற்றி இருந்தவர் பழையமாணவர் சங்கத்தினர் இவரை விரும்பியழைத்து வந்த போதிலும் இவரது காலம் மந்த நிலையே தொடர்ந்தது அவர் இளைப்பாறிய பின்னர் திரு.நா. கணேச பிள்ளை 1986- 1989 வரையிலும் அடுத்து திருவே. சந்திர சேகரம் பிள்ளை 1989-1995 வரையிலும் அதிபர்களாகக் கடமையாற்றினர்.

1994,1995 காலப்பகுதியில் கொத்தணிப் பாடசாலை முறைதாபிக்கப்பட்டு ஸ்ரீ சோமஸ்கந்த அதிபரை தலைமையாக கொத்தணி அதிபராகக் கொண்டு புத்தூர்,

ஆவரங்கால் பிரதேசப் பத்துப் பாடசாலைகள் செயற்படத் தொடங்கின எனினும் இந்த கொத்தணி முறை இருவருடங்களில் ரத்துச் செய்யப்பட்டது.

20.11.1995ல் திரு சந்திர சோரம்பிள்ளை இளைப்பாற உபபதிபராக இருந்த திரு வ. ஆறுமுகம் அதிபராயினார். இக்கால பகுதியில் புத்தூர் பிரதேச மக்களும் ஸ்ரீ சோமஸ்கந்தாவும் தென்மராட்சியில் இடம் பெயர்ந்து மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்திலேயே பிற்பகல் பாடசாலையாக இயக்க வேண்டிய போர்க் கால சூழ்நிலை இருந்ததும் குறிப்பிடத்தக்கது. திரு வே. சந்திர சேகரம்பிள்ளை அதிபரின் பிரிவுசார விழாக் கூட மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்திலேயே நடாத்தப்பட வேண்டிய சூழலில் சமூகம் இருந்தது.

திரு வ. ஆறுமுகம் அதிபராக கடமையேற்றது சோமஸ்கந்தாவில் படித்து சோமஸ்கந்தாவில் அதிபராக கடமையாற்றிய முதலாவது பழைய மாணவராகும்.குமாரசாமி காலத்து பாடசாலை பௌதீக வளம் பற்றிய பழைய கனவுகள் இவரது காலத்தில் செயல்வடிவம் பெற்றன. பாடசாலையின் முகப்பு வளவு கொள்வனவு செய்யப்பட்டது. இதுவரை காலமும் தெற்கு நோக்கியிருந்த மழவராயர் கந்தையாவின் சிலை பிரதான வீதிக்கு அண்மையாக கிழக்கு நோக்கி வைக்கப்பட்டது. குமாரசாமி மணிமண்டபமும் அத்திவாரமிடப்பட்டு பூர்த்தியாகும் நிலைக்கு கொண்டு வரப்பட்டது. ஸ்ரீசோமஸ்கந்தப் பெருமானுக்கு தனி ஆலயம் அமைக்கப்பட்டது. திரு.ஆறுமுகம் சேவை நயப்பு மலரில் இவைபற்றிய விரிவான தகவல்களைப் பெறலாம். கல்வி அபிவிருத்தியிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டு பல்கலைக்கழக பிரவேசங்களும் தொடர்ந்தன. திரு.வ.ஆறுமுகம் 31-10-2006ல் ஓய்வு பெறப் பிரதியதிபராக இருந்த திரு.கு.வாகீசன் அதிபராகப் பணியினைத் தொடர்ந்தார். ஸ்ரீசோமஸ்கந்தன் சஞ்சிகை ஆறுமுகம் சேவைநயப்பு மலராக வெளிவந்தது. 14-11-2007ல் இவர் கரந்தன் இராமுப் பிள்ளை அதிபராக இடமாற்றம் பெற 07-03-2007ல் இருந்து திரு.இ.மகேஸ்வரதாசன் அதிபராக கடமையேற்றுச் சிறப்பாக செயற்பட்டார். ஆயினும் துர் அதிஷ்டவசமாக 22-01-2009ல் திடீர் சுகவீனமுற்று கடமையிலிருந்து ஓய்வுபெற வேண்டிய நிலைக்கு ஆளாகினார். பிரதி அதிபராக இருந்த செல்வி.சிவலீலாதேவி அதிபர் கடமைகளை செவ்வனே நிறைவேற்றி வந்தார். 09-07-2009ல் இருந்து புதிய அதிபராக திரு.இராஜமகேந்திரன் கல்விப் பகுதியினரால் இடமாற்றம் செய்யப்பட்டுக் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். இக்காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன. 16-06-2010ல் இருந்து புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரியில் மிக நீண்டகாலமாக ஒரே நிர்வாகத்திலில் இயங்கிய ஆரம்பப் பாடசாலை தனியாகப் பிரிக்கப்பட்டது. புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை என்ற பெயரில் புதிய அதிபர் திரு.கோ.குலராகவன் தலைமையில் தனியாக நிர்வகிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. கல்விப் பகுதியினர் நீண்ட அவதானிப்புக்களின் போது ஆரம்பப் பகுதி வகுப்புக்கள் மிகத் திறமையாகவும் செயற்திறனுடனும் தனித்து நிர்வகிக்கப்படுவதன் அவசியத்தை உணர்த்தியிருந்தனர். அதற்கு அமைவாகப் பாடசாலை நிர்வாகத்தில் மேற்படி மாற்றம் கல்வி அமைச்சினால் அமுலாக்கப்பட்டது. ஸ்ரீசோமஸ்கந்தா ஆரம்பப் பாடசாலை என்ற பெயரில் அது இயங்க வேண்டுமென பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினர் கோரிவருகின்றனர். கல்லூரித் தாபகர் அமரர் மழவராயர் கந்தையாவும் ஸ்ரீசோமஸ்கந்தா தமிழ் வித்தியாலயம் ஸ்ரீசோமஸ்கந்தா ஆங்கில வித்தியாலயம் என ஆரம்பத்திலிருந்து இரண்டாக இயக்கி வந்தார். 1954ஆம்

ஆண்டு மே மாதத்திலே இரண்டும் ஒரு சேர அமைத்து ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரியை ஒரே நிர்வாகத்தின் கீழ் வந்தது. மீண்டும் 2010இல் புத்தூர இந்து ஆரம்பப் பாடசாலை என பிரிந்து இயங்கி வருகிறது.

தற்போதய அதிபர் திரு.இராஜமகேந்திரன் காலத்து பாடசாலை இசுறுப் பாடசாலையாக அரசினரால் அறிவிக்கப்பட்டு வலிகாமம் கிழக்குப் பகுதியின் பிரதான பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. தேசிய பாடசாலைகள் என சென்ற அரசாங்கத்தால் சில பாடசாலைகள் மேன்மைப்படுத்தப்பட்டு வளங்கள் சேர்க்கப்பட்டது போல் தற்போதய மேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த சிந்தனையின் வேலைத்திட்டத்தில் முதற் கட்டமாக நூறு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு கிராமிய பாடசாலைகளாக வளப்படுத்தும் நோக்கு செயலாக்கம் பெறுகின்றது. நகரப் பகுதிப் பாடசாலைகள் போல கிராமப் பாடசாலைகளையும் உயர்ந்த தரத்திற்கும் சகல வசதிகட்கும் உட்படுத்தி தரமான கல்வி வாய்ப்புக்களை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். நகரப்பகுதி நோக்கி அதிக சனத்தொகை குவிவதை தடுப்பதும்,கிராமிய பாடசாலைகளிலிருந்து செல்லமுடியாத மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதும் இதன் இணை நோக்கங்களாகும். தரமான கல்வியுடன் உடல், உள நிலைகளை வளர்த்தெடுப்பதும், தரமான கல்வியை வழங்கி மனித வளத்தை அதன் திறமைகளை பௌதீக வளங்களால் பெருக்குவதன் மூலம் வளர்த்தெடுப்பதும் நோக்கங்களாகும்.முப்பத்தைந்து மில்லியன் ரூபாய் புதிய கட்டிட வளங்களை ஏற்படுத்த ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை விட அதிபர் ஆசிரியர்கள் தரமான கல்வி நிர்வாக மேலதிக பயிற்சிகட்கும் உள்வாங்கப்படுவர். இதற்கமைய திரு.இராஜமகேந்திரன் அதிபர் தலைமையில் வடமகாண ஆளுனர் கௌரவ G. A சந்திரசிறி 2010 புதிய கட்டிடத்திற்கான அத்திவாரக்கல் நாட்டினார். தற்போது மூன்று மாடிக் கட்டிடவேலைகள் பூர்த்தியாகும் தறுவாயில் உள்ளன.

தாபகரால் கட்டப்பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க கல்லூரிக் கட்டிட முகப்பு இடிக்கப்பட்டு புதிய கட்டிடம் எழும்புவது பழைய மாணவருக்கு மனவருத்தம் தரினும் காலத்தின் மாற்றத்தையும் கல்லூரியின் அபிவிருத்தியையும் கருத்திற் கொண்டு வளர்ச்சிப் பாதையில் காலடி வைப்பதும் தவிர்க்க முடியாததாகிறது.

தற்போது அதிபராக கடமையாற்றும் திரு.இராஸமகேந்திரன் சேவைக்காலத்திலும் தொடர்ந்தும் பல அபிவிருத்திகள் நிகழ்ந்து பாடசாலை தனது பழைய பெருமிதத்துடன் மிளிர வேண்டுமென பழைய மாணவர்களும் பெற்றோர்களும் நலன் விரும்பிகளும் எதிர்பார்க்கின்றனர். செந்தமிழ் மணமும் சைவத் திருமுறை மணமும் வீச சுந்தரப் புதுவை ஊரில் சோமஸ்கந்தனாய் அருளும் தெய்வம் மேன்மை கொள் நிலையை தர வேண்டுமெனப் பிரார்த்திப்போம்.

விளையாட்டுத்துறைச் சாதனைகள்

பாடசாலையின் கல்வித்துறையில் மாணவர் பலரைப் பல்கலைக்கழகப் பொறியியல், வைத்திய.விஞ்ஞான, கலைப்பீடங்களுக்கு அனுப்பிச் சாதனை புரிந்தது போல விளையாட்டுத்துறையிலும் சிறந்த சாதனைகள் நிலைநாட்டப்பட்டன. திரு.குமாரசாமி அதிபராகிவிருந்த காலத்திலே கல்விக்குக் கொடுத்த அதேயளவு முக்கியத்துவத்தை விளையாட்டுத்துறைக்கும் கொடுத்து ஊக்கமளித்திருந்தனர்.

மெய்வல்லுனர் போட்டிகள் பலவற்றில் கலந்து கொண்ட பாடசாலை மாணவர்கள், அடுத்த மூன்றாண்டுகட்கு மேலாக (1960,61,62) வலிகாமம் கிழக்குப் பகுதியின் முதல் தரசாம்பியன்களாக சாதனையிட்டி பாடசாலையையும் முதலிடத்தில் வெற்றிபெற வைத்தனர். யாழ்மாவட்ட போட்டிகளிலும், உயரம் பாய்தல், தடிமித்துப் பாய்தல், 100யார் ஓட்டங்களில் சாதனை வீரர்களாக திரு.எஸ்.சிவப்பிரகாசம், திரு.எஸ்.குணலிங்கம், திரு.எஸ.கனகரத்தினம் ஆகியோர் வெற்றியீட்டிப் பாடசாலையின் பெயரை விளையாட்டுத்துறையில் அகில இலங்கைரீதியிற் கொண்டு சென்றனர். பின்னர் இவ்விளையாட்டு வீரர்கள் பொலிஸ் இலகாவிற் சேரந்து பதவியிலுயர்ந்து முன்னணி வகித்தனர். ஆண்பிள்ளைகட்கான கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், கிரிக்கெட் பந்தாட்டம், ஆகியவற்றிலும் பாடசாலைக் குழுக்கள் ஈடுபட்டன. வேறு பாடசாலைகளுடன் போட்டியிட்டு முன்னணியில் நின்றன. பெண்பிள்ளைகட்கான கரப்பந்தாட்டம், நெற்போல் ஆகியவற்றில் பாடசாலை மாணவிகள் பங்குபற்றி பிறபாடசாலைகளுடன் போட்டி போட்டனர்.

கல்லூரி மன்றங்கள் கல்லூரியில் அதிபர் திரு.சு.குமாரசாமியின் காலத்திலேயே 1959ம் ஆண்டில் எச்.எஸ்.சி உயர்பாடசாலைத் தராதரப்பத்திர வகுப்புத் தொடக்கப்பட்டது. அவ் ஆண்டிலேயே உயர் வகுப்பு மாணவர் மன்றமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மாணவர் இடையே பேச்சு, எழுத்து, விவாத கலை ஆற்றல் வளர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் பங்குபற்றிய மாணவர்கள் பிற்காலத்து சிறந்த பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் மாறிப் பாடசாலையின் பெயரை மேலும் துலக்கினர். உதாரணமாக திரு.சு. கலாபரமேஸ்வரன் எம்.ஏ.கவிஞர் புதுவை இரத்தினதுரை(சாகித்திய மண்டல பரிசு பெற்றவர்) வானொலி எழுத்தாளர் கோப்பாய் சிவம், ஆகியோர் இத்தகைய பாடசாலை மன்றங்களிற் பங்குபற்றி சிறந்த பயிற்சி பெற்றனர்.

எஸ். எஸ்.சி. மாணவர்களின் ஆற்றலை வளர்க்கும் பொருட்டு மாதிரிப் பாராகுமன்றம் ஒன்றும் செயற்படுத்தப்பட்டது. இதில் மாணவர்கள் அரசாங்க கட்சி எதிர்கட்சி எனப் பிரிந்து ஜனநாயக பாராளுமன்றம் செயற்படும் முறையில் விவாதங்களை நடாத்தி விரிந்த அறிவு பெற வாய்பளிக்கப்பட்டது. ஆங்கில மொழிமூலம் வாய்பளிக்கப்பட்ன. போதனை நடந்த காலத்தில் இம் மன்றங்கள் ஆங்கிலத்திலேயே தமது மொழியாற்றலையும் விவாதங்களையும் வளர்க்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பாடசாலைக்கு வெளியிலிருந்து சிறந்த பேச்சாளர்கள் கலைஞர்களை இம்மன்றங்கள் அழைத்து மாணவரின் பரந்த அறிவு ஆற்றல்களை வளர்க்க உதவி வந்தன. தென்னிந்தியாவிலிருந்து வரும் பிரபல பேச்சாளர்களான திருவாளர்கள் கி.வா.ஜகநாதன், கி.ஆ.பெ.விசுவநாதன் முதலியோர் பாடசாலை மாணவ மன்றச்சிறப்புச் சொற்பொழிவாளராக வந்து மாணவர் அறிவை வளர்த்தனர். "கற்றலின் ஆயினும் கேட்க" என்ற வள்ளுவர் வாய்மொழியை அதிபர் ஆசிரியர் நன்குணர்ந்த மாணவமன்றங்கட்கு இவ்வழியில் உறுதுனை புரிந்தனர்.

பாடசாலையின் வருடாந்த இல்ல வியைாட்டுப்போட்டிகட்காக மாணவர்கள் நான்கு இல்லங்களாகப் பிரிக்கப்பட்டனர். மழவராயர் இல்லம், கந்தையா இல்லம்,

தில்லைநாதர் இல்லம், பொன்னம்பலம் இல்லம் எனப் பெயரிடப்பட்டன. மழவராயரும் கந்தையாவும் கல்லூரி தாபகர்கள்,தில்லைநாதரும், பொன்னம்பலமும் கல்லூரியின் திரஸ்திச் சபை முகாமையாளராக கடமையாற்றியோரவர். மழவராயர் இல்லம் பச்சை, கந்தையா இல்லம் மஞ்சள், தில்லைநாதர் இல்லம் சிவப்பு, பொன்னம்பலம் இல்லம் நீலமும் நிற வண்ணமாகப் பெற்றன. வருடாந்த விளையாட்டுத்துறை மெய்வல்லுநர் போட்டிகளிலும், பரிசளிப்பு விழாவுக்கான பேச்சு, எழுத்து, கட்டுரைப்போட்டிகளிலும் மாணவர்கள் இந்த நான்கு இல்லங்களிலும் சார்பிலும் கலந்து போட்டி மனப்பான்மையில் பல நற்காரியங்களை சாதித்ததுடன் நற்பழக்கங்களையும் கற்றுக்கொண்டனர்.

கல்லூரி சார் வெளி மன்றங்கள் – பெற்றார் ஆசியர் சங்கம்

கல்லூரி சார் வெளி மன்றங்களாக பெற்றார் ஆசிரியர் சங்கம், பழையமாணவர் சங்கம் ஆகிய இரண்டையும் குறிப்பிடலாம். இவ்விரு சங்கங்களும் அதிபராகவிருந்த திரு.சு.குமாரசாமி அவர்களின் பெருமுயற்சியாலேயே ஆரம்பித்துவைக்கப்பட்டது. இவை இன்று நல்லமுறையில் இயங்கிப் பாடசாலை நிர்வாகத்திற்கும் உதவியாகச் செயற்பட்டு வருகின்றன. பெற்றார் ஆசிரியர் சங்கம் முதல்முதலாக 1960ல் பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டதுடன் தொடக்கப்பெற்றது. அதன் முன் சோமாஸ்கந்தக் கல்லூரி முகாமைச்சபையின் கீழமைந்த உதவி நன்கொடைபெறும் பாடசாலையாகவிருந்ததால் பெற்றார் சங்கத்தில் அதிக அக்கறை காண்பிக்கப்படவில்லை. மாணவர்களின் நலன்கருதி வருடத்தின் குறிப்பிட்ட தினங்களில் பெற்றார் ஆசிரியர் பொதுக் கூட்டங்களிற் கலந்து கலந்துரையாடுவதும், கல்லூரியின் பரிசளிப்புவிழா, விளையாட்டுப் போட்டி போன்ற நிகழ்ச்சிகளில் வேண்டிய இடத்துப் பெற்றார் ஆசிரியர் உதவியை பெற்றுக்கொள்வதும் இதன் நோக்கமாவிருந்தன. அதிபர்கள் ஒரு சிலரோடு கருத்துமுரண்பாடுகள் ஏற்பட்ட இடத்து இச்சங்கங்கள் நிர்வாகத்துக்கு "தலையிடி" ஆகவும் கருதப்பட்டதுண்டு. 1977ல் பதவி ஏற்ற ஜக்கிய தேசியக்கட்சியின் கல்வி அமைச்சர் 1981லிருந்து பெற்றார்-ஆசிரியர் சங்கங்கட்குப் பதில் பாடசாலை அபிவிருத்திச் சபைகளை தாபிக்க வழிசமைத்தனர். இதற்கமைய பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் பெற்றார் மாத்திரமன்றி நலன்விரும்பிகளும் இச்சங்கத்தில் அங்கம் வகித்தனர்.

பழைய மாணவர் சங்கம்

ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் வருடாந்தம் தமிழ் புது வருடப்பிறப்பையடுத்த சித்திரை இரண்டாம் தேதி கூடிக் கலந்துரையாடுவது வழக்கமாக இருந்து வருகின்றது. கல்லூரியின் பழைய மாணவர் பலர், பல்கலைக்கழக விரிவுரையாளர்களாக நிர்வாகதுறை அதிகாரிகளாக விளங்குவதுடன், சட்ட வைத்திய, பொறியியல் ஆசிரிய துறைகளில் பிரபலம் பெற்று விளங்கினர். பாடசாலைக்கு வேண்டி கட்டிடம் மொன்றையும் திறந்தவெளியரங்கு ஒன்றையும் அமைத்துக்கொடுத்துள்ளனர்.

பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையினரும் பாடசாலையின் நிர்வாகத்துக்கு பல வழிகளில் உதவிபுரிந்து வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் சங்கம்

காலத்துக்குகாலம் ஆசிரியர் நலன்களை கவனிக்கும்முகமாகவும், கல்லூரி நிர்வாகத்தில் அதிபருக்கு உதவும்முகமாகவும் ஆசிரியர் நலன்புரிச் சங்கங்கள் கல்லூரியில் செயற்பட்டு வந்தன. கல்லூரி ஆசிரியர்கள் ஒய்வு இடமாற்றம் அதிபர் ஒய்வு இடமாற்றம் பாடசாலையின் பல்வேறு விழாக்கள் ஆகியவற்றில் இச்சங்கம் பாடசாலையின் கௌரவத்தை நிலைநாட்டி வந்துள்ளது. அந்தக் காலப்பகுதியில் செயலாளர் பொருளராக செயற்பட்டு கல்லூரி விழாக்களில் மேன்மையான தொண்டாற்றியுள்ளனர். இதன் அங்கத்தவராக இருந்து ஒத்துழைப்பு நல்கிய ஆசிரியப் பெருமக்களுக்கு வரலாறு நன்றி கூற கடமைப்பட்டுள்ளது.

1931ம் ஆண்டிலிருந்து அதியர்கள் பட்டியல்

1. பிரம்மஸ்ரீ சு.சுந்தராச்சாரியார் B.A
2. திரு.வே. கனகசபை B.SC.(கல்கத்தா)
3. திரு.பா.கதிரோம்பிள்ளை 1936
4. திரு.எஸ் தணிகாசலம் 1938
5. திரு.ச.வீரசிங்கம் 1944
6. திரு.சு. குமாரசாமி 1949- 1965 B.A (London)
7. திரு.வே.கனகசபை 1965
8. திரு.ஆ.மண்டலேஸ்வரன் 1966 B.SC
9. திரு.நீ.மனோகரன் B.A
10. திரு.எஸ்.பி கனகசபாபதி B.SC 1973-1976
11. திரு.பி.சச்சிதானந்தம் 1976
12. திரு.சு.கனகராசா B.SC 1977
13. திரு.எஸ். ஆர்.சண்முகரத்தினம் B.A 1981-1988
14. திரு.நா.கணேசபிள்ளை 1989-1990
15. திரு.வே. சந்திரகேரம்பிள்ளை B.SC 1990 - 1995
16. திரு. வ. ஆறுமுகம் B.SC 1995 - 2005
17. திரு. கு.வாகீசன் 2006
18. திரு. இ.மகேஸ்வரதாசன் 2007
19. செல்வி வடிவேல் சிவலீலாதேவி 2009
20. திரு. இ.ராஜமகேந்திரன் 09.07.2009லிருந்து

1931 லிருந்து 1954வரை ஸ்ரீசோமஸ்கந்தா தமிழ் வித்தியாலய அதிபர்
(1954லிருந்து 2010 வரை ஒரே கல்லூரியாகியது)

1. திரு.க.விசுவலிங்கம் 1931
2. திரு.க.விசுவநாதர் 1934
3. பண்டிதர்.க.மயில்வாகனம் 1936
4. பண்டிதர். பொ.பொன்னம்பலம் 1954

2010ல் புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை 1. திரு. இ. கோகுலராகவன்

உசாத்துணை நூல்கள்

1. சோமஸ்கந்தா வெள்ளி விழா மலர்- சோமாஸ்கந்த தோற்றமும் வளர்ச்சியும் முன்னாள் அதிபர் திரு.வீரசிங்கம்

அத்தியாயம் - 6

சமூக விளைவுகள்

சமூகத்திலேற்பட்ட பிறழ்வுகள்

புத்தூர் பிரதேசத்தில் இன்று நாம் காணும் சமூகப் பொருளாதார அமைப்புகள் இக்கல்லூரி தொடங்கப்பட்ட 1931ம் ஆண்டுகளின் முன்னர் மழவராயர் காலத்தில் காணப்பட்ட நிலையினின்றும் பிறழ்வடைந்து பல மாற்றங்களுடையதாகக் காணப்படுகின்றது. 1930ம் ஆண்டு வரை புத்தூர்ப் பிரதேசத்தின் சமூக அமைப்பு இறுக்கமான மானிய காலநிலப் பிரபுத்துவ பிடிக்குள் சிக்கியியிருந்தது. 1930ம் ஆண்டிலிருந்து 1955ம் ஆண்டு வரையான இருபத்தைந்தாண்டுகளுள் சமூக மாற்றங்கள் ஆங்காங்கே நிகழ்ந்து வந்தாலும் 1955ம் ஆண்டின் பின்னரே மிக வேகமாக சமூக மாற்றங்கள் புத்தூர்ப் பிரதேசத்திலமைந்ததாக் கொள்ள முடியும்.

1930ம் ஆண்டில் புத்தூர்ப் பிரதேசத்தில் உயர்கல்வி தொடரக்கூடிய பெரிய பாடசாலைகள் இருக்கவில்லை. பட்டினப் பகுதிகட்குச் சென்று கல்வி கற்கும் வசதிகள் பெரும்பாலானோருக்குக் கிடைக்காததால் நூற்றுக்குத் தொண்ணூறு சத வீதத்தினர் உயர் கல்வி பெறும் வாய்ப்போ, அரசாங்க உத்தியோகங்கள் பெறும் வாய்ப்போ, அற்று இருந்தனர். இப்பகுதியிலுள்ள சிறு பாடசாலைகளில் கல்வி பெறுவதுடன் பெரும்பாலானோரது பொதுக்கல்வி நிறைவு பெற்றது. சமூக அமைப்புக்களில் மாற்றம் ஏற்படுத்தக் கூடியளவிற்கு ஆரம்பக்கல்வி தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க முடியாது. உயர் கல்வி பெற்ற ஒரு சிலர் தமதுமுன்னேற்றங்களுடன் திருப்தி கண்டனரே தவிர சமூக மாற்றங்களையிட்டு சிந்திக்கவில்லை. 1930ம் ஆண்டு வரையான காலகட்டத்தில் புத்தூர் பிரதேசத்தின் சமூக அமைப்ப 19ம் நூற்றாண்டின் நிலமானிய சமூக அமைப்பின் தொடர்ச்சி எனின் மிகையாகாது.

1930-1955 வரையான இருபத்தைந்து ஆண்டுகளில் புத்தூர் பிரதேச சமூகத்தான மாற்றங்களை அடுத்து நோக்குவோம. 1931ம் ஆண்டில் ஸ்ரீ சோமஸ்கந்த வித்தியாலயம் தொடங்கிய பின் புத்தூர் பிரதேசத்தில் கற்றோர் தொகை சிறிது சிறிதாக அதிகரிக்கத் தொடங்கியது. உண்மையில் 1944ம் ஆண்டின் பின்னரே எஸ்.எஸ்.சி வகுப்புக்களில் மாணவர்கள் முதன் முதல் தேர்ச்சி பெற்று இலிதர் சேவை முதலிய அரசாங்க தொழில் வாய்ப்புக்களைப் பெற்று ஆங்கில நடையுடை பாவனைகளையும் ஒரு சிலர் பின்பற்றினர் சிலர் ஆசிரியர் பதவிகளைப் பெற்று கல்வித்துறையில் பணியாற்றினார். இத்தகைய எடுத்துக் காட்டுக்களால் உந்தப் பெற்ற பலர் தாமும் எஸ்.எஸ்.சி பரீட்சைகளில் சித்தி எய்தி இத்தகைய பதவிகளைக் கைப்பற்ற பெரிதும் முயன்று ஊர்ப் பாடசாலையை பயன்படுத்த விளைந்தனர். இதனால் மாணவர் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே சென்றது. பெருமளவு விவசாயிகள் வாழும் இப்பிரதேசத்துப்பெற்றோர் தம்பதிகள் காலையிலும் மாலையிலும் தமது தொழிலுக்கு உதவியாக்கிக் கொண்டே ஊர்ப் பாடசாலையில் கல்வி பெற அனுப்புவதும் வசிதியாக இருந்தது. பெருமளவு பிள்ளைகள் இத்தகைய காரணங்களால் கல்வி பெறவும், கல்வி சமூகத்தில் சிந்தனைத் தாக்கத்தை ஏற்படுத்தவும் பாடசாலை காரணமாயிற்று.

1955ம் ஆண்டை அடுத்த காலகட்டத்தில் புத்தூர் பிரதேசத்து அமைந்த சோமஸ்கந்தக் கல்லூரியில் இருந்து படித்து வெளியேறிய சமூகத்தில் நல்ல அந்தஸ்துடனும் மதிப்புடனும் வாழ்ந்தோர் தொகை அதிகமாயிற்று. இதனால் சமூகத்து வாழ்ந்த கற்றோரும், மற்றோரும் தம் பிள்ளைகள் பாடசாலை செல்ல வேண்டும் படித்து சமூக மதிப்பு பெற வேண்டும் என்ற சிந்தனையுடையவராய் வெகு சிரத்தையுடன் பிள்ளைகளைக் கல்விச் சாலைக்கு அனுப்பினர். எஸ்.எஸ்.சி வரையான கல்வியே 1959/60 வரை தொடர்ந்தாலும், அக்கால பாடத்திட்டத்திலிருந்த பிரான்சியப் புரட்சி, ருஷ்யப்புரட்சி முதலிய பாடக்கருத்துக்கள் மாணவரின் சிந்தனையைத் தாம் வாழும் சமூகத்துடன் ஒப்பு நோக்க வைத்தன. இத்தகைய பாடத்திட்டங்களால் மனஎழுச்சி பெற்ற மாணவர்கள் புத்தூர் பிரதேசத்தின் சமூக பொருளாதார துறைகளில் எஞ்சியிருந்த சென்ற நூற்றாண்டின் நிலமானிய பிடிகளில் மாற்றம் காணவிளைந்ததது வியப்பில்லை. இப்பாடசாலையில் பெற்ற கல்வி மட்டும் இப் பிரதேச சமூகத்தான மாற்றத்தை விளைவித்தது என திடமாக வரையறை செய்யாவிட்டாலும், நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தின் எச்சசொச்சங்கள் அடிவேரறுந்து போவதற்கு பொது மக்களின் கல்வி அறிவு அதிகரித்ததும் முக்கிய காரணி என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

புத்தூர் பிரதேச சமூகத்திலேற்பட்ட மாற்றங்கட்கு கல்வி மாத்திரமன்றி, நாட்டிலேற்பட்ட பொது மாற்றங்களும் காரணமாயின. சர்வசன வாக்குரிமை, பொதுத் தேர்தல்கள், கிராமசபைத் தேர்தல்கள், திரைப்படம், வானொலி, பத்திரிகை ஆகிய பொதுசனத் தொடர்பு சாதனங்களின் வருகை ஆதியனவும் சமூகத்தில் விரைவான மாற்றங்கள் ஏற்படப் பெரிதும் துணை நின்றன. ஆரம்ப காலங்களில் உயர் குலத்தோர் அங்கம் வகித்த புத்தூர் கிராம சபையில், காலப்போக்கில் இப்பிரதேசத்து வாழ்ந்த தாழ்த்தப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்தோரும் அங்கம் பெறத் தொடங்கினர். ஒடுக்கப்பட்ட இளைஞர்கள் துடிப்புடன் முன்னின்று இத்தகைய தேர்தல்கள் மூலம் தமது சமூக நிலையில் மாற்றங் காணத்தலைப்பட்டனர். சோமஸ்கந்தக் கல்லூரியிற் கூட ஒடுக்கப்பட்ட இனத்தவர்கள் அனுமதி பெறுவது ஒரு காலத்தில் முயற்கொம்பாக இருந்தது. ஆனால் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற பின் இந் நிலை மாற்றங் கண்டது. சாவசன வாக்குரிமை முதலிய ஏனைய காரணிகளின் தாக்கத்தால் சமூகத்திலேற்பட்ட பிறழ்வுக்கும், நிலமானிய சமுதாய உடைவுக்கும் பொது மக்கள் கல்வியும் பெரிதும் துணை நின்றதென்பதே பொருத்தமுடையதாகும். புத்தூர் பிரதேசத்தின் மழவராயர் கால நிலை மானிய சமூகம் மாற்றமுறுவதற்கு, இப் பிரதேசத்தமைந்த மழவராயரின் ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரியினாலளிக்கப்பட்ட கல்வி அறிவும் பெரிதும் துணைநின்றதை பல வழிகளில் நிரூபிக்கலாம்.

பொருளாதார அபிவிருத்தி

புத்தூர் பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தி மூலம் பொருளாதார அபிவிருத்தியும் ஏற்பட்டதை சமீபகாலங்களில் கண் கூடாக காணக்கூடியதாக உள்ளது. ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரியில் கல்வி பெற்றவர்கள் பல்வேறுவிதமான அரசாங்க தனியார் துறைத் தொழில்களைப் பெற்று சமூகத்திற் தமது பொருளாதார நிலையையும், அந்தஸ்தையும் உயர்த்திக் கொண்டனர். இதுவரை உயர் குடும்பங்களைச் சார்ந்த ஒரு சிலரே பெற்ற அரசாங்க உத்தியோகங்களைச் சாதாரண பாமரமக்களின் பிள்ளைகள்

தாம் பெற்ற கல்வி மூலம் பெற்றுக் கொண்டனர். ஊரில் அல்லது ஊருக்கு அருகில் உத்தியோகம் பெற்ற இளைஞர்கள் தமது மாதாந்த வருமானத்துடன் விவசாயம், வர்த்தகம் முதலிய உப தொழில்களிலும் தளரா முயற்சியுடன் பணத்தை சம்பாதித்தனர். இதனால் இதுவரை ஒரு சில குடும்பங்களிடையே சிக்கியிருந்த நில புலன்கள் படிப்படியாகப் பாமரமக்களின் கைகளுக்கும் மாறத் தொடங்கியது.

1970ம் ஆண்டுகளின் பின்னரே விலைவாசிகள் உயர்வு காரணமாக அரசாங்க தொழில் துறை பார்ப்போரின் சம்பளங்கள் செலவுக்கு போதுமான நிலை அல்லது இன்றைய நிலையில் செலவுக்கு போதாது கடன் வேண்ட வேண்டிய நிலை உருவாகியது.

ஆனால் 1950ம்- 70ம் ஆண்டுகட்கிடையில் அரசாங்க தொழிற் துறைகளில் மாதாந்த சம்பளம் பெற்ற ஆசிரியர்கள், இலிகிதர்கள், கிராம சேவையாளர் போன்ற உத்தியோகத்தர்கள், தமது மாதாந்த வேதனத்தில் அரைவாசிப்பகுதியை மீதப்படுத்தி சீட்டுக் கட்டுதல் போன்றவற்றினால் அவற்றை மூலதனமாக்கி காணி, பூமிகள் கொள்வனவு செய்தும், பெரிய வீடுகள் அமைத்தும் கொண்டதை இப்பிரதேசத்தில் அவதானிக்க முடியும்.

புத்தூர் பிரதேசத்தில் முந்திய காலகட்டங்களில் மழவராயர் குடும்ப காணிகளை குத்தகையாகப் பெற்றுப் பயிர் செய்து வாழ்ந்த சில குடும்பங்களின் பிள்ளைகள், மழவராயர் பாடசாலையில் படித்து முன்னேறித் தொழில் வாய்ப்புக்களைப் பெற்று, கணக்காளர் முதலிய பதவிகளில் உயர்ந்து மழவராயர் குடும்ப காணி, பூமிகளை விலைக்கு வாங்கி சொந்தமாக்கிக் கொண்ட வரலாற்றுச் சாதனைகளை உதாரணங்கள் மூலம் எடுத்துக் காட்டமுடியும். எனவே ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரியின் கல்வி அபிவிருத்தி இப்பிரதேச மக்களின் பொருளாதார அபிவிருத்திக்கும் வழிவகுத்ததென்பதை மறுக்கமுடியாது.

பாடசாலை தொடங்கப் பெற்ற 1931ம் ஆண்டின் முன்னர், புத்தூர் பிரதேசத்தில் ஓரளவு சுய சிந்தனை செய்யக் கூடிய பொதுக்கல்வித் தராதரம் பெரும்பாலான பாமர பொதுமக்கட்கு கிடையாது. பாடசாலையின் அபிவிருத்தியோடு இப்பிரதேசத்தின் பொதுக் கல்வி பெற்றோரின் தொகையும் வருடாந்தம் அதிகரித்த வண்ணமே சென்றது. பொதுக் கல்வியை பயன்படுத்தி அரசாங்க உத்தியோகத்தைப் பெற்றோர் அதிகரித்தது மாத்திரமன்றி வேறு பல பொருளாதார அபிவிருத்திகட்கும் கல்வியே அடிப்படையாக அமைந்தது. பெருந்தொகையான விவசாயிகள் வாழும் இப்பிரதேசத்தில் தாம் பெற்ற கல்வி அறிவைக் கொண்டு விவசாயத்தில் புது முறைகளைக் கையாளவும், நவீன இராசாயன உரவகைகளைப் பிரயோகிக்கவும், கமத்தொழில் இலாகா, விவசாய அபிவிருத்திக் கந்தோர், இலங்கைவங்கி, மக்கள் வங்கி ஆகிய நிறுவன ரீதியான தொடர்புகளை அதிகரிக்கவும் கல்வி அறிவு பெரிதும் உதவி நின்றது. முந்திய சந்ததி விவசாயிகளைப் போலன்றி புதிய சந்ததியினர் குறைந்த நிலத்தில் கூடிய விளைச்சல் பெற கல்வியறிவும் பெரிதும் துணை நிற்பதை அவதானிக்கமுடியும்.

ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியில் பெற்ற கல்வி அறிவின் காரணமாகப் பல்வேறுவிதமான தொழில்களில் ஈடுபட்டு தமது பொருளாதார நிலையை வளப்படுத்தப்

புதிய சந்ததியினர் முயன்று வருவதனையும் குறிப்பிடமுடியும். பல்வேறு இயந்திரங்களின் சாரதிகள் தொழில்நுட்பவியலாளர், மெக்கானிக்மார், பஸ் கண்டக்டர்கள், மின்சாரத்துறை தொழிலுநர் முதலிய நவீன தொழில்துறைகளிலும் பாடசாலையின் பழைய மாணவர் பலர் செறிந்துள்ளமையைக் காணமுடியும் அடிப்படைக் கல்வியறிவும் தொழிற் பயிற்சியும் தேவைப்படும் இத்தகைய தொழில்களில் மாணவர் சென்று முன்னேற சோமாஸ்கந்த கல்லூரி அளித்த பொதுக் கல்வியே மூலதனமாக அமைந்ததை மறுக்கமுடியாது. எனவே பல துறைகளில் நவீன தொழில் வாய்ப்புக்களைப் பெற்று தமது பொருளாதார வளத்தைப் பெருக்க பாடசாலைக் கல்வி உதவியது.

அறிவியற் தாக்கங்கள்

புத்தூர் பிரதேசத்திலும் அதன் அயற் கிராமங்களிலும் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியில் படித்து பின்னர் பட்டம் பெற்றும், தொழிநுட்ப பயிற்சி பெற்றும் சமூகத்தில் முன்னனி வகிக்கும் பல்துறைசார்ந்த பிரமுகர்களின் பட்டியல்.

நாடாளுமன்ற உறுப்பினர்-

திரு.வி.ஆனந்தசங்கரி, கிளிநொச்சி

மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர்-

திரு.க.சின்னத்துரை, ஆவரங்கால் புத்தூர்

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்-

கலாநிதி து.வினாயகலிங்கம் (நீர்வேலி) பொறியியல் துறை பேராதனைப் பல்கலைக்கழகம்
கலாநிதி.வி. தெய்வேந்திரம் (கோப்பாய்) பொறியியல் துறை பேராதனைப் பல்கலைக்கழகம்
கலாநிதி.இ.இலகுப்பிள்ளை விஞ்ஞானம் (ஆவரங்கால்) (கனடா பல்கலைக்கழகம் ஒன்றில்)
கலாநிதி.க.குணசிங்கம் (நவற்கிரி) (வரலாற்றுத்துறை தற்போது அமெரிக்காவில்)
கலாநிதி, எஸ். பாலசுப்பிரமணியம் (நவற்கிரி) வைத்தியபீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
கலாநிதி ப.புஷ்பரத்தினம் பேராசிரியர் வரலாற்றுத்துறை
கலாநிதி க. சிவானந்த மூர்த்தி பேராசிரியர் மெய்யியல்
கலாநிதி தி. வேல்நம்பி பேராசிரியர் முகாமைத்துவம்
உலக வங்கி நிதி ஆலோசகர்:- திரு.ஐ. இரங்கநாதன் கணக்காளர்
(புத்தூர் மேற்கு) நிர்வாகத்துறை
திரு.கே.சண்முகலிங்கம் சீ.ஏ.எஸ் திட்டமிடல் அமைச்சு உதவி இயக்குநர் (அச்சுவேலி)
திரு.எஸ்.தயாபரன் சீ.ஏ.எஸ் உதவி அரசாங்க அதிபர் (அச்சுவேலி)
திரு.தா.வேல்நம்பி சீ.ஏ.எஸ் இளைப்பாறிய தீவுப்பகுதி உதவி அரசாங்க அதிபர் (புத்தூர் கிழக்கு)
திரு.க.குகதாசன்.கணக்காளர் கொழும்பு மோட்டார் போக்குவரத்து திணைக்களம் (மட்டுவில்)
திரு.கா.கனகரத்தினம் இலங்கை வங்கி பொது முகாமையாளர்
திரு.சு.கலாபரமேஸ்வரன் எம்.ஏ யாழ்மாவட்ட குடும்பதிட்டமிடல் அதிகாரி (புத்தூர் மேற்கு)

பொறியியலாளர்கள்

திரு.வி.குலசிங்கம் (வாதரவத்தை) நிறைவேற்றுப் பொறியியலாளர், வடிகால்வாய்
திரு.செ.சின்னராசா (வாதரவத்தை) நிறைவேற்றுப் பொறியியலாளர்
திரு.எஸ்.சுப்பிரமணியம் (புத்தூர் கிழக்கு)

பொறியியலாளர்

திரு.ச.நவரத்தினராசவேல் (புத்தூர் கிழக்கு) நிறைவேற்றுப் பொறியியலாளர், வாழைச்சேனை.
திரு.ச. வல்லிபுரம் (ஆவரங்கால்)
திரு.எஸ். பாலசுப்பிரமணிய் (கோப்பாய்)

வைத்தியர்கள்

திரு.செ.இரத்தினராசா (வாதரவத்தை)
திரு.வி.பாலசுப்பிரமணியம் (அச்சுவேலி)
திரு.எஸ்.கணேசமூர்த்தி (அச்சுவேலி)
திரு.எஸ்கங்காதரன் (அச்சுவேலி)
திரு.கே.ஸ்ரீதரன் (அச்சுவேலி)
திரு.கே.மகேசன் (புத்தூர் கிழக்கு)
திரு.கே.சிவஞானசூரியார் (சிறுப்பிட்டி)
திரு.கே.கிருஷ்ணராசா (சிறுப்பிட்டி)

வழக்கறிஞர்கள்

திரு.எஸ்.சிவராசசிங்கம் பி.ஏ (புத்தூர் கிழக்கு) நியாயத்துரந்தார், கொழும்பு
திரு.எஸ்.கணேசன் பி.எஸ்சி (புத்தூர் கிழக்கு) நியாயத்துரந்தார், கொழும்பு
திரு.வி.கணபதிப்பிள்ளை (அச்சுவேலி) நியாயத்துரந்தரர்.
திரு.ச.லோகேஸ்வரன் (புத்தூர் கிழக்கு) நியாயத்துரந்தரர்.
திரு.கே.விக்கினேஸ்வரன் (புத்தூர் கிழக்கு) நியாயத்துரந்தரர்.
திரு.க.யோகநாதன் (மட்டுவில்) நியாயத்துரந்தரர்.
திரு.எஸ்.சிவனேசன் (புத்தூர் கிழக்கு) நியாயத்துரந்தரர்.
திரு.கா.விஸ்வநாதன் (அச்சுவேலி) நியாயத்துரந்தரர்.
திரு.கே.லோகநாதன் (அச்சுவேலி) நியாயத்துரந்தரர்.

கணக்காளர்கள்

திரு.எஸ்.செல்லையா (சிறுப்பிட்டி மேற்கு)
திரு.வே.கந்தசாமி (ஆவரங்கால்)
திரு.வே.சிவசுந்தரம் (ஆவரங்கால்)
திரு.கா.வீரசிங்கம் (மட்டுவில்)
திரு.செ.இராசதுரை (புத்தூர் கிழக்கு)
திரு.வி.குகதாசன் (மட்டுவில்)
திரு.ஐ.ரங்கநாதன் (புத்தூர் மேற்கு)
திரு.வி.தியாகராசா
திரு.எஸ்.சிவசுப்பிரமணியம்
திரு.கா.வீரசிங்கம் (அச்சுவேலி)

கல்வித்துறை நிர்வாகிகள்

திரு.தி.மாணிக்கவாசகர் (புத்தூர் மேற்கு) (முன்னாள் வடமாநில கல்வியதிபதி)
திரு.எஸ்.தணிகாசலம் முன்னாள் அதிபர் (வடமாநில கல்வியதிபதி)
திரு.பி.சிவகுருநாதன் (புத்தூர் மேற்கு) தென்மராட்சி கல்வியதிபதி
திரு.கே.பாலசுந்தரம் (ஆவரங்கால்) அதிபர், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

திரு.த.காசிநாதன் அதிபர் மட்டுவில் ம.வி
திரு.எஸ்.குமரகுருபரன் அதிபர் புத்தகலட்டி விஸ்னுவித்தியாலயம்
திரு.எஸ்.சற்குணசிங்கம் (சரசாலை) அதிபர் வவுனிக்குளம் ம.வி
தி.பொ.இளையதம்பி (சிறுப்பிட்டி) அதிபர் புத்தூர் பஞ்சசீல வித்தியாலயம்

யாழ் கல்வி வலயம்

திரு. T. ராஜலிங்கம்	பிரதிக் கல்விப் பணிப்பாளர்
திரு.ஐ.ஜெகநாதன்	விஞ்ஞானம்
திரு.வி.தானையா சமூகக்கல்வி	உ.க.ப
திரு.செ.விசுவலிங்கம்	தமிழ்
திருமதி.கௌரி முகுந்தன்	தமிழ்
திருமதி.வி.சாந்தநாயகி	சங்கீதம்
திரு.வே.பரிமேலழகபிள்ளை	ஆங்கிலம்
திரு.செ.தியாகராசா ஆங்கிலம்	உ.க.ப
திரு.இ.ரவீந்திரன்	(விஞ்ஞானம்) உ.க.ப
திரு.கா.சிவசுப்பிரமணியம்	ஆரம்பக்கல்வி
திரு.நா.சுவாமிநாதன்	ஆரம்பக் கல்வி உ.க.ப

பட்டதாரி ஆசிரியர்கள் பிற பதவியாளர்கள்

திரு.எஸ்.கந்தசாமி பி.ஏ	(இடைக்காடு)
திரு.கே.கந்தசாமி பி.ஏ	(இடைக்காடு)
செல்வி.கே.சோமசுந்தரம் பி.ஏ	(அச்சுவேலி)
திரு.எஸ்.வைகுந்தநாதன்	(இடைக்காடு)
திரு.சோ.விஸ்வலிங்கம் பி.ஏ	(புத்தூர் கிழக்கு) அதிபர்
திரு.கே.செல்லத்துரை பி.ஏ	(சரசாலை)
திரு.ஏ.இராசேந்திரம் பி.ஏ.	அச்சுவேலி
திரு.கே.பாலசுப்பிரமணியம் பி.ஏ	(அச்சுவேலி)
திரு.பி.சுந்தரராஜன் பி.ஏ	(சரசாலை)
திரு.எஸ்.சுந்தரலிங்கம் பி.ஏ.	(மட்டுவில்)
திரு.என்.கந்தசாமி	(இடைக்காடு)
திரு.க.மகாலிங்கம் பி.ஏ	(ஆவரங்கால்)
திரு.சி.சற்குணநாதன் பி.ஏ	(இடைக்காடு)
செல்வி.கே.சிவபாதமங்கை பி.ஏ	(இடைக்காடு)
செல்வி.கே.கமலாதேவி பி.ஏ	(இடைக்காடு)
திரு.க.சண்முகநாதன் பி.ஏ	(புத்தூர் மேற்கு)
திரு.என். சிற்றம்பலம் பி.ஏ	(இடைக்காடு)
திரு.த.துரைராசா பி.ஏ	(அச்சுவேலி)
திரு.வி.ஆறுமுகம் பி.எஸ்சி	(ஆவரங்கால்)
திரு.எஸ்.மட்றாஸ்மெயில் பி.ஏ	(சரசாலை)
திரு.க.ஞானலிங்கம் பி.ஏ	(சரசாலை)
திரு.வே.முருகையா பி.ஏ	(இடைக்காடு)
திரு.வே.இரத்தினம் பி.ஏ	(இடைக்காடு)

திரு.சி.சுந்தரலிங்கம் பி.ஏ	(இடைக்காடு)
க.இராஜதுரை	நிர்வாக உதவியாளர், பதில் A.G.A
திரு. தி. செந்தில்நாதன்	முகாமையாளர், இலங்கைவங்கி காங்கேசன்துறை
திரு.கா.வீரசிங்கம் பி.ஏ	(மட்டுவில்)
திரு.செ.விசுவலிங்கம் பி.ஏ	(புத்தூர் கிழக்கு)
செல்வி.கே.சிவகாமசுந்தரி பி.ஏ	(மட்டுவில்)
செல்வி.கே.சிவயோகதேவி பி.ஏ	(புத்தூர் மேற்கு)
திரு.ஆ.பொன்னுராசா பி.ஏ	(இடைக்காடு)
திரு.செ.சிவராசா பி.ஏ	(மட்டுவில்)
திரு.கே.ஸ்ரீதரசர்மா பி.ஏ	(மட்டுவில்)
செல்வி.க.இராசேஸ்வரி	(இடைக்காடு)
செல்வி.சு.சறோயினிதேவி	(அச்சுவேலி)
திரு.கே.பாலகிருஷ்ணன் பி.எஸ்சி	(அச்சுவேலி)
திரு.எஸ்.தில்லைநாதன் பி.எஸ்சி	(அச்சுவேலி)
திரு.என்.தில்லைச்சிற்றம்பலம் பி.ஏ	(புத்தூர் கிழக்கு)
திரு.பொ.சிவகுருநாதன் பி.எஸ்சி	(புத்தூர் மேற்கு)
திரு.மு.கணேசன் பி.ஏ	(புத்தூர் மேற்கு)
திரு.சி.மழவராயர் பி.ஏ	(புத்தூர் மேற்கு)
திரு.எஸ்.சண்முகநாதன் பி.ஏ.	(புத்தூர் மேற்கு)

இது 1982 வரை சிலர் தவறியிருக்கலாம். தயவு செய்து மன்னித்து விடப்பட்ட பெயர்களை மறு பதிப்புக்கு அறியத்தரின் நன்றி.

இலங்கையின் நாலாபக்கங்களிலுமுள்ள பாடசாலைகளில் கொழும்பு நோயல் கல்லூரி தொடக்கம் யாழ் சென்பற்றிக்ஸ் கல்லூரி வரை, புத்தூர் சேமஸ்கந்தாக் கல்லூரியின் பழைய மாணவர்கள் தலைசிறந்த கணித, விஞ்ஞான, கலைப்பட்டதாரி ஆசிரியர்களாகவும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களாகவும் கடமையாற்றுகின்றார்கள். இதனை விட நைஜீரியா, ஸாம்பியா முதலிய வெளிநாடுகளிலும் பட்டதாரி ஆசிரியர்களாகக் கடமையாற்ற சென்றோருமுள்ளனர்.

பொறியியல் துறை பட்டம் பெற்ற பொறியியலாளர்களை விட, அநேகர் தொலைத்தொடர்புப் பகுதி, நீர்ப்பாசன இலாகா, மின்சார இலாகா போன்றவற்றில் தொழில்நுட்ப உதவியாளர்காகக் கடமைபுரிகின்றனர்.

வைத்தியத் துறையில் பலர் மருந்தாளர்களாகவும், (ப்ரமிஸ்ட்) எக்ஸ் கதிர்நுட்பவியலாளர்களாகவும் கடமையாற்றி வருகிறார்கள். மருத்துவ மாதர்களாக (நேர்ஸ்) கடமைபுரிபவரும் பலர் உளர்.

அத்தியாயம்-7

மதிப்பீடு

புத்தூர் பிரதேசத்தின் கல்வியபிவிருத்தியில் மழவராயரின் பங்கு என்ன?

புத்தூர் பிரதேசத்தில் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி தொடங்கப்படுவதற்கு முன் மழவராயர் காலத்து சமூக பொருளாதார கல்வி நிலைகளை தற்போதய நிலைகளோடு ஒப்பீட்டு ரீதியில் நோக்கும் போது பாடசாலையினால் வழங்கப்பட்ட கல்வியின் தாக்கம் எவ்வளவு தூரத்திற்கு மாற்றங்களையுண்டு பண்ணியுள்ளதென்பதை விளங்கிக் கொள்ளலாம். பாடசாலையினால் அளிக்கப்பட்ட கல்வி தான் இத்தகைய மாற்றங்கள் எல்வாவற்றிற்கும்முழுமுதற் காரணி என ஏக போகஉரிமை பாராட்ட முடியாவிட்டாலும், பொதுவாக நாட்டிலான தேசிய மறுமலர்ச்சியும் இயக்கமும், வாக்குரிமை, பொதுசனத் தொடர்பு சாதனங்கள், திரைப்படங்கள் முதலியவற்றின் தாக்கமும் புத்தூர் பிரதேச பொதுமக்களை விரைவான மாற்றங்கட்கு ஆளாக்கின. மேற்கண்ட காரணிகளோடு இணைந்த தலையாய காரணியாக மழவராயரால் தொடங்கப்பெற்ற சோமஸ்கந்த வித்தியாலயத்தின் கல்வி வளர்ச்சியைக் கூறமுடியும்.

சமுதாய நிலை (அன்றும் இன்றும்)

19ம் நூற்றாண்டிலும் 20ம் நூற்நாண்டிலும், 20ம் நூற்றாண்டில் ஆரம்ப தசாப்தங்களிலிருந்த புத்தூர் பிரதேசத்தின் சமுதாய நிலையினை இன்று காணமுடியாது. அன்றைய காலகட்டங்களில் ஒரு சில நிலப்பிரபுக்களும், ஏராளமான விவசாய குடியான வர்க்கத்தினரும் காணப்பட்டனர். இப்பிரதேசத்தின் நிலபுலன்கள் ஒரு சிலரின் ஆதிக்கத்திலேயே அன்று இருந்தன. ஆனால் இன்று பயிர் செய்யும் நிலங்களும், குடியிருக்கும் நிலங்களும் பெருமளவில் அல்லது ஏறத்தாழ ஐம்பது வீதத்திற்கு மேல் சாதாரண பாமர மக்களது கைக்குமாறிவிட்டது. பாமர மக்களின் பொதுக் கல்வி விருத்தியும், தளராத முயற்சியும், காரணமாக இந்நிலை சமூகத்திலேற்பட்டு வருகின்றது. நிலப்பிரபு வர்க்கம் என்ற ஒன்று இன்று காணமுடியாது கரைந்து வருகின்றது.

இன்று ஒருசிலரது காணிகளைக் குத்தகைக்கு செய்து வரும் குடியானவர்கள் கூட முன்னைய ஆதிக்கத்தின் பிடியுள் இன்று அடக்கி ஒடுக்கப்படும் நிலையைக் காணமுடியாது. காணி பூமிகட்கான குத்தகைப் பணத்தை வருடாந்தம் கொடுப்பதோடு அவர்களின் கடமை முடிந்து விடுகிறது. இன்றைய நிலையிற் கூலியாக ஒரு ஆளுக்கு ஒரு நாளைக்கு ரூபா ஆயிரத்துக்கு குறையாமல் எந்தக் காணி பூமி வைத்திருக்கும் சீமானும் கொடுக்க வேண்டியுள்ளது. கூலியாடகளை சிலவேளைகளிற் கெஞ்சியே வேலைத்தலங்கட்கு அழைத்துச் செல்ல வேண்டிய நிலை சமுதாயத்திலேற்பட்ட தலைகீழ் மாற்றத்தை எடுத்துக் காட்டத்தக்க உதாரணமாகிறது.

நிலப்பிரபுத்துவ சமுதாயம் படிப்படியாக இத்துப் போனதுடன், சமுதாயத்து இறுக்கமாக பின்பற்றப்பட்டு வந்த சாதிமுறையமைப்புக்களும் தாமாகவே தளர்ந்து செயலற்றுப் போய்விட்டன. புத்தூர் பிரதேசத்தின் அயற்கிராமங்களில் சிலவற்றில் சாதிப் பூசல்கள் மிக உக்கிரமாக சென்ற தசாப்தங்களில் நடைபெற்ற போதும்,

புத்தூரில் அத்தகைய தீவிர கிளர்ச்சிகள் இன்றி சமூகமாற்றங்கள் படிப்படியாக ஏற்பட்டு வந்துள்ளன. ஒரு சில நிலமானிய பிரபுத்துவ எச்சத்தினர்க்கு சமூகமாற்றங்கள் கசப்பான உண்மைகள் எனினும் இவற்றுக்கெதிராக அவர்களால் செயற்பட முடியாத கையாலாகாத நிலையிலேயே காணப்படுகின்றனர்.

ஒவ்வொரு மனிதனுக்குமான தனித்துவம் பேணப்பட்டு மக்கள் சமூகச்சார்புள்ள மக்களாக, காலப்போக்கிற்கேற்ப நடைபோட்டுச் செல்ல மழவராயரின் கல்விக் கூடமும் பெரும் பணியாற்றியதெனக் கூறின் அது மிகையாகாது. சமூகத்தில் வாழும் பொது மக்கள் தமது சக்தியைக் கண்டறியவும், அச் சக்தியை வளப்படுத்தி சமூகநலனுக்கு பயன்படுத்தவும், புத்தூர் பிரதேசத்தமைந்த பாடசாலை வழிகாட்டியாட்டியது. இப்பிரதேசத்தில் மனித சக்தி திறமையுடன் பயன்படுத்தப்பட்டு சமூக பொருளாதார வாழ்வு நிலைகள் உயர்ந்ததற்கு மழவராயரது சோமஸ்கந்தக் கல்லூரியின் பங்கு மிகப் பெரிதாகும். சாதிசமய வர்க்க முரண்பாடுகளிலும் ஒற்றுமை கண்டு இப்பிரதேசம் அமைதியாக முன்னேற மழவராயர் பாடசாலையினாலளிக்கப்பட்ட கல்வி பேருதவி புரிந்ததெனக் கூறுதல் பொருத்தமுடையதாகும்.

பொருளாதாரம் (அன்றும் இன்றும்) மதிப்பீடு

அன்றைய காலகட்டங்களில் புத்தூர் பிரதேசத்தின் சமுதாய பொருளாதார அமைப்பு முற்றிலும் நிலமானிய சமுதாய பொருளாதாரமாகவே காணப்பட்டது. ஒரு சில பிரபுக்களே நிலத்தை வைத்து குடியானவர்களின் உழைப்பைச் சுரண்டி குபேர சம்பத்துப் பெற்று வாழ பெருமளவு பாமரமக்கள் நாளாந்த உணவுக்காக அவர்க்கு அடிமை வேலைகள் செய்து திரியும் நிலையே அன்றைய சமுதாய பொருளாதார அமைப்பாக இருந்தது. ஆனால் இன்றைய சமுதாய பொருளாதார அமைப்பில் இந்நிலை முற்றிலும் மாறுபட்டதைக் காணலாம்.

பாமரமக்கள்தாம் பெற்ற பொதுக்கல்வியறிவைப் பயன்படுத்தி விவசாயத்திற் பெரும் லாபமீட்டி, தாம் குத்தகைக்கு பயிரிட்ட காணி பூமிகளையே விலைக்குப் பெற்றும் சொந்தமாக்கிக் கொண்டனர். தாம் பெற்ற பொதுக் கல்வியறிவின் காரணமாக அரசாங்க உத்தியோகங்களைப் பெற்றோர் தொகை பாடசாலை தொடக்கப்பெற்ற 1931ம் ஆண்டையடுத்த தசாப்தங்களில் படிப்படியாக அதிகரித்து தற்போது ஒவ்வொரு குடும்பத்திலும் அரசாங்க தனியார் துறை உத்தியோகத்தர்களைக் காணமுடியும். இவற்றால் அவர்கள் மாதாந்த நிலையான வருமானத்தைப் பெறும் வாய்ப்பை சோமஸ்கந்தக் கல்லூரியேயளித்ததென்பதில் சந்தேகமில்லை.

உள்ளூரில் தொழில் பார்ப்போர் தமது ஓய்வு நேரங்களைப் பயன்படுத்தி விவசாய முயற்சிகளிலும் வேறு வர்த்தக தொழில்நுட்ப முயற்சிகளிலும் திறமைக்கேற்ப ஈடுபட்டு மேலதிக வருமானத்தையும் பெற்று வருகின்றனர். உதாரணமாக மின்சார இலாகாவில் கடமையாற்றுவோர் தமது ஓய்வு நாட்களில் வீடுகட்கு தனிப்பட்ட மின்சாதனங்களைப் பொருத்துதல் (வயறிங் வேலை) போன்ற வேலைகளிலும், கூட்டுத்தானங்களில் இயந்திரம் பழுது பார்க்கும் தொழில் புரிவோர் ஓய்வு நேரங்களில் தமது வீடுகளில் பழுது பார்க்கும் வேலைகளைச் செய்தும் மேலதிக வருமானத்தைப் பெற்று தமது நிலையை பொருளாதார ரீதியில் பலமுறச் செய்துள்ளனர். இவற்றிற்கு அவர்கள் பெற்ற அடிப்படைக் கல்வியறிவே காரணமெனலாம்.

அன்றைய நிலமானிய அமைப்பில் பிரபு வர்க்கத்தவரே பணப்புழக்க முடையவராக இருந்தனர். ஆனால் இன்று அந்த நிலை மலையேறி, சாதாரண பொதுமக்களும் விவசாய வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டு பெருமளவு பணநோட்டுக்களை கற்றை கற்றையாகப் புழங்குவது சர்வ சாதாரணமாக மாறிவிட்டது. சாதாரண பாமரமக்களின் பிள்ளைகள் உத்தியோக ரீதியில் வங்கிக் காசாளராகவும், அரசாங்க சிறாப்பர்களாகவும் மாறி இலட்சக்கணக்கான ரூபாய் நோட்டுக்களை தினசரி எண்ண சோமஸ்கந்த கல்லலூரியளித்த கல்வியே அடிப்படை என்பதை எவரும் மறுக்கமுடியாது.

கல்வியின் நோக்கங்களில் ஒன்று வாழ்க்கைக்கு வழிகாட்டலாகும். இது பொதுவாக எல்லோராலும் ஏற்கப்படும் கருத்தாகும். தொன்று தொட்டு கல்வி இயலுக்கும், பொருளியலுக்குமான தொடர்பு காரணமாக கல்வி - விருத்திக்கு அடிப்படை என்ற கருத்தும் நிலவுகின்றது. புத்தூர் பிரதேசத்தில் மழவராயரினால் அமைக்கப்பட்ட பாடசாலையின் வளர்ச்சியோடு கல்வி விருத்தியுடன் இணைந்த பொருளாதார விருத்தியும் சாதாரண பொதுமக்களை உயர்மட்டத்திற்கு உயர்த்தியதென்பது கண்கூடாக காணப்படும் உண்மையாகும். சாதாரண விவசாய குடும்பத்தில் பிறந்து இக்கல்லூரியின் ஊடாக கல்வி பெற்று முன்னேறி கலாநிதிப்பட்டம் வரை பெற்றும், சாதாரண கல்வியுடன் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்று அங்கிருந்து பணம் அனுப்பி இங்கு நிலபுலன்களைத் தமது குடும்பத்தினர்க்கு வேண்டி, பெரிய நவீன வீடுவாசல்களை அமைத்து தமது சொந்த பொருளாதார நிலையை வளம்படுத்த உதவியது இக்கல்லூரியளித்த அடிப்படைக் கல்வி வளமே என்பதை பலரும் ஏற்றுக் கொள்வர்.

கல்வித்துறையில் நிபுணத்துவம் பெற்றோர் மாத்திரமன்றி, பொறியியலார், வைத்தியர்கள், தொழில்நுட்பவியலாளர், இன்னும் சாதாரண கல்வியறிவுள்ள இளைஞர்கள் கூட வெளிநாடுகள் சென்று, பெருந் தொகைச் செல்வம் சேர்த்து தமது சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்ள சோமஸ்கந்தக் கல்லூரி அளித்த கல்விச் செல்வமே அடிப்படையாக அமைந்தது.

கூட்டுமொத்தமாக நோக்கின் புத்தூர் பிரதேசத்தின் கல்வியபிவிருத்தியுடன் இணைந்த பொருளாதார அபிவிருத்திக்கு மழவராயரின் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியளித்த பங்கு மகத்தானது.

கல்வி நிலை (அன்றும் இன்றும்) மதிப்பீடு

புத்தூர் பிரதேசத்தில் மழவராயர் கந்தையாவினால் 1931ம் ஆண்டில் தொடக்கப் பெற்ற ஸ்ரீ சோமஸ்கந்த வித்தியாலயம் வளர்ச்சியடைந்து 1944ம் ஆண்டிலேயே முதன் முதல் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (எஸ்.எஸ்.சி) மாணவர்கள் சிலர் தோற்றித் சித்தியெய்தினர். அதுவரையிலும் இத்தகையதொரு உயர் பரீட்சை இப்பிரதேச பாடசாலைகளெதிலும் நடாத்தப்படவில்லை. அதன் முன் இப்பிரதேச மக்களில் நூற்றுக்கு தொன்னூறு சதவீதத்தினர் இத்தகைய கல்வித்தராதரம் அற்றவராகவேயிருந்தனர். 1944ம் ஆண்டின் பின்னர் தான் வருடாந்தம் இத்தொகை அதிகரித்துச் சென்றது. இன்று பெரும்பாலும் ஒவ்வொரு குடும்பத்துமுள்ள ஆண், பெண் பிள்ளைகள் O/L அல்லது A/L பத்திரப் பரீட்சைகளிற் தேறி அத்தகையதொரு தராதரப்

பத்திரத்துடனேயே காணப்படுகின்றனர். இவ்வளவு தூரம் சாதாரண பொது மக்களின் குடும்பங்களிலுள்ள பிள்ளைகளும் கல்வியறிவு பெற சோமஸ்கந்த வித்தியாலயமே காரணமாக அமைந்தது.

சமூகத்தில் உயர் மட்டத்திலிருந்தவர்க்கு ஒரு மேலதிக சொத்தாகவிருந்த கல்வி இன்று சாதாரண பொதுமக்களின் சொத்தாக மாறியுள்ளது. உயர் வர்க்கத்தவர் ஒரு சிலர் அன்று பட்டணப் பகுதிகட்கு சென்று உயர் கல்வி பெற்ற வாழ்வில் முன்னேறும் வாய்ப்புப் பெற்றனர். அத்தகைய வாய்ப்புக்கள் / சந்தர்ப்பங்கள் கிடையாததால் பாமரப் பொது மக்களில் தொன்னூற்றொன்பது சதவீதத்தினர் அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்தனர். மழவராயரால் தொடக்கப் பெற்ற சோமஸ்கந்த வித்தியாலயமே அவர்கள் வாழ்வில் கல்வி ஒளியேற்றும் கதிரவனாய் வழிகாட்டி ஒளி சேர்த்தது. உதாரணமாக புத்தூர் பிரதேசத்தில் அன்றைய காலகட்டத்தில் உயர்குடும்பத்தைச் சேர்ந்த பாரிஸ்டர் இராமநாதன் ஒருவரே உயர்கல்வி பெற்றுப் பின்னர் இங்கிலாந்து சென்று சட்ட அறிஞராக பாரிஸ்டர் பட்டம் பெற்றார். ஆனால் இன்று மழவராயரின் சோமஸ்கந்தக் கல்லூரியில் படித்து பின்னர் சட்டக் கல்லூரி சென்று வழக்கறிஞராக வந்தோர் பலர். பாமரமக்கள் பிள்ளைகள் பல்கலைக்கழகம் சென்று பொறியியலாளராக வைத்தியராக பட்டதாரிகளாக வெளிவர புத்தூர் பிரதேசத்தமைந்த சோமாஸ்கந்த வித்தியாலயம் அளித்த கல்வியே அடிப்படையாக அமைந்ததென்பது வெள்ளிடமலையாகும் புத்தூர் பிரதேச மாணவர்களை மாத்திரமன்றி அயல் கிராமங்களான புன்னாலைக்கட்டுவன் முதலிய பிரதேசத்திலிருந்து வந்த மாணவர்களுக்கும் வரமளித்த தெய்வமாக பெரும் புகழ் ஈட்டியுள்ளது.

பெண்கல்வியைப் பொறுத்தவரையில் புத்தூர் பிரதேச மழவராயர் பாடசாலை வளரும் வரை மிகப் பின் தங்கிய நிலையிலேயேயிருந்தது. பெண்கள் கல்விபராயத்தில் வெளிச்செல்லக்கூடாதென்ற சென்ற நூற்றாண்டின் மரபையே படிப்படியாக உடைத்தெறிந்து இன்று பிரதேச பெண்கள் பலர் பட்டதாரி ஆசிரியர்களாக வைத்தியராக தாதிமார்களாக இலிகிதர்களாக பலதுறைகளிலும் நுழைந்து முன்னேற இப்பிரதேசமைந்த சோமஸ்கந்த கல்லூரியே பெரும்பங்காற்றியது இப்பாடசாலை அமைந்திராவிட்டால் இப்பிரதேசத்து தொழில்பார்க்கும் பெண்கள் பலர் பட்டனப் பகுதிகளுக்குச் செல்லும் வாய்ப்புகளற்று இன்றும் அறியாமை இருளில் மூழ்கி முன்னைய சந்ததிப் பெண்கள் போல வீட்டோடு மாத்திரம் முடங்கியிருக்க நேர்ந்திருக்கும்.

பொதுக்கல்வி விருத்திக்கு பாடசாலை உதவியதிலும் பார்க்கப் பெண்கல்வி விருத்திக்கும் பாடசாலை பேருதவியாய் அமைந்ததால் சமூகத்தில் விரும்பத்தக்க நல்ல பலமாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டானது. புதுப்பெண் பற்றி பாரதி கூறியது போல "அச்சமும் நாணமும் நாய்கட்கு வேண்டுமாம்." என உரைத்து நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையுமாக கல்லூரி மாணவிகள் இன்று சைக்கிளில் பாடசாலை சென்று வரும் காட்சி பாடசாலை தொடங்கப் பெற்ற 1930ஐ அடுத்த காலகட்டங்களிற் கூட நினைத்தும் பார்க்க முடியாத கற்பனையாக இருந்திருக்கும். இவ்வாறான காட்சி ரீதியாகவும் கருத்து ரீதியாகவும் புத்தூர் பிரதேச பெண்கல்வி அபிவிருத்தியடைய மழவராயர் கந்தையாவினால் தொடங்கப் பெற்ற பாடசாலை பெரும் பணியாற்றியது.

புத்தூர் பிரதேசத்தில் இன்றைய சந்ததியில் நூற்றுக்குதொன்னூறு சதவீதத்தினர் பொதுக்கல்வியறிவுள்ளவராக படிப்படியாக வளர்ச்சி பெற்றமைக்கு

சோமஸ்கந்தக் கல்லூரியே பெருமளவு காரணமானது. எனவே பெண்கல்வியும் பொதுக் கல்வியும் பெருவிருத்தி பெற்று சாதாரண பாமர மக்களிடையே அறிவொளி பரப்பியது. அனையாத அமரதீபமாக ஸ்ரீ சோமஸ்கந்தா திகழுகிறது.

புத்தூர் பிரதேசத்தில் கல்விஅபிவிருத்தியில் மழவராயரது பங்கு எத்தகையது?

புத்தூர் பிரதேசதிதில் கல்விஅபிவிருத்தியில் மழவராயர் கந்தையாவின் பங்குஎத்தகையதென்பதில் அபிப்பிராய பேதங்கள் எழுவது இயல்பேயாகும். இப்பிரதேசத்தில் கல்வியபிவிருத்திக்கு ஒரு பாடசாலை அமைத்ததுடன் அவரது பங்கு முடிவடைந்துவிட்டது. பாடசாலையை வளர்த்துக் கல்வியை விருத்திசெய்தது தன்னலமற்ற ஒரு சில அதிபர்களும் காலத்தில் வந்து பணியாற்றிச் சென்ற திறமையும் ஆற்றலுமிக்க ஆசிரியர்களமேயென்பது ஒரு சாரரின் அபிப்பிராயமாகலாம்.

இத்தகையதொரு அபிப்பிராயத்துக்குச் சாதகமாக பெருமளவு நியாயங்களைக் காட்டக் கூடும். ஒரு திட்டத்தை என்ன நோக்கத்தோடு அதனைத் தாபித்தவர்கள் ஏற்பாடு செய்தாலும், அதன் இலக்குகளை இயங்கு நிலையில் மிகத் திறமையுடனும், விரைவாகவும், செயற்படுவது, செயற்படுவோரின் உளப்பாங்கிலேயே தங்கியுள்ளது. தாபகராகிய மழவராயர் கந்தையா மிக நீண்ட தர்மசாசனத்தில் தனது இலக்குகளையும், நோக்குகளையும் வரையறை செய்தாலும், அதனை திரிகரன சுத்தியோடு காரியசித்தி பெறவைப்பது பாடசாலையின் பிரதம நிர்வாகியாகிய அதிபரிலேயே தங்கியுள்ளது. திருவாளர்கள் வீரசிங்கம், குமாரசாமி, கனகசபாபதி ஆகிய அதிபர்கள் காலம் இக் கல்லூரி வரலாற்றின் ஒளி பொருந்திய பக்கங்களில் குறிக்கப்படுகிறதென்பதை பலரும் ஒத்துக்கொள்வர். இம்மூவரும் நீண்டகாலம் (பதினேழுவருடம்) பாடசாலையைத் தமது வீடாகக் கருதி வாழ்ந்து அல்லும் பகலும் அயராது உழைத்த அதிபர் குமாரசாமி இன்று இப்பகுதி மக்களால் தெய்வமாகப் போற்றிப் புகழத்தக்க பெருமை கொண்டுள்ளார்.

அதிபர் குமாரசாமியின் பங்கே கூடியதா?

புத்தூர் பிரதேசத்தின் கல்வியபிவிருத்தியில் மழவராயர் கந்தையாவின் பங்கிலும் பார்க்க, அதிபர் அமரர் சுப்பிரமணியம் குமாரசாமியின் பங்கே அதிகமானதென அபிப்பிராயம் தெரிவிப்போருமுள்ளனர். திரு.குமாரசாமி பி.ஏ (London) 1.1.49ல் பதவியேற்று பல அரியபணிகளை ஆற்றியிராவிட்டால், மழவராயரால் ஆரம்பிக்கப்பட்ட வித்தியாலயம், தொடர்ந்து அயல் கிராமங்களிலுள்ள சிறு பாடசாலைகள் போல ஒரு சிறிய வித்தியாலயமாகவே தொடர்ந்திருக்கலாம். இலங்கை முழுவதுமே பேரும்புகழும் பெறத்தக்க பெருமைவாய்ந்த கல்லூரியாக உருவாக்கிவைத்த பெருமை அமரர் குமாரசாமிக்கே உண்டென வாதிப்பதில் ஆதாரபூர்வமாக உண்மைச் சான்றுகள் பல உள.

திரு.குமாரசாமி அவர்கள் 1.1.49ல் பதவியேற்கும்போது சுமார் நானூறு மாணவர்களே கல்விபெற்றனர். 20.06.65ல் அவர் பதவியிலிருந்து ஓய்வுபெறும் போது இத்தொகை மூன்று மடங்காக அதிகரித்தது. இவர் பதவியேற்கும்போது மூன்றாம் தரப்பாடசாலையாக இருந்த சோமஸ்கந்தா "ஏ" தர்ப்பாடசாலையாக இவரது உழைப்பால் உயர்ந்தது. இவரது காலத்திலேயே பல்கலைக்கழக புகுமுக வகுப்புகள் தொடங்கப்பெற்றன. அக்காலகட்டத்தில் இப்பாடசாலையில் க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் சித்திபெற்ற வசதிபடைத்தோர் பலர் பல்கலைக்கழகம் புகவேண்டி

நகரப்பகுதிப் பாடசாலைக்குப் படையெடுத்தவண்ணமிருந்தபோது மாணவர்க்கு நம்பிக்கை ஒளியூட்டி இப்பாடசாலையிலிருந்தும் பல்கலைக்கழகம் செல்லமுடியுமென்பதனை சாதனையிற் காட்டிய செயல்வீரர் அமரர் குமாரசாமியோகும். அவரது காலத்திலேயே பெருந்தொகையானோர் இப்பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் சென்றதுடன், பல்கலையில் திறமையுடன் சித்தி பெற்று விரிவுரையாளர்களாகிக் கலாநிதிப்பட்டமும் பெற்று பாடசாலையை கௌரவப்படுத்தினர்.

தாபராகிய மழவராயர் கந்தையாவின் நோக்குக்களை நன்குபுரிந்து புத்தூர் பிரதேச மக்கட்கு ஏழை பணக்காரன் உயர்ந்தோர் தாழ்ந்தோர் எனப்பாகுபாடு காட்டாது சேவையாற்றினார். கல்லூரியைப் பலதுறைகளிலும் வளர்ச்சியடைச் செய்து கல்விச் சேவையாற்றி புத்தூர் பிரதேசத்தின் கல்வியபிவிருத்திக்கு உதவிய செயல்வீரன் குமாரசாமி என்பது வெள்ளிடமலை. மழவராயர் கந்தையாவிற்குச் சிலை எடுத்துப் பாடசாலை கௌரவித்தது போல தாபகரது இலக்குக்களை செயலிற் சாதித்த செம்மல் குமாரசாமிக்கு சிலை எடுத்து அவர்பேரில் மண்டபமும் ஒன்றைமைக்க பழைய மாணவர்கள் தீர்மானித்துச் செயற்பட்டு வருகிறார்கள். இம்முயற்சி அமரர் குமாரசாமியின் சேவை எவ்வளவு தூரம் மக்கள் மனதைக் கவர்ந்துள்ளதென்பதை எடுத்துக்காட்டப் போதுமான உதாரணமாகிறது.

புத்தூர் பிரதேசத்தில் கல்வியபிவிருத்தியில் ஆசிரியர் பலரின் பங்கே அதிகமானதா?

புத்தூர் பிரதேசத்தில் கல்வியபிவிருத்தியில் திரு.குமாரசாமி அதிபர் தனி ஒருவராக இந்தளவு சாதனைகளையும் புரிந்தது அசாத்தியமென்றும் கல்லூரியின் ஊடாக இப்பிரதேசத்தினது கல்வி அபிவிருத்திக்கு குமாரசாமி அதிபரோடு சேர்ந்து பணியாற்றிய ஆசிரியப் பெருந்தகைகளே காரணமென்றும் இன்னொரு கருத்து முன்வைக்கப்படுகிறது. தமிழ், சமஸ்கிருதப் பண்டிதர்கள், கலைவரலாற்றுத்துறை பட்டதாரி ஆசிரியர்கள், பயிற்சி பெற்ற தமிழ், விஞ்ஞான ஆசிரியர்கள் ஆகியோர் திரு. குமாரசாமியின் தலைமையை அங்கீகரித்து நன்கு மதித்து திறமையுடன் கூட்டாக செயல்பட்டதால் தான் பாடசாலை தொடக்கப்பெற்ற முப்பது ஆண்டுகட்குள் பல்கலைக்கழகத்திற்கு மாணவரை அனுப்புவது முதலாய சாதனைகளை வெகு விரைவிற் சாதிக்கமுடிந்தது என்ற கூற்றிலும் நியாயம் உண்டு. எனவே இப்பிரதேச கல்வி அபிவிருத்தியில் குமாரசாமி அதிபர் காலத்திலும் அதன் முன்பும், பின்பும் பணியாற்றிய திறமையும், தன்னலமற்ற சேவைமனப் பான்மையும் கொண்டு கடமையாற்றி ஆசிரியப் பெருந்தகைகளின் பங்கும் அளப்பரியதாகும்.

புத்தூர் பிரதேசத்தின் கல்விமான்களும் கற்றுத் தொழில் பார்க்கும் புத்திசீவிகளும், இன்றும் தம் ஆசிரியர்களின் கதைகளை சம்பவங்களை கூறி மகிழ்ந்து நன்றிபாராட்டுவதிலிருந்து ஆசிரிய சேவையின் மகத்துவத்தையும் நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

முகாமைச் சபையின் பங்கு எத்தகையது? (தர்மகர்த்தா சபை)

அதிபர் ஆசிரியர்களை விட தாபகரால் பராதீனப்படுத்தப்பட்ட பின்னர், காலா காலத்தில் தொடர்ந்து பணியாற்றிய முகாமைச் சபையினர்க்கு இப்பிரதேச கல்வி அபிவிருத்தியில் பங்குண்டா?

1931ம் ஆண்டில் மழவராயர் கந்தையா இவ்வித்தியாலயத்தை தொடக்கித் தொடர்ந்து 1934 வைகாசி பௌர்ணமி வரை ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் தாமே நேரடியாக மேற்பார்வை செய்தார். அக்காலத்து திரு.சுந்தராச்சாரியார் பி.எ அவர்கள் அதிபராக இருந்து தாபகருடன் இணைந்து செயலாற்றினார். சந்திரசூரியர் தமது கடமையில் தப்பினாலும் தாபகர் தமது நேர கால கடமைகளை வழுவாது செய்தார் என அதிபர் கூறியதிலிருந்து தாபகரின் கடமையையும், கண்ணியத்தையும் உணர்ந்து கொள்ளலாம்.

தாபகரின் மரணத்தின் பின்னர் தர்மபரிபாலன சபைத் தலைவரான சுன்னாகம் திரு.சு. பொனனம்பலம் அவர்கள் சிறந்த சேவையாளரும், மிகுந்த நேர்மையாளரும் எனப் பாராட்டப்படுகிறார். மழவராயர் சொத்துக்களை மேற்பார்வை செய்வதிலும், அதனை அவர் குறித்த தர்ம கல்வி பணிக்கு செலவு செய்வதிலும் தர்மகர்த்தா சபையே பொறுப்புடையதாக இருக்கின்றது. 1960ல் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதும், வள்ளல் கந்தையா கொடுத்த 52 காணிகளில் அரைவாசி அவர் சகோதரி குடும்பத்தைச் சார்ந்தோருக்கு திரும்ப ஒப்படைக்பகப்பட்டது. தர்ம சாசனத்திலிருந்து வருடாந்தம் பெறும் வருமானம் என்ன, அவை கல்லூரியின் எச் செலவுகட்கு உபயோகமாகிறது என்பதை பகிரங்கப்படுத்துவதால், இதுபற்றிய பொதுமக்கள் ஐயப்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். தற்போது அரசாங்க பாடசாலையாதலால் தர்மகர்த்தா சபையுள் பாடசாலை அபிவிருத்தி சபையினரும் பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகளும் சேர்த்துக் கொள்ளப்பட்ட நிர்வாகமாகவிருப்பதே சிறப்பானதாகவிருக்கும்.

புத்தூர் பிரதேசத்தில் **கல்வியபிவிருத்தியில் மழவராயர் கந்தையாவின் பங்கு** (முடிவுரை) முடிவாகத் தொகுத்து நோக்குமிடத்து மழவராயர் கந்தையா என்ற பெருவள்ளல் இப்பிரதேசத்தில் இத்தகையதோர் பாடசாலையைக் கட்டியெழுப்பாவிட்டால் அமரர் குமாரசாமி போன்ற செயல்வீரமிக்க அதிபர்கட்கோ, திறமையும் ஆற்றலும் படைத்த ஆசிரியர் குழுவுக்கோ களம் இல்லாது போயிருக்கும். புத்தூர் பிரதேசத்தின் மத்தியில் தகுந்ததோர் களம் அமைத்து தீர்க்கதரிசனத்துடன் எதிர்காலச் சந்ததியினர்க்கு உதவக் கூடிய பெரும் கட்டிடங்களை ஆக்கி வைத்து, தனது சொத்துக்களையும், வருமானங்களையும் அதற்காகத் தருமசாதனம் பண்ணி வைத்து கல்வியபிவிருத்தியின் அத்திவாரம் என்பது பொருத்தமுடையதாகும்.

கோபுரம் வானளாவ, உயர்ந்து வையத்தோரால் போற்றிப் புகழப்படுவதற்கு கண்ணுக்குத் தெரியாது நிலத்தின் கீழேயமைந்துள்ள அத்திவாரமே அடித்தளமாக நின்று தாங்குதல் போல புத்தூர் பிரதேசத்தின் கல்வியபிவிருத்தியில் மழவராயர் கந்தையாவின் பங்கே அடித்தளமென்பதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. தெய்வப் புலமைத் திருவள்ளுவர் கூறியது போல,

"தினைத்துனை நன்றி செய்யினும் பனைத்துனையா
கொள்வர் பயன் தெரிவார்"

என்ற குறள் மொழிக்கேற்ப தாபகரின் பங்கு சிறியதென வாதிடுவோர் கூட அதன்பயன் பெரிதென, வள்ளுவன் வழிநின்று பறைசாற்றுதலே பொருத்தமுடையதாகும்.

பரீட்சைப் பெறுபேறுகள்

க.பொ.த. உயர்தரம்

ஆண்டு	கலைத்துறை	விஞ்ஞானத் துறை	சித்தி மொத்தம்	சித்தி	3 பாடங்கள்
1959	—	3	3	—	—
1960	12	3	15	3	9
1961	19	3	22	3	3
1962	30	—	30	3	13
1963	24	7	31	4	7
1964	34	4	38	11	12
1965	34	4	38	8	9
1966	17	14	31	6	7
1967	—	18	18	2	1
1968	—	25	25	2	1
1969	—	—	—	—	—
1970	0	80	86	2	6
1971	6	30	86	3	—
1972	—	—	—	—	—
1973	8	27	29	01	6
1974	3	32	35	3	6
1975	3	53	56	6	5
1976	4	73	77	11	15
1977	13	86	99	18	11
1978	16	74	90	11	10
1979	25	109	134	14	13
1980	40	61	101	111	20
1981	41	81	122	24	14

1970 வரை மூன்று பாடங்களில் சித்தியெய்திய பலர் அனுமதி பெற்றனர்.

நூலாசிரியர்

புத்தூர் பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தியில் மழவராயரின் பங்கு என்ற இந்நூலின் ஆசிரியர் 1950 தொடக்கம் 1965 வரை புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக்கல்லூரியில் அரிவரி தொடக்கம் உயர் தரம் வரை கல்வி பயின்றார்.

புகழ் பூத்த அதிபர் சுப்பிரமணியம் குமாரசாமி காலத்தில் கற்று 1965ல் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான கலைத்துறை மாணவரில் ஒருவர். 1966-69 வரை பேராதனைப்பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர். உயர்தர வகுப்பில் கற்கும் போதே அதிபர் குமாரசாமி சேவை நயப்பு மலரில் சிறுகதை எழுதிப் பாராட்டுப் பெற்றவர். தொடர்ந்து சிறுகதை கவிதை என்பன புனைந்து பத்திரிகையிலும் வெளியிட்டவர்.

1971-76 வரை வன்னிப்பிரதேசத்தில் கூட்டுறவுத் துறையில் பொது முகாமையாளராகப் பணியாற்றியவர். 1976ல் நவம்பரிலிருந்து ஆசிரிய சேவையில் சேர்ந்து பூநகரி மகா வித்தியாலயத்தில், பளை மகா வித்தியாலயம் ஆகியவற்றில் உயர்தர வகுப்புக்களில் தமிழ், அரசியல் பாடங்களை கற்பித்தவர்.

1982 - 83 ம் ஆண்டுகளில் யாழ்பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா நெறியினைப் பயின்ற போது புத்தூர் பிரதேச கல்வி அபிவிருத்தி பற்றி ஆய்வுக்கட் டுரை எழுதினார். அதன் பிரதி தற்போது அச்சுப்பதிப்பாக வெளிவருகிறது.

1983 - 1995 வரை ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி ஆசிரியராக, பகுதித்தலைவராக, பாடசாலை அபிவிருத்திச்சபைப் பொருளாளராக, ஆசிரிய சம்மேளன தலைவராக பல கடமைகளைச் செய்து கல்லூரிக்கு உதவியவர்.

1995 - 2005 வரை யாழ் வலயக்கல்வி அலுவலகத்தில் தமிழ் மொழிக்கான ஆசிரிய ஆலோசகராகப் பணிபுரிந்து வலயமட்டத்திலும் சேவையாற்றி ஓய்வு பெற்றவர்.

க. ஸ்ரீஸ்கந்தராசா
செயலாளர், பழைய மாணவர் சங்கம்.

GURU PRINTERS, Thirunelvely.
021 222 8266